பைந்தமிழ்ச் சீர்பரவுவார்

ஆசிரியர்
டாக்டர் பூவண்ணன், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப்பேராசிரியர்,
து. கோ. வைணவக் கல்லூரி,
சென்னை-106

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
153/154, டி. டி. கே. சாலை, சென்னை-18
1987

1987 The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Limited

கிளைகள்:
சென்னை-108, திருநெல்வேலி-6, மதுரை.1
கோயமுத்தூர்-1, கும்பகோணம்-1, திருச்சிராப்பள்ளி-2
சேலம்-1

கழக வெளியீடு: ௧௮௫௬
முதற்பதிப்பு: 1987

031, lw M7
N87

PYINTHAMIZHCH SEER PARAVUVAAR

வெற்றி அச்சகம்
91, டாக்டர் பெசன்ட் ரோடு
இராயப்பேட்டை, சென்னை-14

பதிப்புரை

தமிழ்மொழியின் சீர் சிறப்புகளை அறிந்துகொள்ள வேண்டுமானால், தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் துறைபோய அறிஞர்களின் வரலாறுகளை எல்லாரும் ஓரளவு தெரிந்திருத்தல் வேண்டும்.

அத்தகைய அறிஞர்கள், கவிஞர்களாகிய நக்கீரர், அவ்வையார், மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார், நம்மாழ்வார், ஆண்டாள், கம்பர், அருணகிரி நாதர், குணங்குடி மஸ்தான், எச். ஏ. கிருட்டிண பிள்ளை, ஆறுமுக நாவலர், பெ. சுந்தரம் பிள்ளை ஆகியோரின் வரலாறுகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வகையிலும், இனிய எளிய தமிழிலும் எழுதியுள்ளார் இந்நூலாசிரியர் டாக்டர் பூவண்ணன் அவர்கள்.

நீண்ட வரலாறுகளைப் படித்தறிய நேரம் இல்லார்க்குக் குறிப்பாகக் கல்லூரி மாணவர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படத்தக்கது.

இதனை எழுதியுதவிய இந்நூலாசிரியர்க்குக் கழகத்தின் நன்றி என்றும் உரியது. தமிழ் அன்பர்கள், குறிப்பாக மாணவர்கள் இதனைப் படித்துப் பயனும் சுவையும் காண்பார்களாக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பைந்தமிழ்ச் சீர்பரவுவார்

1. நக்கீரர்

'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என்று கூறிய நாவுக்கரசு அரசனைக்கண்டும் அவனுடைய அதிகாரிகளைக் கண்டும் அஞ்சாத ஆண்மையாளர். அவரினும் சிறந்தவராக, ஆண்டவனை நேரில் கண்டும் அஞ்சாத மாவீரர் ஒருவர் இருந்தார். அவரே நற்றமிழ் வல்ல நக்கீரர். தமிழ்ப்பற்றுக்கும் தமிழ்ப் புலமைக்கும் தமிழ்ப் புலவரின் மாவீரத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குபவர் நக்கீரரே.

நக்கீரர் சங்க காலத்தே வாழ்ந்த தமிழ்ச் சான்றோர். இவருடைய வரலாற்றைத் தெள்ளிய முறையில் அறிய முடியவில்லை. எனினும் சில தனிப்பாடல்களும் திருவிளையாடற் புராணமும் கொண்டு ஒருவகையாக சில விவரங்களையும் நிகழ்ச்சிகளையும் அறியலாம், இவரது பெயரை, ஏட்டுச்சுவடிகள் ''மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்'' என்று குறிப்பிடுகின்றன. எனவே இவர் மதுரையில் வாழ்ந்து எண்ணும் எழுத்தும் கற்றுத் தரும் ஆசிரியப்பணியை மேற்கொண்ட கணக்காயரின் புதல்வர் என அறிகிறோம். ஒரு தமிழாசிரியர் பெற்ற புதல்வர் தமிழில் மிகச்சிறந்த புலமை பெற்றிருத்தல் இயல்பேயாம். இவரது இயற்பெயர் கீரர். நக்கண்ணையார், நப்பூதனார், நத்தத்தனார் என்னும் பெயர்களைப் போலச் சிறப்புப் பொருளைத் தரும் இடைச்சொல்

னாகிய 'ந' என்னும் அடைமொழியைக் கொண்டு நக்கீரனார் என வழங்கியது என்பர்.

ஒருமுறை மதுரைப் பட்டி மண்டபத்துள் நுழைந்த குயக்கொண்டான் என்பவன், நக்கீரர் முன்னிலையில், ''ஆரியம் நன்று; தமிழ் தீது'' என்று நா கூசாது பேசினான். இதைக் கேட்டு தமிழையே தம் உயிராகக் கொண்ட நக்கீரர் கடுஞ்சினம் கொண்டார். ''இந்த இழி மகனுடன் ஏதுக்கள் காட்டித் தமிழின் பெருமையை நிலைநாட்ட வாதிடுவதும் வீண்; இவன் இத்தமிழ் மண்ணில் வாழ்ந்திடுவதும் வீணே!'' எனக் கருதி, ஒருபாடல் பாடினார்.

முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி!
பரண கபிலரும் வாழி - அரணிய
ஆநந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆநந்தஞ் சேர்கசுவா கா.

நக்கீரர் வாக்குத் தப்பாது. ஆதலால் குயக்கொண்டான் அக்கணமே வீழ்ந்து மாண்டான். அதனைக்கண்ட சான்றோர் பலரும் மனமிரங்கி ''அறியாதான் பிழையைப் பொறுத்து அவனை உயிர்த்தெழச் செய்க'' என்று வேண்டினர். இவ்வேண்டுகோளால் சினம் தணிந்த நக்கீரர் மாண்ட குயக்கொண்டான் பிழைத்தெழ மீண்டும் பாடினார். குயக் கொண்டான் உயக் கொண்ட நக்கீரர் பாடல் இதுவே!

'ஆரியம் நன்று தமிழ்தீது' எனவுரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியின் அகத்தியனார் ஆணையினால்
செந்தமிழே தீர்கசுவா கா!

நக்கீரர் வாழ்வில் நடந்த இந்நிகழ்ச்சியை தொல்காப்பிய உரையினால் அறிய முடிகிறது. 'நிறைமொழி

மாந்தர்' என்னும் தொல்காப்பியச் சூத்திர உரையில் ''இவை தெற்கண் வாயில் திறவாத பட்டி மண்டபத் தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் சாவவும், வாழவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின'' என்று பேராசிரியர் கூறுகிறார்.

இவ்வாறே திருவிளையாடற் புராணமும் நக்கீரர் கதையைக் கூறுகிறது. குறுந்தொகையில் வரும் இறையனார் எழுதிய ''கொங்குதேர் வாழ்க்கை'' எனத் தொடங்கும் பாடலை அடிப்படையாகக் கொண்டது இக்கதை. சிவபெருமான் தருமி பொருட்டு, 'கொங்கு தேர் வாழ்க்கை' எனும் பாடலை எழுதித்தர, அதைத் தருமி சங்கத்தார் முன் கூறினான், அப்பாடல் 'குற்றம் உடையது' என்று நக்கீரர் கூறினார். அதனால் சங்கத்துக்கு ஒரு தமிழ்ப் புலவன் வடிவில் வந்த சங்கரர் நக்கீரரிடம் வாதிட்டார். இறுதியில் தம் நெற்றிக் கண்ணைச் சற்றே காட்டினார். அதைக்கண்ட நக்கீரர் ''நேயனே! சுற்றும் முற்றும் எங்கணும் நெற்றிக் கண்ணே, ஆயினும் குற்றம், குற்றம்'' என்று அஞ்சாது உரைத்தார். அது முதல் ''நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்னும் பழமொழி தோன்றியது. இந்த நெற்றிக்கண் நிகழ்ச்சி, நக்கீரரின் அஞ்சாமையினையும், தமிழின் தூய்மையைக் காக்கும் கடமை உணர்வினையும் விளக்குவதாகும்.

செய்யுளில் குற்றம் கண்டு, இறைவனின் கோபத்துக்காளானபின் நக்கீரர் நோயுற்றார். அது தீர்தற்பொருட்டு இவர் கைலையைக் காணப் புறப் பட்டார். செல்லும் வழியில் திருப்பரங் குன்றத்தில் வாழும் ஒரு பூதம் இவரைப் பிடித்து, ஒரு குகையில் அடைத்து வைத்தது, பின்னர் இவரை உணவாக உண்ண விரும்பியது. பூதத்திடமிருந்து தப்புதற்காக நக்கீரர் 'திருமுருகாற்றுப் படை'யைப் பாடி, முருகன்

அருள் வேண்டினார், முருகன் வெளிப்பட்டுப் பூதத்தைக் கொன்று நக்கீரரைக் காத்தான்.

நக்கீரர் அந்தணர் எனக் கருதுவர்! சங்கு அறுப்பது எங்கள் குலம் சங்கரனார்க்கு ஏது குலம் என்னும் ஒரு வெண்பாவைக் காட்டி "இவர் சங்குத்தொழில் செய்யும் அந்தணர் மரபினர்" என்று சான்று காட்டுவர். "கீத விசை கூட்டி வேதமொழி சூட்டு கீரர்' என்னும் திருப் புகழ் வரியை எடுத்துக்காட்டி, "அருணகிரி நாதரும் இவரை அந்தணராகவே கருதினார் என்பது பெறப் படுகிறது" என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் கூறுகிறார். ஆனால் "ஈண்டு அருணகிரி அடிகளார் திருமுருகாற்றுப் படையையே வேதம் என மதிப்பாராய், அதனையே வேதமொழி எனப் பாராட்டுகின்றார் ஆகலான், அதுபற்றி அவர் அந்தணராகக் கருதினர் என்றது நிரம்பா தென்க. இவர் அந்தணமரபினர் என்றற்குச் சிறந்த சான்றுகள் இல்லை" என்று மறுக் கிறார், பெருமழைப் புலவர் பொ. வே. சோம சுந்தரனார்.

நக்கீரர் பத்துப்பாட்டில் இரண்டாவதான திருமுரு காற்றுப் படையையும் நெடுநல்வாடையையும் பாடினார். இவற்றைத் தவிர, நற்றிணையில் ஏழு பாடல்களும், குறுந்தொகையில் எட்டுப் பாடல்களும், அகநானூற்றில் பதினேழு பாடல்களும் புறநானூற்றில் மூன்றுபாடல்களும் பாடியுள்ளார். இவை அனைத்தும் பத்துப்பாட்டிலும் எட்டுத்தொகையிலும் அடங்கிய சங்கப் பாடல்களாகும். திருவள்ளுவ மாலையிலும் நக்கீரர் பாடியதாக ஒரு பாடல் உள்ளது.

திருமுருகாற்றுப் படை, பதினொராந்திருமுறையில் உள்ளது. இந்நூலைத் தொடர்ந்து அதே திருமுறையில் இடம்பெற்றுள்ள கைலைபாதி காளத்திபாதி அந்தாதி முதலிய ஒன்பது நூல்களை இயற்றியவரும் நக்கீரரே.

ஆயினும் இந்நக்கீரர் சங்க காலத்து நக்கீரர் அல்லர் எனக் கூறுவர்.

நக்கீரர் பாடலாசிரியராக இருந்தமையோடு உரையாசிரியராகவும்திகழ்ந்தார் எனத்தெரிகிறது. 'இறையனார் அகப்பொருளுரையினை இந்நக்கீரரே இயற்றினார்; உரையை எழுதியதும் இவர் தம் புதல்வரான கொற்றனாருக்குக் கூறினார் என்பர். நக்கீரரின் புதல்வரது முழுப்பெயர் கீரங்கொற்றனார் எனக் கூறுவர்.

மதுரையில் மேலை மாசி வீதியில் நக்கீரர் கோயில் உள்ளது, இக்கோயில் 'சங்கத்தார் கோயில்' எனவும் வழங்கப்பெறுகிறது. திருப்பரங் குன்றத்திலும் திருவீங்கோய் மலையிலும் நக்கீரர் திருவுருவம் உள்ளன என்பர். திருக்காளத்தியில் நக்கீரர் அமைத்த திருவுருவம் நக்கீரநாதர், நக்கீரலிங்கம் என்னும் பெயர்களால் குறிக்கப்படுகின்றது. இக்குறிப்புகள், தமிழர் நக்கீரரைச் சிறப்பித்த முறையை அறிவிப்பன ஆகும்,

நக்கீரர் வழங்கிய திருமுருகாற்றுப் படையையும் நெடுநல் வாடையையும் பதிப்பித்த சாமிநாதையர், இரண்டிலும் உள்ள ஒத்த பகுதிகளை எடுத்துக் காட்டினார்.

திருமுருகாற்றுப்படை	நெடுநல்வாடை
வரி:38:வென்றடு விறற்கொடி	87:வென்றெழு கொடி
70-71:திருவீற்றிருந்தது	89-90:திருநிலை பெற்றுத்
தீதுதீர் நியமத்துக்... ...கூடல்	தீதுசீர் சிறப்பின்...... ...திருநகர்
228: நெய்யோடுஐயவி அப்பி	86: ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை

238: நளிமலைச் சிலம்பு 100: நளிமலைச் சிலம்பில் சிலம்பும் கோயில்.

இவ்வொத்த பகுதிகள், இரு நூல்களையும் எழுதியவர் ஒருவரே என்பதை நிறுவத் துணைசெய்யும்.

பத்துப்பாட்டின் முத்துப் பாட்டாகவும் முதற்பாட்டாகவும் அமைந்துள்ளது, திருமுருகாற்றுப்படை. இதற்குப் புலவராற்றுப்படை என்னும் பெயரும் உண்டு. ஆற்றுப்படை இலக்கணத்தைக் கூறும் தொல்காப்பியர்,

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்''

என்று கூறுகிறார். எனவே கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோரே ஆற்றுப்படுத்தற்கு உரியவர். இவ்விதிக்கு மாறாகப் புலவரை ஆற்றுப்படுத்தி நக்கீரர் ஒரு புரட்சி செய்துவிட்டார். எனினும் நக்கீரர் அறிமுகப்படுத்திய முறையை, பிற்கால இலக்கண ஆசிரியர் ஏற்றுக்கொண்டனர். முருகனின் அருளைப்பெற்ற ஒரு புலவர், அவ்வருளைப் பெறத் தக்க மற்றொரு புலவரை அவனிடம் ஆற்றுப் படுத்துவது திருமுருகாற்றுப்படையாகும். இந்நூலுள் நக்கீரர் முருகனின் உறைவிடங்களான ஆறுபடை விடுகளை விளக்குகிறார். திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், (திருச்செந்தூர்) திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமி மலை) குன்றுதோறாடல்' (பழமுதிர்சோலை) ஆகியவையே ஆறுபடை விடுகள்.

நக்கீரர் இப்பாடலில் முருகனின் பெருமையை விளக்கும் திருப்பெயர்களை வரிசையுறச் சுருக்கிக் கூறுகிறார்.

அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக!

இப்பகுதி தமிழ் அர்ச்சனையாகும் தனிச் சிறப்புப் பெற்றது.

முருகன் புகழைப் பாடும் திருப்புகழ் முதலிய நூல்களுக்கு முன்னூலாக - வழிகாட்டியாக விளங்குவது திருமுருகாற்றுப்படையே!

பத்துப்பாட்டில் எட்டாவதாக அமைந்தது, நெடுநல்வாடை என்னும் அகத்திணைப் பாடல். இது பாண்டியன் நெடுஞ்செழியன்மீது பாடப்பட்டதாகும். பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு, அந்த வருத்தம் அகலும்படி, ''அரசன் பகைவரை வென்று விரைந்து வருவானாக'' என்று கொற்றவையைப் பரவும் ஒருத்தி கூற்றாக அமைந்தது இப்பாடல். நெடுநல்வாடை என்பது நெடிதாகிய நல்ல வாடை என்னும் பொருள் தருவதாகும். தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு, வாடைக் காலத்தின் ஒரு பொழுது ஓர் ஊழிக்காலம்போல நெடி

தாய்த் தோன்றும். அதனால் இது நெடுவாடையாயிற்று. இன்பநுகர்ச்சியில் பற்றின்றிப் போரிலே பற்றுக் கொண்டவனாய்ப் பாசறையில் தங்கியிருப்பது, தலைவன் வெற்றிக்குக் காரணமாய் அமைந்ததால் நல் எனும் அடைமொழி தரப்பட்டது. எனவே நெடுநல் வாடை எனும் பெயர் பொருள் பொருந்திய தலைப்பாக அமைந்துள்ளது.

இப்பாடல் அகத்திணைப் பாடலேயாகும். அகப் பொருட் பாடல்களில் தலைவன், தலைவி ஆகியோரின் இயற்பெயரைச் சுட்டக்கூடாது என்பது இலக்கண விதி. அதற்கிணங்க இப்பாட்டிலும் தலைவன் பெயரோ தலைவியின் பெயரோ குறிக்கப் பெறவில்லை. பாச றையில் உள்ள தலைவனாகிய அரசன் செல்லும்போது, அவனுக்கு முன்னே சென்ற வீரன் பிடித்திருந்த வேலினை, ''வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்'' என்று குறிப்பிடுகிறார் நக்கீரர். வேப்பம்பூ பாண்டிய வேந்தனின் அடையாளப் பூ. அதனால் பாசறையில் தங்கியிருந்த அரசன் பாண்டியன் என்பது பெறப்படு கிறது. இக்காரணத்தால் இது அகத்திணைப் பாடல் ஆகாது என்று கூறுவோர் உண்டு. இப்பாட்டில் அகத் திணையாகிய பாலையும், அதன் புறத்திணையாகிய வாகையும் அமைந்துள்ளன.

நக்கீரர் புறநானூற்றில் பாடியுள்ள மூன்று பாடல் களும் மிகச் சிறந்தவையாகும். அதிலும் 189 ஆம் பாட லாக அமைந்துள்ள நக்கீரர் பாடல் எல்லோரும் எப் போதும் ஏற்கத் தக்க பேருண்மைகளைப் பேசுகிறது.

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்

உண்பது நாழி? உடுப்பவை இரண்டே!
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே!
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.

வேந்தனும் வேடனும் சமம்; இருவர் தேவைகள் யாவும் சமம், அதனால் செல்வத்தை வைத்திருப்போர் தம் தேவைக்கு மேலே இருப்பதைப் பிறருக்கு ஈந்து உதவ வேண்டும் என்று சமத்துவக் கொள்கையினை நக்கீரர் உலகுக்கு இப்பாடல் மூலம் உணர்த்தியுள்ளார்.

நக்கீரர் விருப்பு வெறுப்பின்றி தம் நெஞ்சறிந்த உண்மையை அஞ்சாது கூறும் ஆற்றல் பெற்றவர். சங்கப் புலவர்க்குத் தலைவராகத் திகழ்ந்து தமிழின் தூய்மை யைக் காத்தவர். இழும் என இழிதரும் அருவியைப் போலத் தமிழ் மழை பொழிந்து இலக்கியத்தை வளப் படுத்தியவர். சங்கப்புலவருள் அவருக்கு நிகர் அவரே!

2. அவ்வையார்

தமிழகத்தின் பொற்காலமான சங்ககாலத்தில் பெண்கள் உரிமையும் பெருமையும் உடையவராய், அரசர் அவையில் வீற்றிருக்கும் தகுதியும் பெற்றிருந்தனர். அக்காலத்து வாழ்ந்த பெண்பாற் புலவர்களுள், தலைமை பெற்றவர் அவ்வையார். சங்கப் புலவர் எவர் பெயரையும் அறியாதாரும் இவர் பெயரை அறிந்தே இருப்பர். மன்னன் அவையிலும் மக்கள் மன்றத்திலும் சமமான புகழ் பெற்றவர் இந்த அவ்வையாரே!

அவ்வையார் என்னும் பெயரில் பலர் இருந்தனர் என்பதை எளிதில் உணரலாம். அதிகமான் காலத்தில் வாழ்ந்த அவ்வையார், கம்பர் காலத்தில் வாழ்ந்த அவ்வையார், 'ஆத்திசூடி முதலிய எளிய நூல்களைப் பாடிய அவ்வையார் எனக் குறைந்தது மூன்று அவ்வையார் தமிழகத்திலே வாழ்ந்து புலமை பெற்றுத் தமிழ்மொழியை வளம்பெறச் செய்துள்ளனர், அதிகமான் காலத்தில் வாழ்ந்த அவ்வையார் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர், 'கம்பர் காலத்தில் வாழ்ந்தவர், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர். மூன்றாம் அவ்வையார் மூதுரை என்னும் நீதி நூலில் 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி' என்று பாடியுள்ளார். ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்த பின்னரே வான்கோழி நம் நாட்டுக்கு வந்தது என்பர், எனவே மூதுரை முதலிய நீதி நூல்களைப் பாடிய மூன்றாம் அவ்வையார் கி.பி.

பதினைந்தாம் நூற்றாண்டில், அல்லது அதற்குப் பின்னே வாழ்ந்தவராகலாம். இக் கட்டுரையில் சங்க காலத்தில் வாழ்ந்த முதல் அவ்வையாரைப் பற்றி அறிவோம்.

அவ்வையாரின் இயற்பெயர், பெற்றோர், பிறந்த ஊர் முதலிய எவற்றையும் நாம் அறிய முடியவில்லை. இளமையிலேயே முதுமைக்குரிய அறிவும் ஆற்றலும் பெற்றதால் பிறந்த காரணப் பெயரே அவ்வையாராக லாம். பின்னே வந்த அவ்வையார்கள் இக்காரணப் பெயரை இயற்பெயராகப் பெற்றிருக்கலாம். அவ்வை யார் நீண்டகாலம் வாழ்ந்து தமிழகம் முழுதும் பலமுறை பயணம் செய்து தம் பாடல்களால் புகழ்பெற்றவர். இவர் பாணர் குடியினராகலாம் எனச் சிலர் கூறுவதையும் ஏற்பதற்கில்லை என்பதே பேராசிரியர் பலரது முடிவு. ஆதி பகவன், என்னும் பெற்றோர்க்கு மகளாக அவ்வையார் பிறந்தார் என்பதும், திருவள்ளுவர், கபிலர் முதலானோர் இவர்தம் உடன்பிறந்தார் என்பதும் வெறுங்கதைகளாகும்.

அவ்வையார் தன்மானம் மிக்க தமிழ்க்கவிஞர். அதிக மானை அதிகம் பாடியுள்ள இவர்முதன்முதலில்அவனைக் காணச் சென்றபோது, அதிகமான் உடனே பரிசில் தாராமல் காலம் தாழ்த்தினான், அதனால் சினம் கொண்ட அவ்வையார் அதிகமானின் வாயிலோனிடம்,

கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்னறி யலன்கொல்! என்னறி யலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே! அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே.
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே!

என்று பாடிப் புறப்பட்டார். அதனை அறிந்த அதிகமான் இவர்பால் கொண்ட பேரன்பாலே பரிசில் தராது, அவர் அங்கேயே சில நாள் இருக்கச் செய்தமையைத் தெரிவித்துப் பரிசு நல்கினான். உடனே சினம் தணிந்த அவ்வையார் அதிகனின் குணமறிந்து பாராட்டினார். ''எப்போது சென்றாலும் அதிகமானின் அன்பும் விருந்தோம்பும் பண்பும் முதல் நாள் இருந்தன போலவே இருக்கும்'' என்பதைக் கூறி மகிழ்ந்தார்.

ஒரு நாட் செல்லலம்? இருநாட் செல்லலம்;
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ!

அதிகமான் நெடுநாள் வாழச் செய்யும் நெல்லிக் கனியை மிகவும் முயன்று பெற்றுவந்தான். அதனைத் தான் உண்டு வாழ்வதினும் அவ்வை உண்டு வாழ்ந்தால் தமிழுலகு அடையும் பயன் மிகுதி என்று எண்ணினான். அதனால் நெல்லிக் கனியை, அதன் சிறப்பு இன்னதெனச் செப்பாது அவ்வைக்கு அளித்தான்: அவ்வை அதை உண்ட பின்னரே கனியின் சிறப்பை அறிந்தார் உடனே, சிறியிலை நெல்லித் தீங்கனியின் உயர்வை உரைக்காமல் உள்ளத்தே மறைத்து, காதல் நீங்கத் தனக்களித்த அதிகனை, ''நீல மணி மிடற்று ஒருவன் போல் மன்னுக பெரும நீயே'' என்று வாழ்த்தினார். நெல்லிக்கனி உண்டமையாலே அவ்வையார் நீண்ட காலம் வாழ்ந்திருந்தார்.

அவ்வையார் காலத்தில் தொண்டை நாட்டை ஆண்ட அரசனின் பெயர் தொண்டைமான். அவன் அதிகமானோடு பகைமை கொண்டான். இருவர்க்கும் இடையே ஒரு பெரும் போர் நடைபெறும் சூழ்நிலை ஏற்பட்டது. தொண்டைமான் படை பலத்தாலும் படைக் கருவிகள் பெருக்கத்தாலும் செருக்குற்றுப்

போரை நாடினான். விளையும் போரில் வீணாகப் பலர் மடிவதை விரும்பாத அதிகன் அவ்வையாரைத் தொண்டைமானிடம் தூதனுப்பி, போரைத் தடுக்கக் கோரினான். அவ்வையார் தொண்டைமானைச் சந்தித்த போது அவன் இவரைத் தன் படைக்கலக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்று படைக் கருவிகளைப் பெருமையுடன் காட்டினான், அவற்றைக் கண்ட அவ்வையார், ''இங்குள்ள உன் படைக் கருவிகள் மயிற்பீலி அணியப் பட்டு மாலை சூட்டப்பட்டு, நெய் பூசப்பட்டுப் புத்தம் புதியனவாய்த் திகழ்கின்றன. அதிகனின் படைக்கருவிகள் பகைவரைத் தாக்கி அதனால் கோடும் நுனியும் சிதைந்து செப்பம் பெறும் பொருட்டுக் கொல்லனது உலைக் கூடத் தில் உள்ளன'' என்று அதிகமானைப் பழிப்பது போலப் புகழ்ந்து, தொண்டைமானைப் புகழ்வது போலப் பழித் தார். அதிகமானின் ஆற்றலை அறிந்த தொண்டைமான் போரைத் தவிர்த்தான். இதன் மூலம் தமிழகத்தின் முதற் பெண் தூதுவர் என்னும் பெருமை பெறுகிறார் அவ்வையார்.

'புலமைக் காய்ச்சல்' என்னும் ஒரு தொடரைப் பிற்காலப் புலவர்களின் வரலாற்றில் காண்கிறோம். ஒரு புலவர் மற்றொரு புலவரின் புகழைக் கண்டு பொறா மைகொள்வதே புலமைக் காய்ச்சலாகும், சங்க காலத்துப் புலவரிடம் இவ்விழி குணம் இல்லை, அவ்வையார் மற்றப் புலவர்களை மதித்து, அவர்தம் பெருமையைத் தம் பாடல்களில் பதித்து மகிழ்ந்தவர். வெள்ளி வீதியார் என்னும் பெண்பாற் புலவர் தம் காதலரைத் தேடி ஆதிமந்தி போல அலைந்து திரிந்து அல்லற்பட்டவர். அவ்வையார் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் தலைவன் பிரிவால் மெலிந்து நலிந்து வருந்தும் தலைவியைக் காட்டுகிறார். அவள், இவ்வாறு பிரிவால் வருந்தி அழிவதினும் அவர் சென்ற காட்டு வழியே அலைந்து திரிதலை மேற்கொள்ள விரும்புகிறாள், இதைக் கூற

வந்த அவ்வையார் ''நெறிபடு கவலை நிரம்பா நீளிடை, வெள்ளி வீதியைப் போல நன்றும், செலவு அயர்ந் திசினால் யானே'' என்று பாடி வெள்ளிவீதியைச் சிறப் பிக்கிறார்.

அவ்வையார் காலத்தே வாழ்ந்த பெரும் புலவர் பரணர், 'பாம்பறியும் பாம்பின் கால்' என்னும் பழமொழிப்படி அப்பெரும் புலவரின் சிறப்பை மற்றொரு பெரும் புலவரான அவ்வையார் அறிந்திருந் தார். அதிகமான், முன்னே அரசர் எழுவரை வென்றான்; பின்னே கோவலூர் மீது படையெடுத்துச் சென்று, கோவலூர்க் காவலனை வென்றான். கோவலூர் வெற்றியைப் பாடும் ஆவல் கொண்ட அவ்வையார், ''அதிகமானே! நீ ஏழு வேந்தரை எதிர்த்து வென்ற அப்போது பாடுவோர்க்கு அரியவனாய்த் திகழ்ந்தாய். கோவலூர் வென்ற இப்போதும் பாடுவதற்குஅரியவனே. ஆனால். பரணன் ஒருவன் மட்டும் தன் பெருமையால் உன்னைப் பாடினான்'' என்று பரணரைத் தன்னினும் சிறந்தவராகச் சித்திரித்து மகிழ்ந்தார்.

இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க்கு அரியை; இன்றும்
பரணன் பாடினன் மற்கொல், மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்டு திகிரி ஏந்திய தோளே!

மூவேந்தர் பாரியின் பறம்பு மலையை முற்றியிருந்த போது பறம்பு மக்களுக்கு உணவைக் கொண்டுவரக் கிளிகளைப் பழக்கினார் புலவர் கபிலர். கபிலரின் கிளிகள் காலையில் பறம்புமலை விட்டுச் சென்று வெகு தூரத்திலிருந்து செந்நெற் கதிர்களைக் கவர்ந்து கொண்டு மாலையில் மீண்டு வந்தன. இந்நிகழ்ச்சியை

அவ்வையார் தமது அகப்பாடலில் குறிப்பிட்டுக் கபிலரைச் சிறப்பித்தார், தலைவி ஒருத்தி, பொருள் வயின் பிரிந்த தலைவன் மாலையில் வருவான் எனநம்பும் தன் நெஞ்சிடம், ''மடநெஞ்சமே! பாரியின் பறம்பு மலைக் குருவிகள் காலையில் சென்று கதிர்களைக் கவர்ந்து கொண்டு மாலையில் மீள்கின்றனவே! அது போலத் தலைவரும் காலை சென்று மாலை திரும்புவார் என எண்ணாதே!'' என்று வருந்திக் கூறுகிறாளாம்.

பாரியின் பறம்பு
நிரைபறைக் குரீஇயினம், காலைப் போகி,
முடங்குபுறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு
இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்ந் தாங்கு
வருவர்என் றுணர்ந்த மடங்கெழு நெஞ்சம்!

அவ்வையார் எளிய உவமை மூலம் எதையும் விளக்கிவிடுவார். அதிகமான் நண்பர்க்கு இனியவனாகவும், பகைவர்க்கு இன்னாதவனாகவும் இருக்கும்இயல்பை அவனது பட்டத்து யானையை உவமையாக்கி விளக்குகிறார். ''பெருமானே! யானையின் வெள்ளிய தந்தத்தைக் கழுவும் போது நீர்த் துறையில் நிற்கும் உனது யானை ஊர்ச் சிறுவர்க்கு எவ்வாறு இனிதாக இருக்கிறதோ அவ்வாறு எம்மை போன்ற நண்பர்க்கு நீ மிகவும் இனியவன், அதே யானையின் மதம் கொண்ட நிலை மக்களுக்கு எவ்வாறு இன்னாததோ, அவ்வாறு நீ உன் பகைவர்க்கு இன்னாதவன்'' என்கிறது அவ்வையாரின் பாடல்:

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும, எமக்கே! மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெரும, நின் ஒன்னா தோர்க்கே!

அதிகமான் இறந்த போது அவ்வையார் அடைந்த துயருக்கோர் அளவில்லை, 'அதிகமானின் மார்பில் தைத்த வேல், பாணர்களின் உண்கலமாகிய அகன்ற மண்டையைத் துளைத்து, இரப்போர் கைகளைத் துளைத்து, தன்னால் காப்பாற்றப்படும் சுற்றத்தாரின் கண்ணொளி மங்கச் செய்து அழகிய சொற்களை ஆராயும் புலவரின் நாவிலே போய் விழுந்தது!'' என்று கூறுகிறது அவ்வையாரின் கையறு நிலைப்பாடல்:

அருந்தலை இரும்பாணர் அகல் மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்று, அவன்
அருநிறத்து இயங்கிய வேலே!

தமிழ் நாட்டு மூவேந்தர் ஓரினத்தராய், ஒரு மொழி பேசுபவராய் இருந்தும் தம்முள் போரிட்டுச் சீர்குலைந் தனர். அந்நிலையில் மன்னர் மூவர் மனமொன்றி நட்புக் கொண்டு ஓரிடத்தேயிருந்த அதிசயக் காட்சியைக் கண்டு ஆனந்திக்கும் பேறு அவ்வையாருக்குக் கிடைத்தது. சேரமான் மாவண்கோவும், பாண்டியன் கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும் சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஓரிடத்தே வீற்றிருந்தனர். அவர்களை ஒரு சேரக் கண்டு பெருமகிழ்வுற்ற அவ்வை யார் அவர்க்கு அரிய கருத்துக்களை எடுத்துச் சொன் னார். ''இப்பெரிய மண்ணுலகம் தமக்கே உரியது என்னும் நிலைமை பெற்றாலும் அரசர்கள் இறக்கும் போது இதனைத் தம்முடன் எடுத்துச் செல்வதில்லை. அவருக்குப் பின்னே அவருடைய உறவினர்தம் நாட்டை ஆள்வார்கள் என்பதும் இல்லை. வலிமை மிக்கவர் வேற்று நாட்டாராயினும் நாடு அவர்க்கு உரியதாகி விடும். அதனால் இரந்தவர்க்கு ஈந்து இனிய கள் பருகி இந்த வையத்தில் வாழவேண்டும். வாழ்வதற்கு ஏது

வாகிய அந்த நல்வினையல்லாமல், இறக்கும் போது உயிர்க்கு உற்ற துணையாவது வேறெதுவும் இல்லை. பார்ப்பனர் வளர்க்கும் முத்தீயைப் போலக் கண்குளிரக் காட்சி தரும் வெண்கொற்றக் குடையுடைய வேந்தர் களே! நானறிந்த உண்மை இதுவே, விண்ணிலே தோன்றும் விண்மீன்களினும், மண்ணிலே பொழியும் மழைத்துளிகளினும் மிகுந்ததாக நும் வாழ்நாட்கள் விளங்குக'' என்று அவ்வையார் அறிவுரை தந்து வாழ்த்தினார்.

உலகத்தில் பல நாடுகள் உள்ளன. ஊர்கள் பல உள்ளன. இவற்றில் சிலவற்றை நல்லன என்றும் சில வற்றை நல்லனவல்ல என்றும் உண்மையறியாத மக்கள் உரைப்பர். அவ்வையார், ''இடத்திற்கு நன்மை தீமை என்னும் பண்புகள் இல்லை. நாடாக இருக்கட்டும். காடாக இருக்கட்டும், மேடாக இருக்கட்டும். பள்ளமாக இருக்கட்டும் எல்லாம் இயற்கையில் ஒரு தன்மையான ஆனால் எந்த இடத்திலே வாழும் மக்கள் நல்லவர்களாக உள்ளனரோ அந்த இடத்தில், நிலமே நீயும் நல்ல நிலமாக விளங்குகிறாய். நீ வாழ்க!'' என்று நிலத்தை வாழ்த்தி என்றும் நிலைத்து நிற்கும் பேருண்மையை உணர்த்து கிறார்.

நாடா கொன்றோ, காடா கொன்றோ,
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ,
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!

அவ்வையாரின் அறிவும் திறமும் வியக்கத்தக்கன. இவ்வறிவையும் திறமையையும் கண்டு இவர், ''மானிட மடந்தைக்கு இத்துணை பேரறிவும் பேராற்றலும் இருக்க முடியாது. எனவே இவர் தெய்வப்பிறவியே'' என்று எண்ணிவிட்டனர் போலும். அவர்களே, 'அவ்வையார் கலைமகளின் அவதாரம்' என்னும் கதை யைக் கட்டிவிட்டிருப்பர். அவ்வையார் சாதாரண மானிடப் பிறவியே! ஆனாலும் அவர் அறிவால் கலை மகளுக்கு நிகராக உயர்ந்து நிற்கிறார் என்பது மட்டும் உண்மை! முழு உண்மை!

3. மாணிக்கவாசகர்

'தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே! மாணிக்க வாசகனே' ஆனந்த வடிவான மாதவனே!' என்று வடலூர் வள்ளல் பெருமானால் போற்றப்படும் அடியவர் மாணிக்க வாசகர், சமய குரவர் நால்வரில் ஒருவராக எண்ணப்படுபவர். 'திருவாசகத்துக்கு உருகார், ஒரு வாசகத்துக்கும் உருகார்', எனப் புகழப்படும் திருவாசகத்தையும், பாவை பாடிய வாயால் கோவையாகிய திருக்கோவையாரையும் இயற்றியவர், இவரது வரலாற்றை திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் முதலிய நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன.

தென் பாண்டில், வைகைக் கரையில், அமைந்த திருவாதவூரில், அமாத்தியர் என்னும் அந்தணக் குலத்தில் அவதரித்தார், மாணிக்கவாசகர். இவரது இயற்பெயர் வாதவூரர். பாலப் பருவத்திலேயே சாலச் சிறந்த நுண்ணறிவு பெற்று, நூல் பல கற்றுத் தேர்ந்தார். பதினாறு வயதினிலே, பல்கலை அறிந்து அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சரானார். அமைச்சர் பணியைத் திறம்படச் செய்தபோதே அவர் உள்ளம் சிவபெருமானின் திருவருளையே வேண்டி நின்றது.

பாண்டிய அரசன் குதிரைகள் வாங்க வேண்டிய பொருளை இவரிடம் கொடுத்து அனுப்பினான்.

வாதவூரர், மதுரைக்கு வடகிழக்கேயுள்ள சோழநாட்டுத் திருப்பதியாகிய திருப்பெருந்துறையை நாடிச் சென்றார். வழியில் சிவமுழக்கம் செவியில் விழ, அந்த ஓசை வழியே சென்று ஒரு குருந்த மரத்தடியை அடைந்தார். அதன் கீழ் இவரை ஆட்கொள்வதற்காகவே வந்தசிவபெருமான் ஞான குரு வடிவத்தில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது சீடர்களோடு வீற்றிருந்தார். அவரை அடைந்ததும், இறைவனாகிய சற்குரு இவருக்கு 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்தார். பெருஞானம் கைவரப் பெற்ற திருவாதவூரர், குருவான இறைவனைப் புகழ்ந்து பாடினார். அவற்றின் செப்பமும் சிறப்பும் நோக்கிய ஒப்பிலா அப்பன், இவருக்கு மாணிக்கவாசகன் என்னும் திருப்பெயரை வழங்கினார்.

மாணிக்கவாசகர் தாம் வந்த வேலையை மறந்து குதிரை வாங்கக் கொணர்ந்த பொருள் அனைத்தையும் இறைபணிக்கு ஆக்கி, திருப்பெருந்துறையின்கண் கோயில் கட்டுவித்தார். இதனை அறிந்த அரிமர்த்தனன் இவரை அழைத்து விசாரிக்க, இறைவன் அருளியபடி ''ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும்'' என்று அறிவித்தார். அவ்வாறு குதிரைகள் வரும் வாய்பில்லை என்பதை அறிந்த பாண்டியன் தூண்டிய சினத்தனாய், மாணிக்க வாசகரைச் சிறையில் அடைத்தான்.

சிவபெருமான், தம் அடியவருக்காக நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டுவந்து சேர்த்து, அடியவரை விடுதலை செய்தார். அன்றிரவு பரிகள் மீண்டும் நரிகளாக மாறி, பாண்டியன் குதிரைகளைக் கடித்து அழித்து வெளியேறின. அதனால் பாண்டியன் மாணிக்க வாசகரை வைகை ஆற்று மணலின் வெம்மையில் நிறுத்தி ஒறுத்தான். அத்துன்பத்திலிருந்து அவரை மீட்க, வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்தது.

வந்தியின் வேலையாளாக இறைவனே வந்து, பாண்டிய னிடம் அடியுண்டான். அந்த அடி உலகத்து உயிர்கள் அனைத்தின் மேலும் பட்டது.

பாண்டியன் அப்போதே மாணிக்க வாசகரின் பெருமை உணர்ந்து அவரை வணங்கி, அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவித்தான். மாணிக்கவாசகர் விடுதலை பெற்ற மகிழ்ச்சியோடு பலதலங்களை அடைந்து பாடி மகிழ்ந்தார். தில்லையை அடைந்த போது இறைவன் மானிட வடிவில் வந்து வேண்ட, திருவாசகம் முழுவதையும் மீண்டும் கூறினார். அதை இறைவனே ஏட்டிலே எழுதிக் கொண்டான். பின்பு ''பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடு?' என வேண்ட, மாணிக்கவாசகர் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் திருக்கோவையாரைப் பாடினார். அதனையும் இறைவன் எழுதிக் கொண்டான்.

இரண்டையும் 'மாணிக்க வாசகன் சொல்லப் பொன்னம்பலவன் எழுதியது' எனக் கைச்சாத்து இட்டு. பொன்னம்பலப் படிகள் மேல் வைத்தான் பரமன். மறுநாள் காலை அந்நூல்களைக் கண்ட மறையோர்கள் மாணிக்க வாசகரை அணுகி, ''இந்நூல்களின்பொருளை உரையுங்கள்'' என வேண்டினர், மாணிக்க வாசகர் அவர்களை அழைத்துக்கொண்டு கோயிலுக்குள் சென்று, ஆடும் கூத்தனைக் காட்டி, ''என் நூல்களின் பொருள் இவரே'' என்று கூறினார். அப்போது சிவனருளால் தோன்றிய பெருஞ்சோதியில் மாணிக்க வாசகர் கலந்து முத்தியடைந்தார். அந்நாள் ஆனி மாமகத் திருநாளாகும்.

இவரது காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு என்று மறைமலைஅடிகள் கூறுகிறார். எனினும் இவர்தோன்றிய காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டே என்று அறிஞர் பெருமக்கள் ஆய்ந்து முடிவு செய்துள்ளனர்.

திருவாசகம் ஊனையும் உயிரையும்உருக்கும் ஆற்றல் மிக்கது. சிவப்பிரகாசர் இப்பெருமையை விளக்குகிறார்:

திருவாசகம் இங்குஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்து உகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

திருவாசகத்தில் மொத்தம் ஐம்பத்தொரு திருப்பதிகங்களும் அறுநூற்று ஐம்பத்தாறு திருப்பாடல்களும் உள்ளன. திருவாசகம் 'சிவபுராண'த்தோடு தொடங்குகிறது. தொடக்கமே, நமசிவாய என்னும் மந்திரச்சொல்லைப் பெற்றுள்ளது.

''நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
....
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி''

முத்திக்கு வழி காட்டும்பேருண்மைகளை அனைவரும் விரும்பிக் கற்றுப் பயன் பெறுவர் என்று சொல்ல முடியாது. அதனால் அனைவரும் விரும்பும் வகையில்—குறிப்பாக மங்கையர் விரும்பும்வகையில் பலவகை விளையாட்டுப் பாடல்களை இயற்றி, அவற்றில் வினைநீங்கி வீடு பெறத்தக்க வழிகளை இணைத்தார் மணிவாசகர். நோய்நீக்கும் மருந்தைச் சேய்விரும்பும் தேனிலே குழைத்துக்கொடுக்கும் பாணியில் இவர் இயற்றிய விளையாட்டுப்பாடல்கள். திரு அம்மானை, திரு உந்தியார், திருவெம்பாவை, திருப் பொற்சுண்ணம், திருப் பொன்னூசல் முதலியன.

''வளைந்தது வில்லு! விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம், உந்தீ பற!
ஒருங்குடன் வெந்தவா உந்தீபற!''

—திருவுந்தியார்

''ஆரா அமுதின் அருந்தாள் இணைபாடிப்
போரார் வேல் கண்மடவீர் பொன்னூசல்
ஆடாமோ?''

''கோணார் பிறைச் சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ?''

—திருப்பொன்னூசல்

''அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே''
''மலைக்கு மருமகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே''

—திருப்பொற்சுண்ணம்

தமிழகத்து மகளிர் தைந்நீராடலை மேற்கொண்டு ஒழுகினர் என்பதற்குச் சங்க இலக்கியத்திலும் சான்று உண்டு. மார்கழி மாதத்தில் விடியற்காலையில் கன்னிப் பெண்கள் நீராடி நோன்பு நோற்பது வழக்கம். திருவண்ணாமலைக்குச் சென்ற மாணிக்கவாசகர், மணாளனை வேண்டியும் மழையை வேண்டியும் மகளிர் நீராடி நோன்பு நோற்பதைக் கண்டார். உடனே திருவெம்பாவை என்னும் நூலை இயற்றினார். அதில் நேரிழையார் நீராடும் நேர்த்தியையும் நிமலன்புகழ் பாடும் பாங்கையும் கூறும் பின்வரும் பாடல், படிப்பவரையும் பாடவும் ஆடவும் செய்கிறது.

காதார் குழைஆடப் பைம்பூண் கலன்ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம்ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்

சோதிதிறம் பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம் பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

மேலே கண்ட விளையாட்டுப் பாடல்கள் அக் கால நாட்டுப் பாடல்களின் அமைப்பில் இயற்றப் பட்டவை எனவும் கருதுவோர் உண்டு.

பக்தர்கள் எவ்வாறு இருப்பார்கள்? என்னென்ன செய்வார்கள்? இவற்றைக் கூறி தாமும் அந்நிலை பெற அருள் செய்யுமாறு இறைவனை வேண்டுகிறார், மாணிக்க வாசகர்.

சிரிப்பார், களிப்பார், தேனிப்பார்;
திரண்டு திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார், கேட்பார், மெச்சுவார்;
வெவ்வேறு இருந்துன் திருநாமம்
தரிப்பார்: 'பொன்னம் பலத்தாடும்
தலைவா!' என்பார். அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ?
நம்பி! இனித்தான் நல்காயே!

மாணிக்க வாசகர் தம் இறைவனைப் பற்றிச் கொள் கிறார். அப்பற்று எளிதில் நீக்க முடியாத, நிலையான பற் ஆகும். அதை 'சிக்கெனப் பிடித்தேன்' என்று இவர் கூறும் உவமை, ஒப்பிலா உவமையாகும்.

அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில், விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே! பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய் சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!

இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே!

திருவாசகத்தைப் படித்து உருகி நின்ற வடலூர் வள்ளலார், அது தரும் இன்பத்தை எடுத்துரைக்கும் பாடல் திருவாசகத்தின் பெருமைக்குச் சான்று.

வான்கலந்த மாணிக்க வாசக!நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!

கிருத்துவ சமயத்தை இங்கே பரப்புவதற்காக வந்தஜி-யூ-போப் திருவாசகத்தைப் படித்து உருகினார். அதனால் இதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, மாணிக்க வாசகரின் வான் புகழை வையகம் முழுதும் அறியச் செய்தார்.

திருவாசகம் போலவே, மாணிக்க வாசகரின் திருக்கோவையார் நூலும் புனிதம் மிக்கது? புகழுக்குத் தக்கது.

''பலகால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்''

என்றும் கூறுகிறது 'இலக்கணக் கொத்து.' இதனால் திருக்கோவையார் திருக்குறளுக்கு நிகரான நூல் என்பதை அறிகிறோம். கோவை என்னும் சிற்றிலக்கியத்தில் காலத்தால் முற்பட்டது திருக்கோவையார். இதில் நானூறு பாடல்கள் உள்ளன.

தலைவனைக் காணும் பாங்கன் கூற்றாக வரும் ஒரு திருக்கோவையார் பாடல் மிகவும் புகழ் பெற்றது.

இறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைநதனையோ அன்றி
ஏழிசைச் சூழல் புக்கோ
இறைவா! தடவரைத் தோட்குஎன்
கொலாம் புகுந்து எய்தியதே?

இப்பாடலில் உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' என்பது மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்ததைச் சாற்றுகிறது, "ஏழிசைச் சூழல்' என்பது இசைக் கூடம் அல்லது இசைக் கல்லூரி இருந்ததைச் சுட்டுகிறது.

திருக்கோவையார் அகத்திணை நூலாயினும் ஆன்மாவை உயர்த்தி ஆண்டவனிடம் அணையச் செய்யும் ஆற்றல் பெற்றது. திருக்கோவையாரை அந்தணர் 'ஆரணம்' (வேதம்) என்பர்; யோகியர் 'ஆகமத்தின் காரணம்' என்பர்; காமுகர் 'காமநன்னூல்' என்பர். இத்தகைய முச்சிறப்பும் பெற்றதால்தான் பிற கோவை இலக்கியங்கள் தஞ்சைவாணன் கோவை, அம்பிகாபதிக் கோவை என்பன போல் பெயர் பெற, இது உயர்வுக்குரிய "ஆர்' விகுதி பெற்று "திருக்கோவையார்' என அழைக்கப் பெறுகிறது.

மாணிக்க வாசகரின் திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரு நூல்களும் சைவத்துக்கும் செந்தமிழுக்கும் இருவிழிகள் போன்றவை எனக்கூறல் மிகையாகாது.

4. காரைக்காலம்மையார்

ஈசனிடம் பாசம் கொண்டு அவன் திருவடி அடைந்த அடியார்களுள் மகளிர் சிலரும் உண்டு. அம் மகளிருள் சிவனை எப்போதும் மறவாத சிந்தையராகி தம்எணணங் களைப் பாமாலையாக்கிப் பரமனுக்குச் சூடி மகிழ்ந்து அவன் திருவடி நிழலில் என்றும் வீற்றிருக்கும் பேற்றைப் பெற்றவர் காரைக்கால் அம்மையார். இவர், பெரிய புராணம் கூறும் அறுபத்துமூன்று அடியார்களுள் ஒருவர். பன்னிரு திருமுறையில் இவர் பதிகங்களும் உள்ளன. மங்கையர் குலத்துக்கே மங்காத பெருமையளித்தவர் இவர்.

காரைக்கால் என்னும் துறைமுக நகரில் பிறந்த காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதி. காரைக்காலில் வளமோடு வாழ்ந்த வணிகர்களின் தலைவனான தனதத்தன் பெற்ற மகள் புனிதவதியார். குழந்தைப் பருவத்திலேயே சிவனிடம் சிந்தைபறி கொடுத்து அவன் புகழையே எப்போதும் பேசினார். சிறுமியாகி, மற்றச் சிறுமியரோடு விளையாடிய போதும் அவர் சிவனைப் பற்றியே உரையாடினார். புனிதவதி யார் மணப்பருவம் அடைந்தார்.

நாகப்பட்டினத்தில் நிதிபதி என்னும் வணிகன் வாழ்ந்து வந்தான். அவன் தன் பெயருக்கேற்றாற் போலவே பெருஞ் செல்வம் பெற்றவன். அவனுக்குப்

பரமதத்தன் என்னும் மகன் இருந்தான். நிதிபதி தன் மகனுக்குப் புனிதவதியாரை மணம் செய்விக்க விரும்பிப் பெரியோர் சிலரைத் தனதத்தனிடம் அனுப்பினான். பரமதத்தன் உருவும் திருவும் உடையஒத்த குலத்தினன். அதனால் தனதத்தன் அவனுக்குத் தன் மகளை மணம் முடிக்கச் சம்மதித்தான். ஒரு நல்ல நாளில் காரைக் காலில் புனிதவதியாருக்கும் பரமதத்தனுக்கும் திருமணம் நடந்தது.

தனதத்தனுக்குப் புனிதவதியாரைத் தவிர வேறு குழந்தை இல்லை; அதனால் தன் மகளையும் மருமகனை யும் காரைக்காலிலேயே தங்கி வாழச் செய்தான். அவர் களுக்குச் சிறப்புள்ள ஒரு வீடு கொடுத்து, பெருஞ் செல்வமும் வழங்கினான். பரமதத்தன் தனியே வாணிபம் செய்து பொருளீட்டினார். புனிதவதியார் இல்லறம் மேற்கொண்ட பிறகும் இறைவனிடம் கொண்ட பக்தி குறையவில்லை. அரனடியாருக்கு அவர் உணவும் உடையும் பொருளும் வழங்கி உபசரித்து உவகையடைந் தார்.

ஒரு நாள் பரமதத்தன் கடைக்கு வந்தவர்கள் அவனுக்கு இரண்டு மாங்கனிகள் கொடுத்தனர். அவற்றைப் பணியாளன் மூலம் அவன் புனிதவதியாரிடம் சேர்க்கச் செய்தான். அன்று ஒரு சிவனடியார் புனிதவதி யாரின் வீட்டுக்கு வந்தார். அவரது பசியை அறிந்த அம்மையார் உணவிட்டார், வீட்டில் அப்போது கறியமுது சமைத்து முடிக்கவில்லை. அதனால் உணவை யிட்ட புனிதவதியார் கணவன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றைச் சிவனடியார் இலையில் இட்டார், அடியார் மகிழ்வோடுஉண்டு விடைபெற்றுச் சென்றார்.

பரமதத்தன் உணவுண்ண வீட்டுக்கு வந்தான். புனிதவதியார் அவனுக்கு இலைபோட்டு, சோறும கறியும் பரிமாறினார். மேலும் அவன் அனுப்பிய மாங்

கனியையும் இலையில் வைத்தார். அம் மாங்கனியைச் சுவைத்து மகிழ்ந்த பரமதத்தன், ''இன்னொரு மாம் பழத்தையும் கொண்டு வா'' என்றான். அம்மையார் அறைக்குள் சென்று பரமனை வேண்டினார். அவனருளால்அம்மையாரின் மலர்க்கரத்தில்ஒருமாங்கனிதோன்றியது. அதை அவர் எடுத்துச்சென்று கணவனிடம் கொடுத்தார். பரமதத்தன் அக்கனியைச் சுவைத்து வியப்புற்றான். ''இது நீ முன்னே கொடுத்த கனியை விடப் பன்மடங்கு சுவைமிக்கதாய் இருக்கிறதே; இக்கனி உனக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று கேட்டான்.

கைபிடித்த கணவனிடம் பொய்யுரைத்தல் கூடாது என்பதால் ஈசன் அருளால் அந்தக் கனியைப் பெற்றதைத் தெரிவித்தார், ''நீ கூறுவது உண்மையானால் ஈசனிடம் வேண்டி இன்னொரு மாங்கனியைப் பெற்றுக் கொடு' என்று கூறினான் பரமதத்தன். ''பெருமானே! இன்னொரு கனி தரவேண்டும் இல்லையென்றால் என் சொல் பொய்யாகும்'' என்று புனிதவதியார் வேண்டியதும், அவர் கரத்தில் மற்றொரு மாங்கனி தோன்றியது. அக்கனியை அம்மையார் கணவனிடம் கொடுத்தார். அவன் அதிசயத்தோடு அதனை வாங்கினான். அவன் கரத்துக்கு வந்த கனி உடனே மறைந்து விட்டது.

இந்நிகழ்ச்சியால் பரமதத்தன் பயங்கொண்டான். ''இவள் சாதாரண, பெண் அல்லள். ஆற்றல் மிக்க ஒரு தெய்வம்'' எனக்கருதினான். அவரோடு வாழ விரும்பாமல் விலகிச் செல்ல முடிவு செய்தான். ஒருநாள் மனைவியிடம் ''நான் கடல் கடந்து சென்று பெரும் பொருள் சேர்த்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஒரு கப்பலில் புறப்பட்டுச் சென்றான் பரமதத்தன். அவன் சொன்னபடி அயல்நாட்டில் பெரும்பொருள் சேர்த்தான். ஆனால் காரைக்காலுக்குத் திரும்பாமல் பாண்டிநாட்டுக் கடற்கரைப் பட்டினத்தை அடைந்தான். அங்கே

மற்றொரு மங்கையை மணந்து ஒரு மகளுக்குத் தந்தையாகி வாணிபத்தைத் தொடர்ந்து செய்து வளமாக வாழ்ந்தான்.

பரமதத்தனின் இச்செயலை அறிந்த புனிதவதியாரின் சுற்றத்தார், அவரை அவர் கணவனிடம் சேர்ப்பதே முறை என்று கருதினர். புனிதவதியாரை ஒரு பல்லக்கில் ஏற்றி பரமதத்தன் இருக்கும்ஊரின்எல்லையை அடைந்தனர். புனிதவதியாரை அழைத்து வந்துள்ள செய்தியை அறிந்த பரமதத்தன், மனைவியோடும் மகளோடும் எதிர் சென்று புனிதவதியாரின் திருவடியில் விழுந்து வணங்கினான், அதைக்கண்ட அம்மையார் அச்சமும் நாணமும் அடைந்தார்.

பரமதத்தனோ தன்னால் புனிதவதியாருடன் வாழ முடியாது என்பதைத் தெளிவாக்கினான். ''இவர் இறை அருள் பெற்ற தெய்வப் பிறவி. இவரை மானிடப்பிறவியாகக் கருதி மனைவியாகக் கொண்டு வாழ முடியாது. இத்தெய்வத்தின் சிறப்பை நான் அறிவேன். அதனால் தான் என்மகளுக்கு இவர்பெயரையே சூட்டியுள்ளேன்'' என்று கூறினான்.

இதைக் கேட்ட சுற்றத்தார் செய்வது அறியாது திகைத்தனர். புனிதவதியாரோ, ஈசனைத் தொழுது, ''தசை நிறைந்து அழகோடு விளங்கும் இவ்வுடலை நான் என் கணவர்க்காகவே தாங்கி வந்தேன். இனி இந்த அழகுடல் வேண்டாம். இவ்வுடலின் தசையை நீக்கி உன் திருவடியை அடையப் பேய் வடிவம் எனக்குத் தருக' என வேண்டினார். அக்கணமே தசைநீங்கி அழகு மறைந்து பேய்வடிவம் பெற்றார், புனிதவதியார்.

அம்மையாரைக் கண்ட மக்கள் ''பேய்! பேய்!'' என அலறி அஞ்சி ஓடினர். ''என் உள்ளத்தே ஒளிரும் அருட்பெருஞ்ஜோதி என்னை அறிந்தால், அதுவே எனக்குப்போதும். உண்மை அறியா உலகினர் என்னை

எவ்வாறு அழைத்தாலும் என்ன?'' என்று அம்மையார் கருதினார்.

அம்மையார் அருளிய திருப்பதிகங்களிலும் அவர் தம்மைக் ''காரைக்கால் பேய்'' என்றே குறிப்பிட்டுக் கொண்டார்.

''காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்கால் பேய்தன்
பாடல் பத்தும் பாடியாடப் பாவ நாசமே!''
''காரைக்கால் பேய் செப்பிய செந்தமிழ்''

—மூத்த திருப்பதிகம்

''காரைக்கால் பேய்சொல் பரவுவார்
ஆராத அன்பினோடு அண்ணலைச் சென்றேத்துவார்,
பேராத காதல் பிறந்து!,'

—அற்புதத்திருவந்தாதி

'இவ்வம்மையார் பேய்வடிவம் பெற்றனர் என்பது உடலில் தசை மிகவும் குறைந்து போகவே, எற்புச் (எலும்பு) சட்டகமாக நிலவினர் என்பதை உணர்த்தும் என்று கூறலாம்'' என்று அம்மையாரின் பேய் வடிவத்துக்கு விளக்கம் தருகிறார், சதாசிவப்பண்டாரத்தார்.

அம்மையார் மனத்தினும் விரைந்து சென்று கயிலையை அடைந்தார். எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் அம்மலையில் தம் காலால் ஏறக்கூடாது எனக் கருதி தலையினால் ஏறிச்சென்றார். அவரைச் சிவனார், ''அம்மையே!'' என்று அழைத்து சிறப்பித்தார். அம்மையாரும், ''அப்பா'' என அழைத்து அவர் திருவடியில் விழுந்தார். முக்கண் முதல்வன் ''என்னிடம் நீ எதை வேண்டுகிறாய்?'' என்று கேட்டார்.

அம்மையார் என்ன வேண்டினார் என்பதைச் சேக்கிழார் சிந்தை சிலிர்க்கும் வகையில் தெரிவிக்கிறார்.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டு கின்றார்:
'பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க' என்றார்.

இதைச் செவிமடுத்த சிவனார், ''திருவாலங்காட்டில் நாம் ஆடுகின்ற ஆடலைக் கண்டு ஆனந்தம் கொண்டு எப்போதும் நம்மைப் பாடுவாய்'' என்றார். அம்மையார் தலையால் நடந்து சென்று திருவாலங்காட்டை அடைந்து இறைவனின் திருநடனத்தைக் கண்டு பரவசமுற்றுப் பாடல்கள் பாடினார். அவையே திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகங்கள் இரண்டாகும். அம்மையார் அங்கே சிவனாரின் சேவடிக்கீழ் என்றும் இருந்து இன்புற்றார்.

பின்னாளில் திருஞான சம்பந்தர் திருவாலங்காட்டை அணுகியபோது, அம்மையார் தலையால் நடந்த தலத்தில் தம் கால் வைக்க அஞ்சி, புறத்தேயிருந்த ஊரில் தங்கினார் என்பது அம்மையாரின் பெருமைக்குச் சான்றாகும். இந்நிகழ்ச்சியினால் அம்மையார் சம்பந்தர் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது தெரிகிறது. இவரது காலம் கி. பி 5 அல்லது 6ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதுவர்.

காரைக்கால் அம்மையார் நன்னூல்கள் நான்கு இயற்றினார். அவையாவன: அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு. இவற்றுள் அந்தாதியில் 101 வெண்பாக்கள் உள்ளன. மணிமாலையில் வெண்பாவாகவும் கட்டளைக் கலித்துறையாகவும் அமைந்த

இருபது பாக்கள் உள்ளன. இவை இரண்டும் அந்தாதித் தொடையில் அமைந்தவை, மூத்த திருப்பதிகங்கள் ஒவ்வொன்றும் பதினொரு பாடல்கள் கொண்டவை. ஆக மொத்தம் 143பாக்களை அம்மையார் இயற்றி யுள்ளார். நான்கும் சைவத்திருமுறையில் பதினொராம் திருமுறைக்கண் சேர்க்கப்பட்டுள்ளன.

காரைக்கால் அம்மையார், இறைவன் தம்மைப் பொருட்படுத்தா விடினும் அவரிடம் தாம் கொண்ட அன்பு மாறாது எனக் கூறுகிறார்.

இடர்களையா ரேனும், எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனும் – சுடருருவில்
என்பறாக் கோலத்துஎரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்னெஞ்சு அவர்க்கு.

அறிபவன், அறிவிக்கின்றவன், அறிவு, முதலிய எல்லாமாக இறைவன் இருக்கும் அற்புதத்தை மற்றொரு பாட்டில் அம்மையார் பாடுகிறார்.

அறிவானும் தானே; அறிவிப்பான் தானே!
அறிவாய் அறிகின்றான் தானே! — அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே! விரிசுடர் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்;

"'இறைவன் எங்கே இருக்கிறான் என்னும் வினா வுக்கு வானத்தில் உள்ளான் என்று உரைப்பார் உரைக் கட்டும். ஈசன் உண்மையில் என் நெஞ்சத்தில் இருக் கிறான்'' என்று பெருமிதத்தோடு அறிவிக்கின்றார், அம்மையார்.

வானத்தான் என்பாரும் என்க; மற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம் என்க.—ஞானத்தான்
முன் நஞ்சத் தால்இருண்ட மெய்யொடு சேர்
கண்டத்தான்
என் நெஞ்சத் தான்என்பன் யான்.

இறைவன் திருவுருவத்தை அறியாத அம்மையாரின் ஏக்கத்தைப் பின்வரும் பாடல் நன்கு விளக்குகிறது.

அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு
என்னுரைக்கேன்?
எவ்வுருவோ? நின்னுருவம் ஏது?

அவரே, 'எல்லார்க்கும் இறைவன் சிவனே! எக் கோலம் கொண்டு எம்முறையில் வழிபட்டாலும் அக் கோலத்தில் அவ்வுருவாக அவன் இருப்பான்' என்கிறார்.

''எக்கோலத்து எவ்வுருவாம் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே யாம்''

காரைக்கால் அம்மையாரின் வாழ்வு புனிதமானது! வாக்கும் புனிதமானது!

5. நம்மாழ்வார்

வைணவர்கள் எல்லா ஆழ்வார்களையுமே "'நம்மாழ்வார்'' என உரிமையுடனும் உவப்புடனும் கூறலாம். என்றாலும், 'நம்மாழ்வார்' என்று சிறப்பித்து அழைக்கப்படுபவர், 'ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் ஈன்ற' சடகோபரே! மற்றைய ஆழ்வார்கள் அவயவங்களாகத் திகழ, இவரே அவயவியாகும் சிறப்புப் பெற்றவர். இவர் பேரையும் ஊரையும் ஊரில் பெருகிப் பாயும் ஆற்றையும் நினைத்தாலே, எம்பெருமான் அருள் கிடைக்கும் என்று ஈச்வர முனிகள் போற்றுகிறார்.

திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும்
மருவினிய வான்பொருநல் என்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே, தெளிந்து.

சொட்டை நம்பிகள் என்பவரோ, ''மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும் இனத்தாரை அல்லாது இறைஞ்சேன்'' என்று உரைக்கிறார். இத்தகைய பெருஞ் சிறப்புப் பெற்ற நம்மாழ்வாரின் வரலாற்றை, 'குருபரம்பரை பிரபாவம்' என்னும் நூலின் துணை கொண்டு அறியலாம்.

பைந்தமிழ் வளர்க்கும் பாண்டிய நாட்டில் பொருநைக் கரையில் அமைந்திருக்கும் ஊர்களில் ஒன்று, திருக்குருகூர். அவ்வூரில் வேளாண் குடியில் [திருவழுதிவள

நாடர் என்னும் வைணவச் சான்றோர் வாழ்ந்தார். அவருக்கு மகனாய் அவதரித்தவர் அறத்தாங்கியார்; அவர் மகன் சக்கரபாணியார்; அவர் மகள் அச்சுதர்; அவர் மகன் செந்தாமரைக் கண்ணர்; அவர் மகன் பொற் காரியார். இப்பொற்காரியாரின் புதல்வரான காரியாரே நம்மாழ்வார்க்குத் தந்தையாகும் பேறு பெற்றவர். காரியார், திருவண் பரிசாரம் என்னும் ஊரில் வாழும் திருவாழ் மார்பர் என்பவரின் புதல்வியான உடைய நங்கையை மணந்தார்.

காரியாரும் உடைய நங்கையும் எல்லாச் செல்வங் களையும் எய்தியிருப்பினும் 'மக்கட் செல்வம் இல்லையே' என மனம் வருந்தினர். திருக் குருகூருக்கும் திருவண்பரி சாரத்தும் இடையேதிருக்குக்குறுங்குடி என்னும்திருப்பதி ஒன்றுள்ளது. காரியாரும் உடைய நங்கையும் அப்பதியில் உள்ள கோயிலுக்குச்சென்று எம்பெருமானிடம் தமக்குப் பிள்ளைப் பேற்றை அருளுமாறு வேண்டினர். அன்றிரவு இவ்விருவர் தம் கனவிலும் இறைவன் தோன்றி, ''உமக்கு நம்முடைய அமிசம் கொண்ட ஒரு புதல்வன் பிறப்பான்'' என்று கூறினார். அவ்வாறே வைகாசித் திங்கள், விசாக நன்னாளில் உடைய நங்கையார் ஒரு செல்வனைப் பெற்றெடுத்தார்.

பிறந்த பிள்ளை கண் திறக்கவில்லை; கண்ணீர்விட்டு அழவில்லை; தாயிடம் பால் குடிக்கவில்லை, என்றாலும் இவற்றால் உடல் மெலியவில்லை. பிறந்த குழந்தை ஊரையே வியப்பில் ஆழ்த்தியது. பெற்ற தாயார் உற்ற துன்பமோ அளவிடற்கரியது.

> ''மானேர் விழியார்கள் மக்களழத் தாலாட்டி
> 'ஏன்?ஏன்?' எனச்சென்று எடுத்து முலைப் பாலளிப்ப,
> நானேது செய்தேன்! என் நம்பீ, அழுதுஅமரர்
> தேனே சுரந்த திருமுலைப்பால் உண்கிலையே!''

என்று உடைய நங்கை வருந்தியதாக அழகிய நம்பி கூறுகிறார்.

தம் அதிசயப் பிள்ளையின் நிலை கண்டு வருந்திய பெற்றோர், குழந்தையை எடுத்துக்கொண்டு பொருநையின் தென்கரையில் உள்ள திருக்கோயிலுக்குச் சென்றனர். அங்கே இறைவன் திருமுன் குழந்தையைக் கிடத்திக் குறைதீர்க்குமாறு வேண்டினர். பின்பு அக்கோயிலில் இருந்த ஒரு புளியமரத்தின் கீழே பெற்ற செல்வத்தை விட்டு விட்டு வந்தனர்.

இக் குழந்தைக்குப் பெற்றோர் மாறன் எனப் பெயரிட்டனர். இப்பெயர் காரிமாறன் எனவும் வழங்கப் பட்டது. ஒரு குழந்தை பிறக்கும்போதே அதைப் பிணிக்கும் 'சடம்' என்னும் வாயுவைக் கோபித்து விரட்டியதால் இவர் சடகோபர் என வழங்கப்பெற்றார். பராங்குசன், வகுளாபரணன் என்னும் வேறு பெயர்களும் இவருக்கு உண்டு. சடகோபர் புளிய மரத்தின் அடியில் யோகநிலையில் பதினாறு ஆண்டுகள் இருதார்.

அதே காலத்தில் அதே பாண்டிய நாட்டில் திருக்கோவூர் என்னும் திருப்பதியில் தோன்றியவர் மதுரகவியார். அவர் முக்தித்தலங்கள் ஏழினையும் காண விரும்பிப் புனிதப் பயணம் மேற் கொண்டு சென்றார், அயோத்தியில் அவர் தங்கியிருந்தபோது ஒரு நாள் இரவு தமது பிறந்த ஊர் இருக்கும் திசை நோக்கித் தொழுதார். அப்போது தென்திசையில், ஒரு பேரொளியைக் கண்டு வியந்தார். ''இப்பேரொளி ஏதோ அற்புதத்தைக் குறிக்கிறது'' என்று கருதிய மதுரகவியார், அவ்வொளியின், உண்மையை அறிய அதை நோக்கிப் பயணம் செய்து திருக்குருகூரை அடைந்தார். அதுவரை அவருக்குப் புலனான பேரொளி, இப்போது திருக்குருகூர் கோயிலுள் நுழைந்து மறைந்து விட்டது. அதனால் மதுரகவியார் அக்கோயிலுக்குச் சென்றார்; புளிய

மரத்தடியிலே, பதினாறாண்டு இளைஞரான சடகோபர் யோகத்தில் இருப்பதைக் கண்டார்.

''யோகத்தில் இருக்கும் இவர் நம்மை அறிந்து ஆட்கொள்வாரா?'' என்பதைத் தெரிந்துகொள்வதற்காக மதுரகவியார், சடகோபர் அருகே நின்று இரண்டு கைகளையும் தட்டி ஓசை எழுப்பினார். உடனே சடகோபர் கண் மலர்ந்து, மதுரகவியாரைப் பார்த்தார். இதைக் கண்டு மகிழ்ந்த மதுர கவியார், ''செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?'' என்று கேட்டார். அதற்குச் சடகோபர், ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என்று விடை கூறினார்.

''உயிரற்றதான பிரகிருதியினால் ஆகியுள்ள உடம்பில், அணு போன்று சிறியதாய் உள்ள ஆன்மா வந்து புகுந்தால், அது எதனை அனுபவித்துக்கொண்டு எவ்விடத்தே இன்பம் உண்டு என்று எண்ணியிருக்கும்?'', என்பதே மதுரகவியாரின் வினாவுக்குப் பொருள். ''அந்த ஆன்மா, தான் புகுந்த அந்த உடலின் தொடர்பினால் ஆகும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தினால் வரும் இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டு அவ்விடத்திலேயே 'இன்புற்றேன்! இளைத்தேன்' என்று சொல்லிக் கொண்டே கிடக்கும்'' என்பது நாம்மாழ்வார் கூறிய விடையின் பொருள்.

சடகோபர் தந்த விடையைக் கேட்ட மதுரகவியார், அயோத்தியில் தமக்குத் தோன்றிய பேரொளிப் பிழம்பு இவரே என்று முடிவு செய்து, இவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கினார்; ''ஐயனே! என்னை ஆட்கொண்டருளும்'' என்று வேண்டினார். ஆழ்வார் அவரை ஏற்றுக் கொண்டு, ''நாம் எம்பெருமானை அனுபவித்துப் பாடும் பாடல்களை நீர் படி எடுக்க வேண்டும்'' என்று கூறினார். பின்பு இருந்த இடத்திலேயே இருந்து எல்லாத்

திருப்பதிகளிலும் உறையும் தெய்வமூர்த்திகளைத் தரிசிக்கும் பேறு பெற்ற சடகோபர் செந்தமிழ்ப் பாமாலைகளைத் தொடர்ந்து தொடுத்து வந்தார், அவற்றை மதுரகவியார் படியெடுத்துத் தந்தார்.

இவ்வாறு நம்மாழ்வார், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்னும் நான்கு நூல்களை அருளினார்: திருவிருத்தத்தை இருக்கு வேத சாரம் என்றும், திருவாசிரியத்தை, யசுர் வேதத்தின் சாரம் என்றும், பெரிய திருவந்தாதியை அதர்வண வேதத்தின் சாரம் என்றும், திருவாய் மொழியைச் சாம வேதத்தின் சாரம் என்றும் கூறுவர். இவற்றுள் திருவிருத்தம் நூறு பாடல்களைக் கொண்டது; திருவாசிரியம் ஏழு பாடல்களைக் கொண்டது; பெரிய திருவந்தாதி எண்பத்தேழு பாடல்களைக் கொண்டது; திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாடல்களைக் கொண்டது, இவற்றுள் முதல் மூன்று நூல்களும் நாலாயிர திவ்யபிரபந்தத்துள் மூன்றாம் ஆயிரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன; திருவாய் மொழி, நான்காம் ஆயிரமாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நான்கு தமிழ்மறைகளைச் செய்த நம்மாழ்வார் புளியமரத்தடியில் முப்பத்தோராண்டுகள் வாழ்ந்து எம்பெருமான் திருவடியை அடைந்தார்.

வைணவ ஆசாரியர்கள் பதின்மரைக் கூறும் வரிசையில் இவர் பெயர் நான்காவதாக இடம் பெறுகிறது. முதல் மூவராகிய திருமகள் நாதன், திருமகள், சேனை முதலியார் ஆகியோர் மண்ணுலகைச் சாராத விண்ணுலகினர். அவர்களை நீககிப் பார்த்தால், இவ்வுலகத்தில் தோன்றிய ஆசாரியர்களில் முதலிடம் பெறுபவர் நம்மாழ்வாரே, இறுதியில் இடம் பெறுபவர் இராமானுசர். தமிழ்மறை ஆயிரத்தையும் ஈன்ற முதற்றாய் சடகோபர் என்றும், அத்தமிழ் மறையை வளர்த்த செவிலித்தாய் இராமானுசர் என்றும் பட்டர் ஒரு

பாடலில் கூறுகிறார். ஆழ்வார் என்றுபெயர் இணைக்காமல் தனியே கூறினால் அது நம்மாழ்வாரையே குறிக்கும்.

"திருவாய் மொழியின் திரண்ட பொருள் யாது?" என்று வினவிய போது ஒரு வைணவச் சான்றோர் "ஐம்பொருள் விவகாரமே, திருவாய் மொழி" என்று கூறினாராம். இறைவன் நிலை, ஆத்மாவின் நிலை, இறைவனை ஆத்மா அடையும் நெறி, இறைவனை ஆத்மா அடையும் பொழுது உண்டாகும் தடை, ஆத்மாவுக்கு முடிவான புருஷார்த்தம் ஆகியனவே, ஆத்மாவால் அறியப் பட்டு அடையத் தகுந்த உறுதிப் பொருள்களான ஐம்பொருள்கள் ஆகும். இவற்றை வடமொழியில் 'அர்த்த பஞ்சகம்' என்பர். திருவாய்மொழி இவ்வைம் பொருளை விரித்துரைக்கிறது.

திருவாய்மொழியின் முதற்பாடலே திருமாலின் முதன்மைப் பண்பை விளக்குகிறது. 'எல்லா உயிர்களுக்கும் மேம்பட்ட உயர்வை உடையவன் எவனோ, அவனே அஞ்ஞானம் அழியும்படி ஞானத்தையும் பக்தியையும் எனக்கு அளித்தான். அவன் நித்ய சூரிகளான தேவர்களுக்குத் தலைவன். இத்தகைய எம்பெருமானுடைய துயரில்லாத சுடர் வீசும் திருவடிகளை, என் மனமே நீ வணங்கிக் கடைத் தேறுவாய்?" என்று கூறுகிறது, முதற்பாடல்.

> உயர்வற உயர்நலம் உடையவன் யவன், அவன்
> மயர்வற மதிநலம் அருளினன் யவன், அவன்
> அயர்வறும் அமரர்கள் அதிபதி யவன், அவன்
> துயர் அறு சுடரடி தொழுதெழு என்மனனே!

பெருமாளின் சிறப்புகளைக் கூறி அழைக்கும் நம்மாழ்வார் அவனுடைய திருவிளையாடல்களையும் ஆங்காங்கே சொல்லிக்கொண்டே செல்கிறார். "விண்

ணோர் தலைவனே! கேசவனே! ஆயர் மூதல்வனே! மாயனே! மாதவா!'' என்றெல்லாம் நெஞ்சம் நெக்குருக அழைக்கும் நம்மாழ்வார் கீழ்ப்பாடலில், இராமாவதாரத்தின் போது ஏழு மராமரங்களை ஒரே அம்பினால் துளைத்த வீரச் செயலையும் நினைவு கூர்கிறார்:

விளையேன் வினைதீர் மருந்தானாய்,
　　விண்ணோர் தலைவா! கேசவா!
மனைசேர் ஆயர் குல முதலே!
　　மாமாயனே! மாதவா!
சினையேய் தழைய மராமரங்கள்
　　ஏழும் எய்தாய், சிரீதரா!
இனையாய்! இனைய பெயரினாய்!
　　என்று நைவன் அடியேனே!

திருமாலை எப்போது நினைத்தாலும், தரிசித்தாலும் அவன் அமுதம்போல் இனிக்கும் இயல்புடையவன். நாள் முழுதும், மாதம் முழுதும், ஆண்டு முழுதும், யுகம் முழுதும், அவன் ஆரா அமுதமாகத் தெவிட்டாத இன்பம் தருவான் எனச் சாற்றுகிறார், சடகோபர்:

எப்பொருளும் தானாய் மரகதக் குன்றம் ஒக்கும்.
அப்பொழுதைத் தாமரைப்பூக் கண்பாதம் கைகமலம்;
எப்பொழுதும் நாள்திங்கள் ஆண்டு ஊழிஊழிதோறும்
அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆரா அமுதமே!

"வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேன் அல்லன்' எனக் கூறும் சடகோபர் எம்பெருமானையே எப்போதும் பாடினார். அவனையே நாயகனாகக் கொண்டும் தம்மை நாயகியாகக் கற்பித்துக் கொண்டும் ஆன்மாவின் ஆராக் காதலை வெளிப்படுத்தினார். அந்நிலையில் பராங்குசரான சடகோபர் பராங்குச நாயகி

யாகிப் பரந்தாமனை நினைந்து உருகினார். மாலை வந்து விட்டது. மணியோசை கேட்கக் காளைகளும் பசுக்களும் ஒன்று கூடி வந்து விட்டன. குழலோசை கேட்கிறது. மல்லிகை முல்லைகளை மலர்வித்து வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன; கடல் அலைகள் கொந்தளித்து எழுந்து விண்ணை முட்ட அலறுகின்றன. மாலைக்குரிய எல்லாம் நடக்கின்றன. ஆனால் அவளுடைய கண்ணன் மட்டும் வரவில்லையே! —என்று பராங்குச நாயகி ஏங்கிப் பாடுகிறாள்:

மாலையும் வந்தது. மாயன் வாரான்
மாமணி புலம்ப வலலே றணைந்த
கோல நன்னாகுகன் உகளுமாலோ!
கொடியன குழல்கள் குழலுமாலோ!
வாலொளி வளர்முல்லை கருமுகைகள்
மல்லிகை அலம்பி வண்டாலு மாலோ!
வேலையும் விசும்பில் விண்டலறுமாலோ!
என்சொல்லி உய்வன் இங்கவனை விட்டே!

எம்பெருமானைத் தரிசித்து மகிழ்ந்த சடகோபர், 'யாம் பெற்ற இன்பம் இவ்வுலகம் பெறட்டும்' என்று நினைத்து, ''தொண்டர்களாக உள்ள அனைவரும் வாருங்கள்! மாதவனை இந்த மண்ணிலேயே தொழுது ஆடிப் பாடிப் பயனடைவோம்'' என்று வையத்தாரை அழைக்கிறார்:

கண்டோம்! கண்டோம்! கண்டோம்!
கண்ணுக் கினியன கண்டோம்!
தொண்டீர், எல்லீரும் வாரீர்!
தொழுது தொழுது நின்றார்த்தும்
வண்டார் தண்ணந் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்

பண்தான் பாடி நின்றாடிப்
பரந்து திரிகின்றனவே!

நம்மாழ்வாரின் பாடல்களில் பொதிந்துள்ள கருத்துகள் கடலளவையும் மீறத்தக்கன. எனவே நம்பிள்ளை முதலான சான்றோர் பலர் வியாக்யானம் என்னும் பெயரால், நம்மாழ்வார் பாடல்களின் உட்பொருளை எளியோரும் அறியுமாறு விளக்கியுள்ளனர். அவை சடகோபரின் ஒப்புயர்வற்ற மதிநலத்தையும் பக்தி வளத்தையும் விளக்கும்.

நம்மாழ்வாரின் நன்மொழிகள் மண்ணுலகத்தை விண்ணுலகமாக மாற்றும் மந்திர மொழிகள் எனலாம்.

6. ஆண்டாள்

ஆண்டவனை அடைய விரும்பிய அடியவர்கள் அவனை நாயகனாகக் கருதித் தம்மை நாயகியாகக் கற்பித்துக் கொண்டு நாயகி பாவத்தில் பாடல்களைப் பாடியுள்ளார். நாயன்மார்களும் ஆழ்வார்களும் இராமலிங்க அடிகளும் இவ்வாறு பாடியுள்ளனர். ஆனால் மகளிர்க்கோ இப்படிக் கற்பித்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை. அதனால் நாதனை நாயகனாகக் கொண்டு பாடுதல் அவர்களுக்கு எளிதாகிறது. கண்ணனை நாயகனாகக்கொண்டு ஆண்டாள் பாடிய பாடல்களும், அவருடைய வாழ்க்கையின் வியத்தகு நிகழ்ச்சிகளும் மனிதப்பிறவியைப் புனிதமாக்கும் தன்மை பெற்றவை. நாச்சியார் என வழங்கப் பெறும் ஆண்டாள் செந்தமிழுக்கும் சிறந்த சேவை செய்தவர் ஆகிறார்.

பாண்டிய நாட்டில் உள்ள வைணவத் திருப்பதிகளில் ஒன்று ஸ்ரீவில்லிபுத்தூர். அங்கேதான் விட்டுணுசித்தர் என்னும் பெரியாழ்வார் வாழ்ந்தார். அவர், அவ்வூரில் உள்ள கோயிலில் எழுந்தருளியிருக்கும் வடபத்திரசாயி என்னும் திருப்பெயர் கொண்ட திருமாலுக்கு மலர் மாலைகளும் திருத்துழாய் மாலைகளும் அணிவிப்பதற்காக ஒரு நந்தவனம் அமைத்திருந்தார். ஒரு நாள் சோலையில் பாத்தியமைக்கக் களைக் கொட்டு கொண்டு நிலத்தைச் செப்பனிட்டுக் கொண்டிருந்த போது ஒரு பெண் குழந்தையைக் கண்டார். தாம் கண்

டெடுத்த பெண் மகவைத் தம் மகளாகவே கருதி, அக் குழந்தைக்குக் கோதை என்னும் பெயர் சூட்டி வளர்த்து வந்தார்.

திருமால் அடியாராம் பெரியாழ்வார் வளர்த்தபெண் பிள்ளையான கோதை எம்பெருமானிடம் பேரன்பு கொண்டாள். பெருமானையே தன் நாயகனாகக் கருதி, நாளடைவில் அந்த எண்ணத்தை வளர்த்துக் கொண் டாள். அதனால் தந்தை எம்பெருமானுக்காகத் தொடுத்து வைத்த மாலைகளைத் தான் அணிந்து கொண்டு தான் திருமாலுக்கு ஏற்றவளே என்று எண்ணி னாள். தந்தையார் வருவதற்கு முன் மாலைகளைக் கழற்றித் தன் செயலை அவர் அறியாதபடி மறைத்து வந்தாள்.

ஒரு நாள் பெரியாழ்வார் வழக்கத்துக்கு மாறாக விரைந்து திரும்பி, மாலுக்குரிய மாலையைத் தம் மகள் சூடிக் கொண்டிருப்பதைக் கண்டு சினங்கொண்டு மகளைக் கண்டித்தார். "கோதாய்! உன் செயல் அபசார மானது. இனி இவ்வாறு செய்யாதே'' என்று தெருட்டி னார். மகள் அணிந்தமையால் மாலைகள் மாசுற்றன எனக் கருதி அவற்றை இறைவனுக்கு அணிவிக்கவில்லை. அன்றிரவு வட பெருங்கோயிலின் இறைவன் வடபத்திர சாயி ஆகிய திருமால் பெரியாழ்வாரின் கனவிலே காட்சி தந்தார். ''வழக்கம் போல் இன்று நீ, நமக்கு மாலைகள் கொண்டு வராததன் காரணம் என்ன?'' என்று வினவி னார். பெரியாழ்வார் தம் மகள் செய்த பிழையைக் கூறினார். உடனே திருமால், ''உன் மகள் சூடிக் கொடுத்த மாலையே நம் மனத்துக்குச் சுகம் தருகின்றன. இனிமேல் கோதை சூடிய மாலைகளையே கொண்டுவா'' என்று பணித்து மறைந்தார்.

விழித்தெழுந்த பெரியாழ்வார் திருமால் மொழியை மீண்டும் எண்ணிப் பார்த்தார். ''எம்பெருமான்

இவ்வாறு விரும்புவதால் உலகத்தாரை ஆட்கொள்ள திருமகளே என் ஒரு மகளாக அவதரித்துள்ளாள்'' என்று முடிவு செய்தார். அதனால்'கோதை ஆண்டாள்எனும் பெயர் பூண்டாள். எம்பெருமானுக்கு அணிவிக்க, வேண்டிய மாலைகளை அன்று முதல் ஆண்டாள்தான் சூட்டிக்கொண்டு பிறகு கொடுத்தனுப்பினாள். அதனால் கோதைக்குச் 'சூடிக் கொடுத்த நாச்சியார்' என்னும் பெயரும் ஏற்பட்டது.

ஆண்டாள் எம்பெருமானை நாதனாகக் கொண்டு அந்த எண்ணத்திலே தன்னை மறந்தாள். ஸ்ரீ வில்லிபுத்தூரை திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள வடபெருங் கோயிலே கண்ணனை வளர்த்த நந்த கோபனுடைய மாளிகையாகவும், வடபத்திரசாயியே கண்ணனாகவும், தன்னை இடை நடையும் இடை முடியும் இடைப் பேச்சும் முடை நாற்றமும் உள்ள ஓர் இடைக்குல மடந்தையாகவும் கருதிக் கொண்டு நோன்பு நோற்றாள். அதன் விளைவாகப் பிறந்ததே திருப்பாவை. மேலும் தன் காதல் உணர்வுகள் வெளிப்படப் பற்பல பாடல்கள் பாடினாள். அவற்றின் தொகுதியே "நாச்சியார் திருமொழி' யாகும்.

ஆண்டாள் திருமணப் பருவம் அடைந்த போது 'மானிடர்க்கென்று பேச்சுப் படில் வாழமாட்டேன்' என்று கூறினாள். அவள் மனத்தை அறிந்த அரங்கன் பெரியாழ்வாரின் கனவிலே தோன்றி. ''உம் மகளைத் திருவரங்கம்'பெரிய கோவிலுக்கு அழைத்து வாரும். நாம் அவளை ஏற்போம்'' என்று உரைத்தான். பெரியாழ்வார் அச்சொற்படி சூடிக் கொடுத்த சுடர்க் கொடியை ஒரு பல்லக்கில் ஏற்றி அழைத்துச் சென்றார். இதனைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன், கோதையின் திருமணம் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்தான்; ஸ்ரீவில்லி புத்தூர் முதல் திருவரங்கம் வரை பல்லக்குச்

செல்லும் பாதை முழுதையும் மாலை மணி முதலிய வற்றால் அலங்கரிக்கச் செய்தான். பின்பு பாண்டியனும் தன் படையுடன் பல்லக்கோடு சென்றான்.

பல்லக்குத் திருவரங்கம் பெரிய கோயிலை அடைந் தது. பெரியாழ்வார் தம்மகளை அழைத்துச் சென்று, அரங்கன் முன்னிலையில் நிறுத்தினார். உடனே இரும் பைக் காந்தம் இழுப்பதைப் போலப் பெருமாளின் பேரழகு கோதையை இழுத்தது. ஆண்டாள் எம்பெரு மான் அருகில் சென்று அவனோடு இரண்டறக் கலந்து விட்டார்.

பெரியாழ்வார், தாம் வளர்த்த பெண்ணை எம்பெருமான் இவ்வாறு கவர்ந்து கொண்டதால் அடைந்த மனத்துயரை வெளிப்படுத்தி ஒரு பாடல் வழங்கியுள்ளார்.

ஒருமகள் தன்னை யுடையேன்
  உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
  செங்கண்மால் தான்கொண்டு போனான்
பெருமக ளாய்க்குடி வாழ்ந்து
  பெரும்பிள்ளை பெற்ற அசோதை
மருமக ளைக்கண்டு உகந்து
  மணாட்டுப் புறஞ்செய்யுங் கொல்லோ!

ஆண்டாளின் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டு என்பர். அதிலும் திருப்பாவையை ஆண்டாள் கி. பி. தில்731இல் பாடினார் எனக் கூறுவர்.

ஆண்டாள் பாடல்கள் நாலாயிரதிவ்விய பிரபந்தத் தில் இடம் பெற்றுள்ளன.

திருமாலே முழுமுதற் கடவுள் என்பதை ஆண்டாள் அறிவாள், எனினும் காதலால் கலங்கியபோது அந்த

அறிவும் பேதலிக்கிறது. 'எனக்கு அருள் செய்' என்று எம்பிரானிடம் கோருவதற்கு மாறாக, சிறு தெய்வமான மன்மதனைப் பணிந்து தன்னைத் திருமாலிடம் சேர்ப்பிக்குமாறு வேண்டுகிறாள்.

வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை யாழிசங்கு உத்தமர்க்கு என்று
மன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே!

சிறுமியர் கட்டும் சிற்றிலைச் சிதைத்தல் சிறுவரின் இயல்பு. தீராத விளையாட்டுப் பிள்ளையான கண்ணுக்கு இத்தகைய குறும்புச் செயல்கள் கரும்பைச் சுவைப்பதைப் போல எளியன; இனியன; அதனால் ஆண்டாள் ''எம் சிற்றிலைச் சிதைக்காதே'' என்று அவனிடம் வேண்டுகிறாள்.

பெய்யுமா முகில்போல வண்ணா! உன்றன்
பேச்சும் செய்கையும் எங்களை
மையல் ஏற்றி மயக்க, உன்முகம்
மாய மந்திரம் தான்கொலோ!
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு உன்னை
நோவ நாங்கள் உரைக்கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய்! எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே!

காதல் வெள்ளம் கரை கடந்து புரண்டதால் ஆற்றாமை மிகுந்த ஆண்டாள் ''குயிலே! என் கிளியை உன்னுடன் தோழமை கொள்ளச் செய்வேன். நீ என்

இறைவன் என்னிடம் வரக் கூவுக'' என்று வேண்டுகிறாள்.

மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத் தூர்உறை வான்றன்
பொன்னடி காண்பதோர் ஆசையி னாலென்
பொருகயற் கண்ணிணை துஞ்சா;
இன்னடி சிலொடு பாலமுது ஊட்டி
எடுத்தஎன் கோலக் கிளியை
உன்னோடு தோழமைக் கொள்ளுவன், குயிலே
உலகளந் தான்வரக் கூவாய்.

எம்பெருமானை அடைந்து அவன் திருவாயைச் சுவைக்கும் ஆசை கொள்கிறாள், ஆண்டாள். அந்தத் திருவாய் மிகுந்த சுவைமிக்கதாக இருக்கும் என எண்ணினாலும், 'அச்சுவை எத்தகையது?' என அறிய விரும்புகிறாள். திருவாயில் அடிக்கடி திகழ்ந்து அதன் சுவை முதலியற்றை அறிந்தது வினவ அதனால் அதனிடம் 'சுவை எத்தகையது' என வினவ விழைகிறாள், ஒரு பருவப் பெண் ஆடவனின் வாய்ச்சுவையைக் கேட்டால், அந்த வாயில் முத்தமிட்டு அனுபவிக்க இச்சை கொள்கிறாள் என்றாகும், அதனால் முதலில், ''திருவாய் மணம் எத்தகையது?'' என்று கேட்டு, பின்னர் ''வாய்ச்சுவை எத்தகையது?'' என்று கேட்கிறாள், அடுத்த நொடியே அந்த நாணம் மறைந்து காமம் பெருக, ''வாய்ச்சுவையும் நாற்றமும் எத்தகையன?'' என்று முதலில் இதழ்ச் சுவையைக் கூறித் தன் இதயதாபத்தை வெளிப்படுத்தி விடுகிறாள்.

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே!

நனவிலே நடக்காத திருமணத்தை ஆண்டாள் கனவிலே கண்டு இன்புறுகிறாள்; திருமண மகிழ்ச்சிகள் அனைத்தையும். ஒன்று விடாமல் கனவிலே கண்டு களிக்கும் ஆண்டாள் அந்த அனுபவத்தை நாமும் ஓரளவு உணருமாறு அருமையான பாக்களாகத் தருகிறாள்.

''பூம்புனை கண்ணிப் புனிதனோடு என்தன்னைக்
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்!''
''மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன், தோழீ! நான்!''

கன்னிப் பெண்கள் தாம் கருதிய நாயகனை அடைய மார்கழித் திங்களில் நீராடி நோன்பு நோற்பது மரபு. இந்த நோன்பு தொன்று தொட்டு நம் நாட்டில் இருந்துவருவது, ஆய்ப்பாடியின் செல்வச் சிறுமிகளில் ஒருத்தியாகத் தன்னைக் கருதிக் கொண்டு ஆண்டாள் பாடிய திருப்பாவை இன்றும் மார்கழி மாதத்தில் பட்டி தொட்டி முதல் பட்டணம் வரை முழங்கக்காண்கிறோம். பாவை நோன்பை எப்படி நோற்பது என்பதை ஆண்டாள் ஒரு பாட்டில் அறிவுறுத்துகிறாள்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்!
செய்யாதென செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்!

'நோன்பு நோற்கின்றவர் நெய்யுண்ணல் போன்ற நமக்கு இன்பம் தருவனவற்றை நீக்கி இறைவனுக்கு

இன்பம் தருவனவற்றையே மேற்கொள்ள வேண்டும் என்பதைப் இப்பாடல் கூறுகிறது.

மாலான மணிவண்ணன் ஒரு சிங்கம் போல எழுந்து வந்து சிம்மாதனத்தில் வீற்றிருக்க வேண்டும் என்று ஆண்டாள் கூறும் பாடலில் சிங்கத்தின் தோற்றத்தைக் கூறித் திருமாலின் ஏற்றத்தை உணர வைக்கிறாள்.

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா தனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்

இயற்கை அழகை எடுத்துச் சொல்லுவதிலும் ஆண்டாளின் கவியாற்றலைக் காண்கின்றோம்.

"உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய்
கூம்பினகாண்!"
'கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தங்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?''
''வந்தங்கும் கோழி அழைத்தன காண்! மாதவிப்
பந்தர் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்!

ஆண்டாளின் பக்தி ஞான பக்தி பிற வைணவ அடியார்களின் ஞான பக்தியினும் தனி சிறந்ததாகும். வியாக்கியான வேந்தரான பெரிய வாச்சான் பிள்ளை, ஆண்டாளின் அளப்பரிய ஞான பக்தியைப் பிறருடைய ஞான பக்தியுடன் ஒப்பிட்டு வியப்படைகிறார்.

உலகில் ஞான பக்தி வைராக்கியங்களுடன் திகழ்வார் பலருள்ளும் மிகவும் உயர்ந்தவர்கள் ரிஷிகளும் ஆழ்வார்களுமே ஆவார். ரிஷிகளையும் ஆழ்வார்களையும் ஒப்பிட்டால், ரிஷிகளின் பக்தி அணு அளவாகும். ஆழ்வார்களின் பக்தி மலையளவாகும். மற்றைய ஆழ்வார்களின் பக்தியையும் பெரியாழ்வாரின் பக்தியையும் ஒப்பிட்டால் மற்றையவர் பக்தி அணுவளவாகும்; பெரியாழ்வாரின் பக்தி, மலையளவாகும். பெரியாழ்வாரின் பக்தியையும் ஆண்டாளின் பக்தியையும் ஒப்பிட்டால், பெரியாழ்வாரின் பக்தி அணுவளவாகும்; ஆண்டாளின் பக்தி மலையளவாகும்.

பெரிய வாச்சான் பிள்ளையின் கூற்றுப்படி, ஆண்டாளின் பக்தி, ஆழ்வார்கள் அனைவருடைய பக்தியினும் ஆயிரங்கோடியளவு பெரியது. அரியது அதனால் தான் உபதேச ரத்தின மாலை ஆண்டாளை,

"அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையள்''

என்று போற்றிப் புகழ்கிறது.

ஆண்டாள் இறைவனைத் தன் அன்பால் ஆண்டாள். இன்றமிழைத் தன்கவிப் பண்பால் ஆண்டாள்.

7. கம்பர்

''கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு''

சொந்தமிழ் நாட்டின் சிறப்புகளைக் கூறவந்த பாரதியார், கம்பன் பிறந்ததால் கல்வியில் சிறந்த தமிழ் நாடு பெருமையுற்றதைக் கூறுகிறார். கம்பர் தமிழ் இலக்கிய உலகை ஒளியுறச் செய்த உதய சூரியன், ஓராயிரம் வருடம் ஒய்ந்து கிடந்த பின்னர் வாராது போல வந்த மாக்கவிஞர்: மற்றக் கவிஞர்கள் இவர் முன் குன்றுகளாகக் குன்றிப்போக இமயமாக எழுந்து நிற்கும் புலவர் திலகம், கம்பர்.

'கல்வியிற் பெரியவர் கம்பர்'
'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'
'கம்ப நாடகம்'
'கம்ப நாடன் கவிதையிற்போல்'
'கற்றோர்க்கு இதயம் களியாதே'

என்னும் பழமொழிகளும் பாடல் வரிகளும் கம்பரின் அளப்பரிய கவிப்புலமையை உரைக்கின்றன. மானுடனாக வால்மீகி சித்திரித்த இராமனை ஆண்டவனாகக் காட்டி மனித குலத்தைப் புனிதப்படுத்திய புதுமைப் புலவர் கம்பர். கவிச்சக்கரவர்த்தியிடம், 'மன்னவனும் நீயோ, வளநாடும் நின்னதோ' என்று சீறிப் பேசும்

தன்மானத் தந்தை கம்பர். எண்ணறிய புலவர்கள் விளங்கும் உலகிலே பன்மீன் நாப்பண் பான்மதி போல உயிர்களைக் குளிர்விக்கும் உயர் கவிஞர் கம்பர்.

கம்பர் காளி கோயிலில் பூசை செய்யும் எளிய குடும்பத்தில் தோன்றியவர். இவர் பிறந்த ஊர் சிரணி சோழ நாட்டுத் திருவழுந்தூர். தந்தையார் பெயர் ஆதித்தன் எனக் கூறுவர். கம்பர் என்பது ஏகம்பன் என்னும் சிவபெருமான் பெயரில் முதல் குறைந்தது என்பர். இளமையில் கம்பங் கொல்லையைக் காத்த பணி மேற்கொண்டதால் கம்பர் எனப்பட்டார் என்பதும் உண்டு. காளி கோயிலருகே ஒரு கம்பத்தின் கிழ்க், கண்டெடுக்கப் பட்டமையால் 'கம்பர்' எனப் பெயரிட்டனர் எனவும் கூறுவர். கவிபாடும் புலமை பெறும் முன் போதிய அறிவற்றுக் கம்பம் போல் நின்றமையால் கம்பன் என அழைத்தனர் என்பதும் உண்டு. இவ்வாறு கம்பர் என்னும் பெயருக்குக் காரணம் பல கூறுவர்.

திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளலால் கம்பர் ஆதரிக்கப்பட்டார். அதனால் தம் காவியத்துள் ஆயிரம் பாடலுக்கு ஒருமுறை சடையப்பரின் கொடையையும் பிறகுணங்களையும் குறிப்பிட்டு நன்றி தெரிவித்தார். கம்பர், இராமன் முடிசூடிய காட்சியைக் கூறும்போது,

> ''விரிகடல் உலகம் ஏத்தும்
> வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
> மரபுளோர் கொடுக்க, வாங்கி
> வசிட்டனே புனைந்தான் மௌலி''

எனக் குறித்தது, சடையப்பர் புகழுக்கு மணிமுடியாக ஒளிர்ந்தது.

கம்பர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது பதின்

மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். சிலர் இவர் ஒன்பதாம் நூற்றாண்டினர் எனக்கூறுவர். கம்பர் குலோத்துங்கனிடம் மனக்கசப்புற்றுச் சோழ நாட்டை நீத்து, ஒரங்கல் நாட்டையாண்ட பிருதாபருத்திரனின் ஆதரவில் சிறிது காலம் இருந்து பின்பு சோழ நாடு மீண்டார் எனவும் கூறுவர். கம்பருக்கு அம்பிகாபதி என்னும் மகன் இருந்தான். புலிக்குப் பிறந்த பெரும்புலியான அம்பிகாபதி, சோழர் மகள் அமராவதியைக் காதலித்தான். சோழன் இக்காதலை எதிர்த்ததனாலே அம்பிகாபதியும் அமராவதியும் இறக்க நேர்ந்தது. அம்பிகாபதி, 'அம்பிகாபதிக் கோவை' எனும் சிற்றிலக்கியம் இயற்றினான்.

ஒரே மகனை இழந்து துடித்த கம்பர் தம் துயரத்தை இராமனைப் பிரிந்த தசரதன் மூலமும், இந்திரசித்தை இழந்த இராவணன் மூலமும் வெளிப்படுத்தினார். மகனின் மறைவுக்குப்பின் கம்பர் பாண்டிநாடு சென்று நாட்டரசன் கோட்டையில் தங்கி அங்கேயே உயிர் விட்டார். கம்பரின் சமாதி அங்கேயுள்ளது.

கம்பர் இறந்த பின்னரே மற்றக் கவிஞர்கள் மதிப்புப் பெற்றனர் என்பதை பின்வரும் இரங்கற்பா கூறும்:

**''இன்றோகம் கம்பன் இறந்தநாள்; இப்புவியில்
இன்றோகம் புன்கவிகட்கு ஏற்றநாள் – இன்றோதான்
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல் வாங்கும் நாள்.''**

இப் பாடல் வாணிதாதன் பாடியது என்பர். கம்பர் இறந்தமையால் கலைமகள் மங்கல அணி இழந்தாள் எனும் கூற்றே கம்பரின் சிறப்பைக் கூறும்.

மன்னரால் போற்றப்பட்ட கம்பர் மக்களாலும் போற்றப் பட்டார் என்பது தெரிகிறது. ஒளவையாரை

யும் கம்பரையும் இணைத்து பேசும் கதைகள் பல உண்டு. ஔவை கூழுக்குப்பாட, கம்பர் பொன்னுக்குப் பாடினாலும் அவர் ஒரு மக்கள் கவிஞராகவே திகழ்ந் தார்.

கம்பர் தம் இராமாயணத்தைப் பதினைந்தே நாளில் எழுதி முடித்தார் என்பர். கம்பர் இரவில் வடமொழிப் புலவரிடம் வால்மீகி இராமயணம் பற்றி ஆராய்ந்து, மறு நாள் பகலில் எழுநூறு கவிதைகள் எழுதினார். இவ்வாறு பதினைந்து நாளில் காவியத்தைப் பாடி முடித்ததாக ஒரு பாடல் கூறுகிறது,

"'விழுந்த ஞாயிறு எழுவதன் முன்மறை
வேதியருடன் ஆராய்ந்து
எழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி
பாடினது எழுநூறே.''

கம்பர் வால்மீகியைத் தழுவி எழுதினாலும் தமிழ்ப் பண்பாட்டுக் கேற்பப் பலமாற்றங்கள் செய்தார். இராமனும் சீதையும் திருமணத்திற்கு முன்னரே காதல் கொண்டதாகக் கூறுகிறார். அண்ணலும் நோக்க அவளும் நோக்கிய காதல் காட்சி வால்மீகி நூலில் இல்லை. கம்பரைப் பின்பற்றியே துளசிதாசரும் தம் இராமாணத்தில் இராமன்-சீதை காதலைக் காட்டினார். சீதையைக் கவர்ந்து சென்ற இராவணன், சீதையைக் கைகளால் பற்றித் தூக்கிச் சென்றான் என்று வால்மீகி வரைந்தார். சீதையின் உயர்வை இது சிதைக்கும் என எண்ணிய கம்பர், சீதையை அவளிருந்த குடிசையோடு தரையைக் கீறிப் பெயர்த்து எடுத்துச் சென்றான் இராவணன் என மாற்றிச் சீதையின் கற்பைச் சிறப்பிக் கிறார். கம்பரின் திருத்தங்கள், மாற்றங்கள் தாமே புகுத்திய புதிய நிகழ்ச்சிகள் யாவும் காப்பியத்தின் உயர்வைப் பன்மடங்கு பெருக்கின. இது பற்றியே

இலங்கை வி. செல்வநாயகம். இராமனிடத்திலே தீராத அன்பு கொண்ட கம்பர் உள்ளத்தில் அக்கதை ஆரிய நாகரிகத்துக்குரிய அமிசங்கள் பலவும் நீங்கப் பெற்றுச் சோழர் காலத்துத் தமிழ் நாட்டிற்குரிய ஒரு கதையாகவே பரிணமித்தது'' எனப் பாராட்டுகிறார்.

கம்பர் தம் நூலுக்கு 'இராமாவதாரம்' என்று பெயரிட்டார். எனினும் இது கம்பராமாயணம் என்றே வழங்கப்பெறுகிறது. இதில் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என்னும் ஆறு காண்டங்கள் உள்ளன. இவற்றுள் மொத்தம் 113 படலங்களும் 10500 பாடல்களும் உள்ளன. ஏழாவது காண்டமான உத்தர காண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினார் எனவும் வாணிதாதர் பாடினார் எனவும் கூறுவர்.

கம்பர் தம் நூலைத் திருவரங்கத்தில் அரங்கேற்றினார். அங்கே, வைணவ ஆசாரியரான நாதமுனிகள் கம்பருக்குக் 'கவிசக்கரவர்த்தி' என்னும் பட்டமளித்ததாக ஒரு கதையுண்டு.

கம்பர், இக்காப்பியம் தவிர, ஏரெழுபது, சடகோபரி அந்தாதி, சரசுவதி அந்தாதி ஆகியவற்றை இயற்றினார்.

கம்பர் தமது காப்பியத்தில் கூறுதல் போலவே, 'தென் சொற்கடந்தான்; வடசொற் கடற்கெல்லை தேர்ந்தான். கம்பர் வாக்கைப் பயன்படுத்தி, அவர் ஒரு 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய. கவிஞர்' என்றும், 'வடமொழி தென்மொழிக் காப்பிய நயங்களாகிய பொன்மையில் தம் சித்திரக்கோலைத் தோய்த்துத் தம் காப்பிய ஓவியத்தை வரைந்தவரே கம்பநாடர்' என்றும், "தெய்வப் புலவர் கம்பர்' என்றும் தம் நூலில் புகழ்கிறார், மு. இராகவையங்கார்.

கதை அமைப்பு காவியக் கட்டுக்கோப்பு, பாத்திரப் படைப்பு, நாடக பாவம், கவிதை நயம் கற்பனை வளம் ஆகியன நிறைந்த கம்பராமாயணத்தின் சிறப்பினைச் சில பாடல்கள் மூலம் அறிந்து மகிழ்வோம்.

ஒரு நாடு எப்படியிருக்க வேண்டும் என்று கம்பர் செய்த கற்பனையே கோசலநாட்டு வருணனையாக அமைந்தது.

''வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லையோர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரை இலாமையால்
ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.''

சூர்ப்பணகை பேரழகியாக உருக்கொண்டு மென்மையும் மேன்மையுமாக வந்து வனப்பினை, அதற்குரிய பஞ்சுச் சொற்களால் கொஞ்சும் சந்தத்தால் இசைக்கிறார், கம்பர்.

''பஞ்சுஒளிர் விஞ்சுகுளிர்ப் பல்லவம் அனுங்க,
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி,
அஞ்சொல்இள மஞ்ஞைஎன அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.''

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றதை அறிந்து இராமன் மனம் கவன்று, மருண்டு மயங்கிய நிலையில் உலகமே சுழல்வது போன்ற காட்சியை விளக்கும் கம்பரின் கவிதையைப் படிக்கும்போதே நம் முன்னுள்ள பொருள்கள் சக்கரமாகச் சுழலும்:

''மண் சுழன்றது; மால் வரை
சுழன்றது; மதியோர்
எண்சுழன்றது; சுழன்றஅவ்
வெறிகடல் ஏழும்;

விண் சுழன்றது; வேதமும்
சுழன்றது; விரிஞ்சன்
கண் சுழன்றது; சுழன்றது
கதிரொடு மதியும்.''

'பேணி வளர்த்த தமையனைப் பிரிந்து, உப்பிட்டவரை உதறித் தள்ளி, அண்ணனை எதிர்ப்பவன் ஆண்டவனேயானாலும் அவனுக்கு அடங்கி வாழமாட்டேன்' என்று கும்பகர்ணன் நவிலும் பாடலில் நன்றிப் பண்பும் நற்கலிப்பண்பும் ஒன்றி உறவாடக் காணலாம்:

''செம்பிட்டுச் செய்த இஞ்சித்
திருநகர்ச் செல்வம் தேறி
வம்பிட்ட தெறியல் எம்முன்
உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னம் கொண்ட
புண்ணுடை நெஞ்சோடு ஐய,
கும்பிட்டு வாழ கில்லேன்
கூற்றையும் ஆடல் கொண்டேன்.''

ஒன்றைச் சொல்லும்போது புதுமையாக, பிறரது கவனத்தைக் கவரும் முறையில் கூறுவது கம்பர் பாணி; இராமன் வில்லை முறித்ததை, ''எடுத்தது கண்டனர். இற்றது கேட்டனர்'' என்றார். ''தோள் கண்டார் தோளே கண்டார்'' என்று சொல்லி இராமனின் அழகு எல்லையற்றது என்பதைப் புரிய வைக்கிறார். ''சீதையைக் கண்டேன் அல்லேன்; கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்'' என்று புதிர் போட்டு விளக்குகிறார். கம்பரின் புதுமைச் சொல்லோவியங்கள் எண்ணில. அவற்றைப் படித்தாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும், நினைத்தாலும் அமுதவெள்ளம் அகத்தே நிறையும்.

கம்பர் வாழ்ந்த காலத்திலிருந்து இன்று வரை கம்ப ராமாயணத்தின் செல்வாக்கு வளர்ந்து வருகிறது. மற்றக் கவிஞர்கள் எவரையும்விடக் கம்பரையே தமிழர்கள் போற்றிப் பூசிக்கின்றனர். நகர்தோறும் கம்பன் கழகம்; ஊர்தோறும் கம்பர் கவியரங்கம்; சிற்றூர் தோறும் கம்பர் பட்டி மன்றம்! கம்பர் விழாவில் பாமரன் முதல் பண்டிதர் வரை, ஆண்டி முதல் அதிகாரி வரை, தளர் நடைக் குழவி முதல் தள்ளாடும் கிழவர் வரை—எல்லோரும் கூடுகின்றனர்; 'கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க' என்று பாடுகின்றனர்.

ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த ஒரு கவிஞனைப் பிற்கால நவநாரிக மக்கள் நேசிப்பதும் பூசிப்பதும், அவன் காப்பியத்தை இன்றும் படித்தும், விளக்கியும் பரவசப்படுவதும், உலக நாடுகள் வேறெங்கும் காணாத புதுமைகள்! இலக்கியத் திறனாய்வாளரான எஸ். மகராஜன், ''உலகத்திலேயே வேறொரு நாட்டில் இவ்வளவு பழமையான கவிஞன் இருபதாவது நூற்றாண்டு மக்களுடைய இதயத்தை இப்படி ஆட்கொண்டதில்லை'' என்று ஆனந்தம் பொங்க, 'தெய்வ மாக்கவி' எனும் தம் நூலில் கூறுகிறார்.

8. அருணகிரிநாதர்

''அவனே எம் குலதெய்வம்! அவனே எம் உயிர்த் துணைவன் ஆகும்! நாளும், அவன் கழலே வாழ்த்துவோம்! அவனருளே நாடுவோம்!'' என்று அருணகிரிநாதரின் புகழைப் பாடுகிறார், தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை. திருப்புகழைப் பரப்புவதையே திருத்தொண்டாகக் கொண்ட இத்தணிகைமணி போல, அருணகிரிநாதரைத் தம் இறைவனாகக் கொண்டு வழிபாடு செய்யும் மக்கள் எண்ணிக்கை கடல் மணலின் எண்ணிக்கை போலாம். திருப்புகழ் மூலம் திருமுருகனின் அருட்புகழைப் பாடிய அருணகிரிநாதர் முருகனடியார்க்கு இறைவன். சந்தப் பாடல் என்னும் இசையின்பம் நிறைந்த பாடலை முதன்முதலில் இயற்றிச் செந்தமிழுக்குச் சிறப்பளித்த செம்மல். இவரைப் பின்பற்றிப் பிற்காலத்தில் ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் இறைவர்க்குத் திருப்புகழ் இயற்றிப் பெருமை பெற்றுள்ளவர்.

தமிழகத்தின் நடுநாட்டில் உள்ள திருவண்ணாமலை என்னும் சைவத்தலத்தில் தோன்றியவர் அருணகிரிநாதர். இவர் தோன்றிய காலத்தில் பிரபுடதேவமாராஜன் என்பவர் ஆண்டு வந்தமை தெரிகிறது. இந்த அரசன் காலம் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இதுவே அருணகிரியார் வாழ்ந்த காலம் என்று அறிகின்றோம். அருணகிரியார் பிறந்தகுலம்,

பெற்றோர் பெயர், இளமை நிகழ்ச்சிகள் முதலியன எவையும் தெரியவில்லை. இவர் இயற்றிய திருப்புகழ் பாக்களிலிருந்து தேவாரம் முதலிய சைவ மறைகளையும் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் இவர் கற்றுத் தேர்ந்தவர் என்று உணர முடிகின்றது.

அருணகிரியார் இளமையில் சிற்றின்பம் ஒன்றே இன்பமாகக் கருதி வேசியர் வலையில் வீழ்ந்து, தம் பொருள் முழுவதையும் இழந்தார். அந்த நிலையிலும் பரத்தையர் தொடர்பு தரும் இழிவைக் கருதாது மேலும் பொருள் தேடி, அப்பொருளை விலைமகளிர்க்கே வீணாக்கினார். அதனால் வளமை மறைந்து வறுமை மிகுந்தது; உடல் நலம் தளர்ந்து, பல பிணிகள் வளர்ந்தன. சுற்றத்தாரும் மற்றையாரும் பழிக்கும் நிலையடைந்தார். 'சிங்கார மங்கையரின் தீ நெறி போய்' உடலும் உணர்வும் மங்கிய நிலையில் தம் பிழைகளை உணர்ந்தார். 'இத்தனை பிழைகளுக்கு இடமான இந்த உடலை இனிமேலும் தாங்கேன்' என்று மொழிந்து திருவண்ணாமலைக் கோயிலின் கோபுரத்தில் ஏறி நின்று, தம் உயிரை மாய்த்துக் கொள்ள அங்கிருந்து கீழே குதித்தார். அப்போது முருகப்பெருமான் அவரைத் தம் திருக்கையால் பிடித்துத் தாங்கி நிலம் மீது நிறுத்தி, தம் வேல் கொண்டு இவரது நாவிலே ஆறெழுத்தைப் பொறித்து, முத்தமிழ் ஞானத்தை அளித்தருளினார். இந்நிகழ்ச்சியை 'அருணை நகர்மிசை கருணையோ டருளிய இரு சரணமும் மறவேனே', 'அண்டர்கள் அறியா முத்தமிழ் ஊட்டி' என்பன போன்ற பாடல்களில் இவர் நினைவு கூர்ந்துள்ளார்.

முத்தமிழ் ஆற்றல் பெற்ற அருணகிரிநாதருக்கு முதற் பாடல் பாட ''முத்தைத் தரு பத்தித் திருநகை'' என்று எடுத்துக் கொடுத்தான் முருகன். அவன் திருவடியே துணையாகக் கொண்டு அவன் எடுத்துக்

கொடுத்த முதலடியைத் தொடர்ந்து இவர் எண்ணம் இனிக்கும் வண்ணப்பா பாடினார்: அதன்பின் முருகன் உறையும் திருவிடங்கள் பலவற்றுக்கும் சென்று திருப் புகழ் பாடல்கள் பாடினார். பாடல்களில் தாம் மங்கையர் மயக்கத்தில் மயங்கிப் புரிந்த பிழைகளை கூறி, முருகன் தன்னை ஆட்கொண்ட பெருமையை விளக்கி, அவன் அருள் தொடர வேண்டினார். அருணகிரிநாதரின் புகழ் தமிழகம் முழுவதும் பரவியது. மக்கள் இவரைப் போற்றியது போல, திருவண்ணாமலைப் பகுதியை ஆண்ட மன்னன் தேவமாராஜனும் போற்றி இவர் பக்த னானான்.

திருவண்ணாமலையில் சம்பந்தாண்டான் என்னும் ஒரு சக்தி உபாசகன் இருந்தான். இவன் பிரபுட தேவ மகாராஜனுக்கு நண்பனாகத் திகழ்ந்தான். மாராஜன் இப்போது அருணகிரிநாதரின் நட்பைப் பெற்று, அதுவே பெரிதெனக் கொண்டாடியதை இவனால் பொறுக்க முடியவில்லை. அருணகிரி யாரினும் தானே ஆற்றல் பெற்றவன் என்பதை அரசனுக்கு உணர்த்த விரும்பி னான். அதனால் ''அரசே! தங்கள் முன்னே, எம் இரு வரில் யார் வழிபடும் தெய்வத்தை நேரில் வரவழைக் கிறாரோ அவரையே சிறந்தவராக ஏற்றுக்கொண்டு அவருக்கே நீங்கள் சிறப்புச் செய்ய வேண்டும். என் இதய தேவதையை வரவழைக்க நான் சித்தமாக இருக் கிறேன்'' என்று சம்பந்தாண்டான் கூறினான். அரசன் இதனை அருணகிரியாருக்குச் சொல்ல, அவரும் சம்மதித் தார்.

இருவரும் போட்டிக்காக ஒருநாள் அரசன் சபை யைக் கூட்டினான். முதலில் சம்பந்தாண்டான் தேவியை வரவழைக்க முயன்று தோற்றான். பின்னர் அருணகிரி யார் தம்மை ஆட்கொண்ட ஆறுமுகனை நேரில் வரு மாறு அழைத்து ஒரு பாடல் பாடினார்:

''அதல சேடனாராட, அகில மேரு மீதாட
அபின காளி தானாட-அவளோடன்(று)
அதிர வீசி வாதாடும் விடையில் ஏறு வாராட,
அருகு பூத வேதாளம்-அவையாட
மதுர வாணி தானாட மலரின் வேதனா ராட
மருவு வானுளோ ராட-மதியாட
வனச மாமியா ராட நெடிய மாமனாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
... ...
உதய தாம மார்பான ப்ரவுட தேவமாராஜன்
உளமு மாட வாழ் தேவர் பெருமாளே''

அருணகிரியார் அகமுருகிப் பாடியதும் ஆறுமுக வடிவேலன் அணிமயிலேறி வந்து சபையிலிருந்த அனைவர்க்கும் காட்சியளித்து மறைந்தான். இதனால் அருணகிரியாரின் புகழ் வளர்ந்தது; இவரிடம் சம்பந்தாண்டான் கொண்ட பொறாமையும் வளர்ந்தது.

சம்பந்தாண்டானுடன் போட்டியிட்டு வென்றதைப் போலவே அருணகிரியார், வில்லிபுத்தூரருடனும் போட்டியிட்டு வெல்ல நேர்ந்தது. பாரதத்தைப் பைந்தமிழ்க் காப்பியமாக்கிய ஆற்றல்மிக்க புலவர் வில்லிபுத்தூரர். இவர் தம்மோடு வாதிட்டுத் தோற்ற புலவரின் காதைக் குறடு கொண்டு, குடைந்து தோண்டும் வழக்கம் பெற்றிருந்தார். அவருடன் வாதத்தில் மோதிய அருணகிரியார் ஆசுகவியாகக் 'கந்தரந்தாதி' என்னும் நூலை அருளினார். அந்நூற் பாடல்களுக்கு அப்போதே வில்லிபுத்தூரர் உரை கூறிவந்தார். அதில் ''திதத்த''எனத்தொடங்கும் ஐம்பத்து நான்காம் பாடலுக்கு உரை கூற அறியாது வில்லிபுத்தூரர் விழித்தார். அதனால் அப்பாடலுக்கு அருணகிரியாரே உரையருளி வெற்றி பெற்றார். வென்ற அருணகிரியார் தோற்ற வில்லிபுத்தூரரின் காதை அறுக்க வேண்டும்.

அருளாளரான அருணகிரியார் கருணை கொண்டு,'' இனிக் காதை அறுக்கும் கடுஞ்செயலை விட்டொழிக்க வேண்டும்'' என்று அறிவுறுத்தி வில்லிபுத்தூரரின் செவிக்குச் சேதம் விளைக்காமல் விட்டுவிட்டார். இதனால் 'கருணைக்கு அருணகிரி' என்னும் பழமொழி எழுந்தது. மேலும்,

> வாசுக்குக் கம்பன் கருணைக்கு அருணகிரி
> ஆசுக்குக் காளமுகில் ஆவானே- தேசுபெறும்
> ஊழுக்குக் கூத்தன், உவக்கப் புகழேந்தி
> கூழுக்கிங்(கு) ஔவையெனக் கூறு.

என்னும் தனிப்பாடலும் பிறந்தது.

அருணகிரியார் வில்லியை வென்ற நிகழ்ச்சியைத் திருமலை முருகன் பிள்ளைத் தமிழ்,

> ''எதிரும் புலவன் வில்லிதொழ
> எந்தை உனக்கந் தாதி சொல்லி
> ஏழைப் புலவர் செவிக் குருத்தோ(டு)
> எறியும் கருவி பறித்தெறிந்தே''

எனப் பாராட்டுகிறது. வில்லியை வென்ற நிகழ்ச்சி திருச்செந்தூரில் எனக் கருதுவர்.

சம்பந்தாண்டான் தனது தோல்வியை மறக்கவில்லை. அவன் அருணகிரியாருக்குத் தீமை செய்யத் தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவனது சூழ்ச்சியாலும் தூண்டுதலாலும் பிரபுடதேவ மாராஜன், கற்பக நாட்டுப் பாரிஜாத மலரைக் கொண்டுவருமாறு அருணகிரியாரை வேண்டினான். அருணகிரிார் அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டு, திருவண்ணாமலைக் கோயில் கோபுரத்தில் தமது உடலை மறைத்து வைத்து விட்டு, அருகே இறந்து கிடந்த ஒரு

கிளியின் உடலில் புகுந்து கொண்டார். கிளிவடிவில் இவர் விண்ணுலகம் நேக்கிச்சென்றார். இதனை அறிந்த சம்பந்தாண்டான் ''அருணகிரியார் இறந்தார். அவர் உடல் கோபுரத்தில் கிடக்கிறது'' என்று அரசனிடம் தெரிவித்தான். உண்மையை உணராத அரசன், அருணகிரியார் உடலைத் தகனம் செய்தான். பின்னர் கிளி வடிவான அருணகிரியார் பாரிஜாத மலருடன் திரும்பி வந்தார். அப்போதே தன் பிழைச்செயலை உணர்ந்து அரசன் வருந்தினான். அருணகிரியாரோ ''உடலாகிய சிறையை முருகன் அழித்தது நியாயமே'' என்று மனவமைதி பெற்றார். பின்பு திருத்தனிகை சென்று முருகனின் திருக்கரத்தே தங்கிவிட்டார் என்பர்.

அருணகிரியாரின் சந்தப் பாடல்கள் திருப்புகழ் என வழங்கப்பட்டன. இந்நூலைத் தவிர இவர், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். வேல் விருத்தம், மயில் விருத்தம், திருஎழு கூற்றிருக்கை ஆகிய நூல்களையும் அருணகிரியார் இயற்றியவை என்பர். திருப்புகழில் மொத்தம் பதினாயிரம் பாடல்கள் இருந்தன எனக் கூறுவர்.

''அருணகிரி நாதன் அறைந்தபதி னாரா
யிர கவிதை யென்றுலகில்-உரைபுகலும்
தெய்வத் திருப்புகழ்''

என்றும் தணிகையுலாவும், ''எம் அருணகிரிநாதர் ஓது பதினாயிரம் திருப்புகழ் அமுதமே'' என்று திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழும், ''அருணகிரி நாதர் பதினாயிரமென் றுரை செய்திருப்புகழை யோதிர்'' என்று தனிப்பாடல் ஒன்றும் திருப் புகழின் பாடல் தொகை பதினாயிரம் என்பதை உறுதி செய்கின்றன. இப்போது நமக்குக் கிடைத்துள்ளவை ஆயிரத்து முன்னூறு பாடல்களேயாகும்.

திருப்புகழில் திரிசொற்கள் மிகுதியாகக் கலந்திருப் பினும் மிக எளிய சொற்களைக் கொண்ட் பாடல்களும் உண்டு.

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருள் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இம வான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமானே!

இப்பாடலில் முருகன் தமக்கு செபமாலை தந்ததைத் தெரிவிக்கிறார், அருணகிரியார்.

ஒலிக் குறிப்புச் சொற்களைப் பாடலில் சேர்த்துச் சந்த இனிமையை மிகுவிப்பதில் சமர்த்தர், அருண கிரியார்; கீழ்ப்பாடலில் பேரியும் துடியும் முழங்கும் முழக்கத்தை முழங்குகிறது;

தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
தளத்துட னடக்கும் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா!
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில்
சுகித்தென்
திருத்தணி யிருக்கும் பெருமானே!

வள்ளியம்மையைத் தினைக்கிரி குறப்பெண் என்னும் சிறு தொடரால் குறிப்பிடும் அருணகிரிநாதர் வேறொரு பாடலில் வள்ளியின் வனப்பை உயிரோவியமாகத்

தீட்டிக் காட்டுகிறார். குயில் போன்ற இனிய மொழியும் கயல் மீன் போலப் பிறழும் கண்ணும், பவளம் போலச் சிவந்த இதழும், வில்லைப் போல் வளைந்த நெற்றியும், முழுமதி போன்ற அழகிய முகமும், முகத்திலே திகழும் இளமை செறிந்த சிரிப்பும், மேகம் போலக் கறுத்த கூந்தலும், மலையைப் போலப் பெருத்த மார்பும், கொடியைப் போலத் இளைத்த இடையும் பிடியைப் போலத் தளர்ந்த நடையும் உடைய வள்ளிக் குறத்தியை நம் கண்முன்னே நிறுத்துகிறது இத் திருப்புகழ்;

குயில்மொழிக் கயல்விழித்
துகிரிதழ்ச் சிலைநுதல்
சசிமுகத் திளநகைக்
கனகுழற் றனகிரிக்
கொடிடைப் பிடிநடைக்
குறமகட் டிருவினைப்
புணர்வோனே!

ஆராதனைக்குரிய அழகைப் படம் பிடிப்பது போல அருவெறுப்புக்குரிய அவலவடிவையும் சித்திரிப்பார், முத்தமிழ் வல்ல அருணகிரியார், இதோ அவர் தீட்டிக் காட்டும் முதுமை ஓவியம்:

முனை யழிந்தது; மேட்டி குலைந்தது;
வயது சென்றது; வாய்ப்பல் உதிர்ந்தது;
முதுகு வெஞ்சிலை காட்டி வளைந்தது; ப்ரபையான
முகம் இழிந்தது; நோக்கும் இருண்டது;
இருமல் வந்தது; தூக்கம் ஒழிந்தது;
மொழி தளர்ந்தது; நாக்கும் விழுந்தது! பலநோயும்
நிலுவை கொண்டது; பாய்க்கிடை கண்டது
ஜலமலங்களின் நாற்றம் எழுந்தது!

சந்தச் சிறப்புக்குத் திருப்புகழே எடுத்துக் காட்டாய் இலங்கும். எல்லாப் பாடல்களும் சந்தப் பாடல்களே.

ஆயிரத்து முன்னூறு பாடல்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தங்கள் உள்ளன என்பர். பாடலின் சந்தம் உள்ளத்தைத் துள்ளியெழுந்து கூத்தாடவைக்கும்; உள்ளங்கை இரண்டும் ஒன்றோடு ஒன்றிலுமோதத் தாளம்போட வைக்கும்! தலை அசையவைக்கும். அத்தகைய பாடல்களில் ஒன்றின் ஒரு பகுதியைக் காண்போம்:

சீர்சி றக்கு மேனி பசேல் பசேலெனை
நூபுரத்தி னோசை கலீர் கலீரென
சேரவிட்ட தாள்கள் சிவேல் சிவேலெனை,
வருமானார்
சேக ரத்தின் வாலை சிலோர் சிலோர்களு
நூறு லட்ச கோடி மயால் மயால் கொடு
தேடி பொக்க வாடி ஐயோ ஐயோவென
மடமாதர்......

முருகனை எப்போதும் சிந்தித்திருப்போருக்கு, நாளும் வினையும் நலிவு தாரா எனக் கந்தரலங்காரத்தில் அருணகிரியார் கூறும் பாடல் அஞ்சாமையினையும் அறுமுகன் அருளையும் அளிக்கும் ஆற்றல் பெற்றது.

நாளென் செயும், வினைதான் என்செயும்,
எனைநாடி வந்த
கோளென் செயும், கொடுங்கூற் றென்செயும்,
குமரேச ரிரு
தாளுஞ் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்குமுன் னேவந்து
தோன்றிடினே!

இத்தனை அற்புதமான பாடல்களை இயற்றிய அருணகிரியாரின் தமிழ் வாக்குத் தன்னிகரற்றது.

எனவேதான் மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர், நக்கீரர், சுந்தரர், அப்பர் ஆகியோரின் இலக்கியச்சிறப்பைப் பேச வந்த வெண்பா முதலில் அருணகிரியாரின் சிறப்பைச் செப்புகிறது:

வாக்கிற்(கு) அருணகிரி வாதவூரார் கனிவில்
தாக்கில் திருஞான சம்பந்தர்-நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்(கு) அப்பரெனச் சொல்

அருணகிரிநாதர் வாக்கு, அலைக்கழிக்கும் துன்பங்களை அழிக்கும்; அழியாத பேரின்பத்தை அளிக்கும்.

9. குணங்குடி மஸ்தான்

அகச் சமயங்களான சைவம், வைணவம் ஆகியவற்றை சார்ந்த புலவர்கள் தமிழ்த் தொண்டு மேற்கொண்டது போலவே, முன் காலத்தில் சமண சமயத்தினரும் பௌத்த சமயத்தினரும் தொண்டாற்றினர்; பிற்காலத்தே கிருத்தவ சமயத்தினரும் இஸ்லாமிய சமயத்தினரும் தமிழின் வளமைக்கும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றி யுள்ளனர். தத்துவ போதகர் வீரமாமுனிவர், கால்டு வெல், ஜி. யூ போப் முதலிய கிருத்துவர்களைப் போல உமறுப்புலவர் சவ்வாது புலவர் வண்ணக்களஞ்சியப் புலவர், சேகனாப் புலவர் எனப்படும் செய்கப்துல் காதிர் நெயினார் லெப்பை முதலிய இஸ்லாமியர்களும் தன்னிகரற்ற தமிழ்த் தொண்டு ஆற்றியுள்ளனர். அவர் களுள் ஒருவரே குணங்குடி மஸ்தான்.

குணங்குடி மஸ்தான், இஸ்லாமியர்களால் போற்றப் படுவதினும் பன்மடங்கு இந்துக்களால் போற்றப்படும் புலவர் பெருமான். இவர் ஏறத்தாழ இருநூறு ஆண்டு களுக்கு முன்னே வாழ்ந்தவரே. என்றாலும் இவரது வாழ்க்கை வரலாறு சரியாகக் கிடைக்கவில்லை. கிடைக் கும் விவரங்களிலும் கருத்து வேறுபாடுகள் உள்ளன, மஸ்தான் சாகிபு அவர்கள் நைனா முகமது—பாத்திமா ஆகிய இருவர்க்கும் பிறந்தவர். இவரது இயற்பெயர் சுல்தான் மஸ்தான் சாகிபு.

மஸ்தான் சாகிபுவைப் பெற்றெடுத்த பெருமைக் குரிய சிற்றூர், தென்பாண்டி மண்டலத்தில் உள்ள தேவகோட்டைக்கு அண்மையில் அமைந்த குணங்குடி என்பார் சிலர். இராமநாதபுர மாவட்டத்தில் தொண்டி யில் மஸ்தான் சாகிபுவின் தாய்வழிப் பாட்டனார் வாழ்ந்து வந்தார். இத்தொண்டியில் பிறந்தவர் இவர் என்பார் சிலர். சென்னையில் இராயபுரம் என்னும் பகுதி யில் காவாந்தோப்பு என்னும் பகுதியில் மஸ்தான் சாகிபு வாழ்ந்துவந்தார். தொண்டியில் பிறந்த சாகிபு வாழ்ந்த அந்த இடத்தைத் தொண்டியார் பேட்டை என வழங்கி னர். அப்பெயரே காலப் போக்கில் திரிந்து 'தண்டையார் பேட்டை' என மாறியது. என்றாலும் இப்போதும் ஆங்கிலத்தில் தண்டையார் பேட்டை என்பதை, Tondiarpet (தொண்டியார்பெட் என ஒலிக்கும்படி) என்று எழுதுகிறார்கள். இதனைச் சுட்டிக் காட்டி, 'மஸ்தான் சாகிபு பிறந்தவூர் தொண்டி' என்று கூறு கிறார். 'முஸ்லீம் தமிழ்ப் புலவர்கள்' என்னும் நூலை இயற்றிய அப்துற்-ரஹீம் அவர்கள். மஸ்தான் சாகிபு பாண்டிநாட்டிலுள்ள காயல் பட்டினத்தில் பிறந்தார். என்றும் கூறுவர்.

குணங்குடி, தொண்டி, காயல்பட்டிணம் ஆகிய மூன்று ஊர்களில் மஸ்தான் சாகிபு தோன்றிய ஊர் எது என் பதை இன்றும் ஐயத்திற்கு இடமில்லாமல் கூறமுடிய வில்லை. மூன்றில் காயல்பட்டினம் அவரது பிறந்த ஊராக இருக்க முடியாது என்று எளிதில் தள்ளிவிடுகின்ற னர். மஸ்தான் சாகிபுவை, குணங்குடி மஸ்தான் என்று கூறுவதே மரபு. அவர் பாடல்கள் முதன் முதலில் பதிப் பிக்கப்பட்டபோதும், ''குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடற் றிரட்டு'' என்று குறிப்பிடப் பட்டது. அவர் பாடல்களிலும் குணங்குடியே மிகுதியாகக் குறிக்கப்படுகிறது.

''பரமுத்தன் குணங்குடி தெருவில் பவனி
பார்த்து வருவோம் வாருங்கள்''

என்றும்

''போவோம் குணங்குடிக் கெல்லோரும் புறப்படுங்கள்
போவோம் குணங்குடிக் கெல்லோரும்''

என்றும் சாகிபு பாடுகிறார். தம் இறைனையும் 'எங்கள் குணங்குடியான்'' என்றும் ''குணங்குடி ஆண்டவன்'' என்றும் குறிப்பிடுகிறார். இக்காரணங்களால் குணங்குடியே அவர் பிறந்த ஊர் என்பது ஏற்க தக்கது என்பார் சிலர்.

குணங்குடி என்பது அந்தப் பெயரைக் கொண்டு இந்த மண்ணிலே இருக்கும் ஒரு சிற்றூரைக் குறிப்பது அன்று என்றும் நற்குணங்கள் யாவையும் கொண்ட பரம பதத்தையே அவர் குணங்குடி என்று ஒரு காரணப் பெயரால் குறித்தார் என்றும் கூறுவோர், சாகிபு மக்களைத் தாம் பிறந்த ஊரான குணங்குடிக்கு அழைக்கவில்லை. இறைவன் உறையும் பரமபதத்துக்கு—வருமாறு அழைக்கிறார் என்று வாதிடுவர். அதனால் சாகிபு அவர்கள் குணங்குடியில் பிறக்கவில்லை, தொண்டியில் தோன்றினார் எப்பர். அப்துற்-றஹீம் அப்துல் கரீம், ஆகிய இஸ்லாமிய தமிழ் அறிஞர்கள் சாகிபு தொண்டியில் பிறந்தவர் என்றே கூறுகின்றனர்.

மஸ்தான் சாகிபு குணங்குடியில் அல்லது தொண்டியில் பிறந்தவர், என்றாலும் அவர் குணங்குடி மஸ்தான் சாகிபு என்றே அன்றும் இன்றும் வழங்கப்படுகிற·ர்.

மஸ்தான் சாகிபு அவர்களின் பிறந்த ஆண்டும் பலவாறு குறிக்கப்படுகிறது. 1787, 1788, 1790, '792 என்று நான்கு ஆண்டுகளை அவர் பிறந்த ஆண்டாகத் தருகிறார். ஆங்கில வருடத்தில் இப்படிப்பலவகையாய்க்

கூறும்பலரும், 'ஹிஜ்ரி 1207ஆம்ஆண்டில் அவர்பிறந்தார் என்று ஒரு தன்மையாக உரைக்கின்றனர். ஹிஜ்ரி 1207க்கு நிகரான ஆங்கில ஆண்டு கி.பி. 1792 என்பதே ஆகும். அதனால் மஸ்தான் சாகிபு 1792 இல் தோன்றினார் என முடிவு செய்வர்.

மஸ்தான் சாகிபு இளமையிலேயே இறைநெறியில் இதயம் பறிகொடுத்தவர். மெய்ஞ்ஞானத்தை அறிவதிலேயே அவர் அக்கரை காட்டினார். ஹஜ்ரத்தைக்கா சாகிபு என வழங்கப் பெறும் செய்கு அப்துல் காதர் லெப்பைஆலிம்என்னும் சான்றோரிடம் இறைநெறியைப் பயின்றார். இஸ்லாம் சமயத்தின் 'சூஃபி'என்னும் ஞான மார்க்கத்தை இவர் மேற்கொண்டார். தனது பதினேழாம் வயதிலே, மாமன் மகளை இவருக்குத் திருமணம் செய்யும் முயற்சியை முறியடித்து மேலும் மணப் பேச்சுக்கே இடமில்லாத முறையில் துறவு மேற்கொண்டார். திரிசிரபுரத்து ஆலிமாக விளங்கிய ஷம் சாகிபு அவர்களைக் குருவாகக் கொண்டு தீட்சை பெற்றார். பின்பு சிக்கந்தர் மலையில் நாற்பது நாட்கள் யோகத்தில் அமர்ந்திருந்தார்.

மஸ்தான் சாகிபு இந்த யோகத்தில் மனநிறைவு கொள்ளாமல், சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய இடங்களில் அலைந்து திரிந்தார். மரங்களில் தலை கீழாகத் தொங்கியும் இவர் இறைவனை வழிப்பட்டார் என்பர். பின்னர் நாகூர், காரைக்கால் முதலிய ஊர்களுக்கும் சென்று வந்தார். ஒரு நாள் அவருடைய குரு காட்சி தந்து "சென்னைக்குச் செல்" என்று ஆணையிட, சாகிபு அதை ஏற்றுத் தருமமிகு சென்னையைச் சார்ந்தார்.

இவர் சென்னை ராயபுரத்தில் காவாந்தோப்பு என்னும் இடத்தில் தங்கினார்! அங்கே தச்சுவேலை செய்து பெற்ற பொருளக் கொண்டு ஏழைகளுக்கு

உதவினார் எனக் கூறுவர். இறைவனை நாடும் தம் மனத்து உணர்வுகளை சாகிபு அவ்வப்போது பாடி வந்தார். அவை முகியித்தீன் சதகம், அகத்தீசன் சதகம், தவநிலை, தியானநிலை, நிராமயக் கண்ணி. பராபரக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, கீர்த்தனைகள் முதலியனவாகும்.

இஸ்லாமிய ஞானியான மஸ்தான் சாகிபு இந்துக்களின் மனத்தைக் கவர்ந்தார். இந்துக்கள் சமயபேத மற்று அவரைத் தம் குருவாகக் கொண்டு அவர் பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர்.

மஸ்தான் சாகிபு கி. பி, 1838 ஆம் ஆண்டு மறைந்தார்.

மஸ்தான் சாகிபு அவர்களின் இந்து சீடர்களில் ஒருவரான சியமங்கலம் அருணாசல முதலியார் என்பவர் தம் குருநாதரின் பாடல்கள் நாடு முழுவதும் பரவ வேண்டும் என்று விரும்பினார். அதனால் அவர் குருநாதரை அணுகி அவர் எழுதிய பாடல்களைப் பெற்று அவற்றைப் புலவர் நாயகம் என்பாரிடம் கொடுத்து நூலுக்கு ஏற்றவகையில் தொகுத்தளிக்குமாறு கூறினார். புலவர் நாயகத்தின் இயற்பெயர் செய்கு அப்துல் காதிர் நாயினார் லெப்பை என்பதாம். இவர் மஸ்தான் சாகிபுவுடன் ஹஜ்ரத் தைக்கா சாகிபுவிடம் இறைநெறியை முறையாகக் கற்றவர். எனவே இவர் சாகிபுவின் ஒரு சாலைமாணாக்கர் ஆவர். கல்வி முடிந்தபின்னரும் புலவர் நாயகம் மஸ்தான் சாகிபுவின் மனங்கவர்ந்த நண்பராக விளங்கினார். இறுதியில் சாகிபு அவர்கள் சமாதியின் அருகே தம் சமாதியும் அமைய வேண்டும் என்று வேண்டி விரும்பியதைப்பெற்றார். இத்தகைய நண்பரே மஸ்தான் சாகிபு அவர்களின் கையெழுத்துப் படிகளைச் செப்பனிட்டார். இந்நூல் வெளி வந்து புகழ் பெற்றது.

மஸ்தான் சாகிபு அவர்களின் பாடல்களை முதலில் வெளியிட்டவர் ஓர் இந்து. தொடர்ந்து இந்துக்களான பலரே அவர் பாடல்களைப் பதிப்பித்தனர், உரை கண்டனர். பின்னர் இஸ்லாமியர் சிலரும் சாகிபு அவர்களின் பாடலைப் பதிப்பித்தனர்.

இந்து மதச் சான்றோரான தாயுமான அடிகளின் பாடல்களில் மஸ்தான் சாகிபு மனத்தைப் பறிகொடுத்தார். அடிகளின் தொடர்களையும் பொருளுரைகளையும் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார்.

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என்
இதயமும் ஒடுங்கவில்லை

—தாயுமானவர்

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்
என்மன திரங்குதிலையோ

—மஸ்தான் சாகிபு.

இவ்வாறு மிகப் பல ஒற்றுமைப்பகுதிகளை சாகிபு பாடல்களில் காணலாம். தாயுமானவர் 'பராபரமே' என்று முடியும் கண்ணிகளை இயற்றியது போலவே சாகிபும் ஒரு 'பராபரக் கண்ணி' பாடியுள்ளார். சித்தர்களின் தாக்கத்தையும் சாகிபு பாடல்களில் காணலாம்.

சாகிபுவின் கண்ணிகளில் மூன்றினைக் காண்போம்:

எப்பொழுதும் உன்பதத்தில் என் கருத்தே எய்துதலுக்
கிப்பொழுதே கைப்பிடித்தான் இறையே பராபரமே

—பராபரக் கண்ணி

ஆதியின்மேல் ஆசைபடர்ந்தெறிந்த அக்கினியின்
சோதியினால் வெந்து சுகம்பெறுவ தெக்காலம்?

—எக்காலக் கண்ணி

துவாரம் துடியிடையும் தோகை மயில்நடையும்
பவள இதழுமென்று பார்ப்பேன் ;மனோன்மணியே.
—மனோன்மணிக் கண்ணி

பெண்ணாசையைக்கண்டித்து மஸ்தான்சாகிபு பாடிய கீர்த்தனை அற்புதமானது; ஒரு பெண்ணைக் கொண்டால் அவள் முதலில் ஆடு கேட்பாள். உழைத்துப் பொருள் சேர்த்து அதை வாங்கிக் கொடுத்தால், உடனே மாடு கேட்பாள். மாட்டை வாங்கிக் கொடுத்த பின்பும் மனநிறைவு கொள்ளாமல் வீடு வேண்டும் என்று கேட்பாள். இப்படியே பொருளைத் தேடவிட்டு இறைவனின் அருளைத் தேடாமல் செய்யும் பெண்கள் மேல் ஆசை கொள்ள வேண்டாம் என்கிறார் சாகிபு.

பெண்கொண்ட பேர்பட்ட பாட்டையும் கேட்டையும்
பேசுவோமே நெஞ்சமே!
நாடிக் குருவடி தேடிநடக்கின்ற
நற்செயலைக்கசப் பாக்குவாள்-எங்கும்
ஓடித் திரிந்தே அலைந்து பணங்கள்
ஒருக்காலே தேடென்று தாக்குவாள்-அவன்
தேடும் பொருள்தனைக் காணில் உமக்கெதிர்
தேசத்தில் யாரென்று தூக்குவாள்-இன்னும்
ஆடென்றும் மாடென்றும் வீடென்றும் தேடென்றும்
ஆண்டவனை மறப் பாக்குவாள்-பின்பு
ஈடொன்றிலா நினை வாக்குவாள்,-அந்தக்
கேடிகள் ஆசைவைத் தையையோ வையத்தில்
பெண்கொண்ட பேர்பட்ட பாட்டையும் கேட்டையும்
பேசுவோமே நெஞ்சமே.

எல்லோரும் பெண்ணாசை வேண்டாம், பெண்ணழகில் மயங்காதீர் என்று பெண்களைக் கண்டித்தே கவிபாடியுள்ளனர். மஸ்தான் சாகிபு, 'பெண்களிடம் மோசம் போகாதே' என்று ஆடவர்க்கு அறிவுறுத்திய

தைப் போலவே, ''ஆடவரிடம் மோசம் போகாதே'' என்று பெண்களுக்கு அறிவுறுத்துகிறார்.

தாய்மார்களே பாவி சொல்லுவதைத்தான் சற்றும்
தள்ளாமல் கேட்டுக் கொள்வீர்!
பொன்னாசை காட்டிப் புருடர் உமையொரு
புண்ணியமும் செய்யாமல் கெடுப்பார்-பின்பு
சொன்னதை வாரி இரைப்பார்-கடைசியில்
தோட்டிகையில் உமை விடுப்பார்

என்று ஆடவர் அரிவையரைப் போகப் பொருளாக்கிக் கெடுப்பதை மஸ்தான் சாகிபு எடுத்துச் செல்கிறார்.

''பெண்ணாலே கெட்டோம் என்று உங்களைத் திட்டாத
பேரை உலகத்திற் கண்டிலேன்-எந்தன்
கண்ணான உங்களுக்கு ஒத்தாசை சொல்லிக்
கருத்தில் உரைப்பவரைக் கண்டிலேன்''

என்று மஸ்தான் சாகிபு கூறுகிறார். பெண்களுக்கு 'ஆணாசை வீணாசை' என்று அவர்க்கு முன்னே யாரும் கூறவில்லை. ஆனால் அவர் அதைக் கூறிப் புதுமை செய்திருக்கிறார்.

எளிய மக்களும் அறிந்து இன்புறத்தக்கன மஸ்தான் சாகிபு பாடல்கள். ஆடவரும் அரிவையரும் ஆண்டவனை அடைய வழி காட்டும் ஒளிவிளக்கே சாகிபுவின் பாடல் நூல். திருத்தணிகை சரவணப் பெருமாளையர், இவர் மீது ஒரு நான்மணி மாலை பாடியுள்ளார். அதில், ''கடல் சூழ் புவியில் உளத்திருளை, கருணை ஒளியினாற் களைந்து, விடல்சூழ் பவரில் குணங்குடியான் மிக்கோன் எனற்கோர் தடையுளதோ?'' எனக் கேட்கிறார். உண்டு எனவுரைப்பார் எவரும் இல்லை.

10. எச். ஏ. கிருட்டிண பிள்ளை

வந்தவரை வாழவைக்கும் தமிழகம், வந்த சமயங்களையும் வாழவைத்து வளப்படுத்தியுள்ளது. வட நாட்டிலிருந்து வந்த சமயங்களை ஏற்றுக் கொண்டதைப் போல, கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்த கிருத்துவத்தையும் இஸ்லாமையும் ஏற்றுக் கொண்டது. தமிழர்களும் தமிழ்ப் புலமை மிக்கவர்களும் இப்புதிய சமயங்களை ஏற்றுக் கொண்டு தம் சொந்த சமயங்களைக் கைவிட்டனர். சொந்த சமயங்களைக் கைவிட்டபோதும் அவர்கள் சொந்த மொழியான தமிழை என்றும் கைவிட்டதில்லை. எச்சமயம் சார்ந்தாலும், எவ்வேடம் கொண்டாலும், இன்பத் தமிழிடமே அவர்கள் ஈடுபாடு கொண்டனர். தமிழை வளர்க்கத் தம் புதிய சமயங்களின் பின்னனியோடு புதுப்புது நூல்களை இயற்றித் தந்தனர். இவ்வாறு தமிழ்த் தொண்டு செய்த சான்றோருள் ஒருவரே எச். ஏ. கிருட்டிணபிள்ளை.

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியில், பாளையங்கோட்டை என்னும் ஊரில் வாழ்ந்தார் சங்கரநாராயண பிள்ளை என்னும் சான்றோர், இவர் தீவிர வைணவர். தமிழ் நூல்கள் அனைத்தும் கற்ற அறிஞர். அதிலும் கம்பராமாயணத்தில் பேரன்பு கொண்டு, தம் இசையறிவுடன் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் ஆற்றிக் கம்பன் புகழையும் கன்னித்தமிழ் அருமையையும் நாடெங்கும் பரப்பிவந்தார். இவர் நாள்தோறும்

கம்பராமாயண செய்யுள்கள் சிலவற்றைப் படித்த பிறகே பகல் உணவு கொள்ளும் வழக்கம் மேற்கொண்டிருந்தார். இவருக்கு 1827ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், இருபத்தி மூன்றாம் நாளில் பிறந்த புதல்வரே கிருட்டிணபிள்ளை, பிள்ளையின் தாயார் பெயர் தெய்வநாயகி அம்மையார்.

கிருட்டிண பிள்ளையும் இவருடைய இளவல் முத்தையாவும் தொடக்கத்தில் தந்தையிடமே தமிழ் கற்றனர். பின்னர் மாணிக்கவாசகதேவரிடம் திண்ணைப் பள்ளியில் எண்ணும் எழுத்துமாகிய கண்களைப் பெற்றனர். கிருட்டிண பிள்ளையின் பதினாறாம் வயதில், தந்தை மறைந்தார். தந்தையார், கரையிடுப்பு என்னும் ஊரில் இருந்த தோட்டங்களின் மேற் பார்வை யாளராகப் பணியாற்றிவந்தார். அப்பணியை இப்போது கிருட்டிண பிள்ளை ஏற்கவேண்டிய தாயிற்று என்றாலும் தமிழ் வேட்கை தொடர்ந்தமையால் புதுப்புது நூல்களைத் தேடிக் கற்று இன்பமும் பயனும் தேடிக் கொண்டார். பாளையங்கோட்டையில் வாழ்ந்த வெங்கு முதலியார் என்பவரிடம் நட்புக் கொண்டு, அவரிட மிருந்த தமிழ் நூல்களைப் பருகுவன் அன்ன அருகாக் காதலோடு பெற்றுக் கற்றார். தாய் மொழியில் தகுந்த புலமை பெற்ற பிறகு வடமொழியும் ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்தார்.

கிருட்டிணபிள்ளை இன்றியமையாத தமிழ் ஏடுகள் சில தம்மிடம் இருக்க வேண்டும் என்று விரும்பினார், அதனால் நன்னூல் முதலிய ஏடுகளைத் தம்பியிடம் கொடுத்துப் படியெடுக்கச் செய்தார். வண்ணாரப் பேட்டையில் வாழ்ந்த திருப்பாற்கடல் கவிராயரை அணுகி இவரும் இவர் தம்பி முத்தையாவும் மேலும் தமிழறிவை வளர்த்துக் கொண்டனர். அப்போது அக்கால முறைப்படி இருவரும் குருநாதருக்குப் பணி செய்து வந்தனர். இப்பணிவிடைகளை ஏற்றுக் கொண்ட

குருநாதர் தினமும் பாடம் சொல்லித் தரமாட்டார். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை பாடம் கற்றுத்தருவார்.

கிருட்டிண பிள்ளை கற்பன கற்றுச் சிறந்த புலமை பெற்றார். அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். திருச்செந்தூரைச் சேர்ந்த முத்தம்மாள் என்னும் குணவதி இவருடைய மனைவியானார். கிருட்டின பிள்ளைக்கு அப்போது தமிழ்த்தொண்டு செய்ய ஒரு வாய்ப்புக் கிடைத்தது. சாயர்புரம் திருமறைப் பயிற்சி மன்றத்தில் தமிழாசிரியர் பணியை ஏற்றுக்கொண்டு மாணவர்களுக்குத் தமிழின் திறனையும் சுவையையும் உணர்த்தினார். இத்தமிழாசிரியர் பணிக்காக நடந்த போட்டித் தேர்வில் இவர் முதன்மை பெற்று இப் பணியை அடைந்தார்.

கிருட்டிண தள்ளை பாளையங் கோட்டையை விட்டுச் சாயர்புரம் சென்று பணியாற்றினார். இவர் பரம வைணவர்; ஆதலால் கிருத்தவர்கள் பயன்படுத்தும் கிணற்று நீரை இவர் பயன்படுத்த விரும்பாமல், வெகு தூரம் சென்று தண்ணீர், எடுத்து வந்தார். இவரிடம் அன்பு கொண்ட கிருத்தவர்கள் இவர் தொல்லையை நீக்க, ஒரு வீடு கட்டித் தந்து, அருகே ஒரு புதிய கிணறும் வெட்டிக் கொடுத்தார்கள்.

தமையனைப் போலவே தம்பி முத்தையாவுக்கும் தமிழாசிரியர் வேலை கிடைத்தது. முதலில் முத்தையா ஆங்கிலேயர்க்குத் தமிழ் கற்றுத் தந்தார். பின்னர் பாளையங் கோட்டையில் பராந்தப் பள்ளியின் தமிழாசிரியரானார். கிருத்தவர்களின் நெருங்கிய தொடர்பால் முத்தையா மதம் மாறி கிருத்துவரானார், இச்செய்தியைக் கேள்வியுற்ற கிருட்டிணபிள்ளையின் மனம் புண்பட்டது. தம்பியை அந்நிய மதத்தின் பிடியி லிருந்து விடுதலைச் செய்வதற்காகப் பாளையங்

கோட்டைக்குச் சென்றார், ஆனால் தம் முயற்சியில் தோற்றுத் திரும்பினார்.

மனத்துயரம் மாறாத நிலையில் கிருட்டிணபிள்ளை தம் மனைவியையும் மக்களையும் அன்னையிடம் ஒப்படைத்து விட்டு 1857இல் சென்னை அடைந்தார். சாயர்புரத்தில் தாம் மேற்கொண்ட தமிழாசிரியர் வேலை வேண்டாம் என்று கடிதம் எழுதினார். ஆனால் சென்னையில் ஒரு பள்ளியில் தமிழாசிரியர் பணி கிடைத்தது. கிருட்டிணபிள்ளை பணியாற்றிய அந்தச் சென்னைப் பள்ளி நாளடைவில் உயர்ந்து இன்று மாநிலக் கல்லூரியாக மாறியுள்ளது.

சென்னைப் பள்ளியில் பெர்சிவல் என்றும் தமிழ்ப் பற்றுமிக்க ஆங்கிலேயர் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கினார். அவர் கிருட்டிண பிள்ளையின் தமிழ்ப் புலமையை உணர்ந்து, அவருடன் தமிழ் நூல்களைப் பற்றி அடிக்கடி உரையாடினார்; தாம் நடத்தி வந்த 'தினவர்த்தமானி' என்னும் செய்தித்தாள் பணிக்கு இவருடைய துணையை நாடிப் பெற்றார். ஆங்கிலேய நண்பர்களுடனும் தமிழ்க் கிருத்தவ நண்பர்களுடனும் பழகியதால், கிருட்டிணபிள்ளையின் மனம் மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமன்றோ? நண்பர்களின் தூண்டுதலால் இவர் சென்னையை அடைந்த ஓராண்டுக்குப் பின், 1858இல் கிருத்துவ மதத்தைத் தழுவினார். இளமையில் கிறித்துவத்தைக் கடுமையாக எதிர்த்த கிருட்டிண பிள்ளை—பெருங்கூட்டத்தோடு கிருத்துவர் வாழும் ஓர் ஊரில் புகுந்து அங்கிருந்த கிருத்துவர்களை ஒறுத்த கிருட்டிணபிள்ளை—பரம வைணவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து தீக்கை பெற்ற தீவிர வைணவராக விளங்கிய கிருட்டிணபிள்ளை—கிருத்தவர் பயன்படுத்தும் கிணற்றில் தண்ணீர் எடுக்க மறுத்த கிருட்டிணபிள்ளை, தாமே ஒரு கிருத்துவரானது வியப்புக்குரிய செயலே!

இந்துக்கள் அக்கால மரபுப்படி குடுமி வைத்திருந்தார்கள். இந்துக்கள் கிருத்துவர்களாக மாற்றப்படும் போது பெயர் மாற்றம் செய்வது போல உருவத்திலும் ஓரளவு மாற்றம் நிகழ்த்த குடுமியை எடுத்து விடுவார்கள். கிருட்டிண பிள்ளையின் தம்பி முத்தையா மதம் மாற முடிவு செய்தபோது தம் குடுமியை எடுக்க மறுத்தார். மதம் மாற்றம் செய்யும் ஆங்கிலேயர் எவ்வளவோ எடுத்துச் சொல்லிக் குடுமியை நீக்கும்படி வற்புறுத்தினர். முத்தையா 'முடியாது' என்று மறுத்து விட்டார். இறுதியில் முத்தையா குடுமியோடே கிருத்துவரானார். கிருட்டிணபிள்ளை மதம் மாறிய போது அடர்த்தியான நீண்ட கூந்தல் பெற்றிருந்தார். இக் குடுமியை இவர் இழக்க விரும்பவில்லை. ஆங்கிலேயரும் எடுக்குமாறு கூற வில்லை. பெயர் மாற்றம் மட்டும் நிகழ்ந்தது. ஹென்றி ஆல்பிரட் கிருட்டிணபிள்ளை என்னும் புதுப்பெயரை இவர் பூண்டார்.

சென்னையை விட்டு மீண்டும் சாயர்புரத்துக்கு வந்தார் கிருட்டிண பிள்ளை. இவர் கிருத்துவராக மாறிய தால் முன்பு இவர் பார்த்த அதே வேலையை அதிக சம்பளத்துடன் கொடுத்தனர். கிருட்டிண பிள்ளையின் அன்னையார் நாளடைவில் மனம் மாறி மதம் மாறி தெய்வ நாயகி மேரி எனும் பெயர் பெற்றார். பிறகு இவர் மனைவி முத்தம்மையாரும் எலிசபெத் என்னும் பெயரேற்று, மதம் மாறினார். இவ்வாறு வழி வழியாக வைணவத்தில் வந்த கிருட்டிண பிள்ளையின் குடும்பம் முழுவதுமே கிறித்துவ மதத்தைத் தழுவியது.

கிருட்டின பிள்ளை சாயர்புரத்தில் பதினேழு ஆண்டுகள் பணியாற்றினார். பின்பு பாளையங் கோட்டைக்கு வந்து ஸ்பிராட் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகத் தொண்டாற்றினார்.

ஆசிரியப் பணியோடு இலக்கியப் பணியும் இவர் மேற்கொண்டார். ஆங்கிலத்தில் ஜான் பன்யன் என்பவர் இயற்றிய 'மோட்சப் பயணம்' (Pilgrim's Progress) என்னும் நூலைக் கிருட்டிணப்பிள்ளை கிருத்துவராவதற்கு முன்பே படித்திருந்தார். அதிலே மனம் பறிகொடுத்தமையால், பின்னே அதே நூலை 'இரட்சண்ய யாத்திரிகம்' என்னும் தமிழ்க் காப்பியமாக்கினார். ''கிறிஸ்து சாமி செய்ய பொன்னனைய திருவடிக்குச் செந்தமிழ் மாலிகை யொன்று புனைவான் எண்ணி'' இக்காப்பியத்தை இயற்றியதாக இவர் கூறுகிறார். இவர் இளமை முதலே கம்பராமாயணத்தில் ஊறித்திளைத்தவர். அதனால் நூலில் கம்பனின் தாக்கம் அதிகம் உள்ளது. இரட்சண்ணிய யாத்திரிகத்தின் முன்னுரையில் ''இந்நூலின் செய்யுள் நடை பெரும்பாலும் ஸ்ரீமத் கம்பராமாயணச் செய்யுள் நடையையும் அதன்போக்கையும் அனுசரித்தே இயன்ற மாத்திரம் அமைக்கப்பட்டது. ஏனெனில் கம்பராமாயணமொன்றே கற்றார் எவரும் வியந்து புகழ்ந்து மெச்சத் தக்கது. 'கம்பநாடன் கவிதையைப் போல் கற்றார்க்கு இதயம் களியாதே' என்பது உண்மை மொழியன்றோ?' என்று கூறுகிறார்.

கம்பர் தமது இராமாயணத்தைப் பின்வரும் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் தொடங்கினார்.

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

கிருட்டின பிள்ளையும் தமது காப்பியத்தின் முதற் பாடலான இறைவணக்கத்தைக் கம்பன் பாணியில் அமைத்தார்.

உலகம் யாவும் புரந்தருள் உன்னதர்
அலகில் சோதி அருட்கடல் ஆறணத்து
இலகு மெய்த்துரி யேசுப் பதத்துணை
குலவி எங்கெஞ் சிடம்குடி கொண்டவே

இவ்வாறே காப்பியம் முழுதிலும் கம்பனின் தாக்கம் இருப்பதைக் காணலாம்.

இறைவனைத் துதிப்பதற்காகவே அவர் உள்ளம் உருகிப் பாடிய பாடல்கள் 'இரட்சண்ய மனோகரம்' என்னும் நூலில் உள்ளன. இந்நூலில் பாலர் முதல் பல்வகைப் பருவத்தினருக்கும் ஏற்ற துதிப்பாடல்கள் உள்ளன. முதன் முதலில் வயதைக் குறிப்பிட்டுக் குழந்தைப் பாடல் எழுதியவர் கிருட்டிண பிள்ளையே. இரட்சண்ய மனோகரத்தில் உள்ள 'பால்ய பிராத்தனை ஐந்து வயது பிள்ளைகளுக்கு உரியது என்று கவிஞர் குறிப்புத் தருகிறார்.

"'இந்தச் சிறு பாடல்கள் ஐந்து வயதுள்ள சிறு குழந்தைகள் உள்ளத்திலும் பதியத்தக்க இயற் சொற் களால் தெளிவான பொருளுள்ளதாகச் சிறு கவிகளால் இயற்றப்பட்டுள்ளன'' என்பது இவர் கூற்று. 'பால்ய பிரார்த்தனை'ப் பாடல்களுள் இரண்டினைக் காண் போம்.

பக்தியாய்ச் செபம் பண்ணவே
சுத்தமாய்த் தெரியாதய்யா?
புத்தியோ டுமைப் போற்ற நற்
சித்தமீந் திடும் ஜேசுவே!
தீங்கெனக கெவன் செய்யினும்
தாங்கிநன் மைதனைச் செய
ஒங்குநல் மனம் உதவுவாய்
வீங்குபே ரருள் வித்தகா!

கிருட்டிண பிள்ளை, 'மனோன்மணீயம்' என்னும் ஒப்பற்ற நாடகத்தை இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் நண்பரானார். அவருடைய விருப்பப்படி இவர் திருவனந்தபுரம் கல்லூரியில் தலைமைப்பேராசிரிய ராகப் பணியாற்றினார். பின்பு நண்பர் ஒருவர்க்காகக் குலசேகரன் பட்டினத்துக்கு வந்து, அங்கிருந்த நண்பரின் உப்பாலையின் பொறுப்பை மேற்கொண்டார். "இரட்சண்ய யாத்திரிகம்' திருவனந்தபுரத்திலும் குலசேகரன் பட்டினத்திலும் உருவானது. இந்நூல் 1894 ஆம் ஆண்டு வெளிவந்தது. பின்னர் 'சிவஞான சித்தியார்' என்னும் நூலைப் பின்பற்றி 'இரட்சண்ய சமய நிர்ணயம்' என்னும் நூலையும் எழுதினார்.

கிருட்டின பிள்ளையின் வாழ்வில் மனைவியின் மரணம் முதலிய பல்வேறு துன்பங்கள் தோன்றின. அவருக்குச் சொந்தமான காப்பித் தோட்டத்தில் பொருள் இழப்பு ஏற்பட்டது. அந்தத் துன்பங்களின் போதும், இவர் இறைவனிடமே முறையிட்டார்:

சுடுகின்ற சிலகவலை யோடுபல பிணியும்
தொடர்ந்துபீ டிக்கவுள்ளம்
துன்பவெஞ் சூழலிலே உழல்கின்ற திரணமாய்ச்
சோகமுற் றிடஏழையான்
படுகின்ற பாடெல்லாம் பாரா திருக்கவிழி
பாரநித் திரை கொண்டவா!
பாவியேற்கு அஞ்சலென்று ஒருமொழி பகர்ந்திடப்
பவளஇதழ் அவிராததுஎன்?
கடுநின்ற வள்ளம்என் கைநின்று அகற்றவுன்
கருணை மடை அடைபட்டவா
கங்குல்பக லாய்க்கூவி வாயும் சலித்ததே
கன்னம் புகாததுஎன் சொல்?

என்னும் பாடல் கிருட்டிண பிள்ளையின் துன்பச் சுமையை விளக்குகிறது.

மனத்துயரம் மிகுந்து உடல்நலம் குன்றிய கிருட்டிண பிள்ளை 1900, பிப்ரவரித் திங்கள் முதல் தேதியன்று மரணமடைந்தார்.

கிருட்டிண பிள்ளையின் துதிப் பாடல்கள் கல்மனத்தையும் கரைத்து இறைவனடியருகே இழுத்து வரும் இயல்புடையன.

தந்தை யாகி உலகனைத் தும்
    தந்து மநுக்கள் தமைப் புரக்க
மைந்த னாகிப் புனிதாவி
    வடிவாய் ஞான வரமருளிப்
பந்த மறநின் றிலங்குதிரி
    யேகப ரமன் பாதாம்பு யத்தை
சிந்தை யாரத் தொழுதேத்தி
    சேர வாரும் செகத்தீரே!

என்னுயிர்க்கு உயிரும்நீயே! ஈடேற்றும்
ஈசன் நீயே!
மன்னுசற் குருவும் நீயே! வழி தடுத்து
எனையாட் கொண்ட
முன்னவன் தானும் நீயே! முற்றுநீ! சுற்றுநீ!
என்று
உன்னை நன் கறிய நீஎன் உளத்தறி
வுறுத்து கெந்தாய்!

'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் காப்பியம் ஆதி பருவம், குமாரப் பருவம், நிதானப் பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என்னும் ஐந்து பெரும் பிரிவுகள் கொண்டது. இதில் மொத்தம் 3800 பாடல்கள் உள்ளன. இந்நூலின் இரண்டாவது பெரும் பிரிவான குமாரப் பருவத்தில் இடம் பெற்றுள்ள 'இரட்சண்யச் சரிதப் படலம்' என்னும் சிறு பிரிவு

ஏசு நாதரின் மன்னிக்கும் மாண்பையும் கிருட்டிண பிள்ளையின் மகாகவிப் பண்பையும் செம்மையாக வெளிப்படுத்துகிறது.

ஏசுநாதனார் சிலுவையினைச் சுமந்து வீதி வழியே செல்லும் காட்சி உள்ளத்தை உருக்குகிறது.'கையயர்ந்து வாய் புலர்ந்து, கண்ணிருண்டு, காதடைத்து, வெய்ய சிலுவை சுமந்து,' மெய் வருந்தி, திருவடிகள் சோர்ந்து நடை தள்ளாடி ஐயன் ஏசுபிரான் வீதிவழியே வருவதைக் கண்டு ஆடவர் அழுகின்றனர். மாதர்களோ கையால் முகத்தில் அறைந்து கொண்டு, ''இக்கொடுங்காட்சியைக் காண நேர்ந்ததே'' என்று புலம்புகிறார்கள். இந்தக் கண்ணீர்க் காட்சியில் கிருட்டிணபிள்ளையின் கவித்திறன் வெளிப்படுகிறது.

காந்தள் மலர்செங்க மலமலரைப் புடைப்பப்
பூந்தண் கருங்குவளைப் போதுநீர் முத்துகுப்பத்
தேந்தளவு தொக்க நறும்சேதாம்பலை அலர்த்தி
மாந்தண் டலைக்குயிலின் மென்மொழியார் மாழ்கினார்.

மகளிரின் கை காந்தள் மலர்; முகம் செங்கமல மலர்; கண்கள் கருங்குவளை மலர் மகளிர் கையால்தம் முகத்தில் அறைந்து கொண்ட காட்சி, காந்தள் மலரானது செங்கமலத்தை அறைவது போலிருந்தது. அதனால் கண்கள் நீர் சொரிந்த காட்சி, கருங்குவளை மலர் முத்துக்களை உதிர்ப்பது போல இருந்தது என்னும் கவிஞரின் கற்பனையில் நாம கம்பரைக் கண்டு களிக்கலாம்.

ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்த போது அவர் தம் உடலும் உள்ளமும் நொந்தன. தன்னரிய திருமேனி உதைப்புண்டு தவிப் பெய்திப் பன்னரிய பல பாடு படும்போதும்; அவர், ''எந்தாய்! இன்னதென அறிகில்லார் தாம் செய்வ; இவர் பிழையை மன்னியும்!''

என்று வேண்டினார். இதுவே ஏசுநாதரின் குணச் சிறப்பின் சிகரமாகும். இதைக் கூறும் கிருட்டிணபிள்ளை உடனே "'இப்படிப்பட்ட பொறையும் மனநலமும் பொருந்தியவரே கிருத்துவர் ஆவார். இக்குணங்கள் இல்லாதவரை, அவர் ஏற்றுக் கொண்ட மதத்தைக் கருதிக் கிருத்துவர் என உரைப்பது செத்தாரைத் துஞ்சினவர் எனக் கூறுவதற்கு நேராகும்'' என்று குறிப்பிடுகிறார்.

இத்தகைய அரும்பொறையும் மனநலமும்
இயந்தவரே
வித்தகனுக்கு அடித்தொழும்பர் எனத்தகு மெய்க்
கிறித்தவர்; மற்று
இத்தகைய குணமிலாரும் கிறித்தவர் என்றிசை
பெறுதல்
செத்தவரைத் துஞ்சினவர் எனவுரைக்கும் சீர்மைத்தால்.

இரக்கமும் பொறையும் மன்னிக்கும் மன நலமும் பெற்றவரே மெய்க் கிருத்துவர்; இவையற்றோர் பொய்க் கிருத்துவர். கிருட்டிணபிள்ளை இக் குணங் களைப் பெற்ற ஒரு மெய்க் கிருத்துவர்.

கிருட்டிணபிள்ளையைக் கிருத்துவர்கள், 'திருமறைக் கவியரசர்' என்று போற்றுகிறார்கள். 'இரட்சணிய யாத் திரிகம்' என்னும் ஒரு நூலுக்காகவே தமிழுலகம் இவரைக் "கிருத்துவக் கம்பர்'' என்று போற்றி மகிழ்கிறது.

11. ஆறுமுக நாவலர்

தமிழ்த் தாய்க்கும் சைவசமயத்துக்கும் அருந்தொண்டாற்றிய பெரும்புலவர் ஆறுமுக நாவலர். ''ஆறுமுக நாவலர் பிறந்திலரேல், சொல்லும் தமிழ் எங்கே? சுருதி எங்கே? எல்ல வரும் ஏத்தும் புராண ஆகமங்கள் எங்கே? பிரசங்கம் எங்கே?'' என்று வினவினார் சி. வை. தாமோதரம் பிள்ளை என்னும் தமிழ்ச் சான்றோர். நாவலர் இல்லையென்றால் தமிழும் சைவமும் தளர்ந்து நலிந்திருக்கும். இவ்விரண்டின் ஏற்றத்துக்குக் காரணமானது நாவலரின் தொண்டே. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நாவலரின் சிறப்புகளைத் தொகுத்து,

''மன்னுபெரும் தமிழ்ப்பாடை இலக்கணமும்
இலக்கியமும் வரம்பு கண்டோன்!
பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன்''

என்று போற்றி ''சைவம் என்னும் பயிரை வளர்க்கும். மழையைப் போன்றவன்'' என்றும் சிறப்பிக்கிறார். நாவலரின் வரலாற்றை அறிவதும் அறிவிப்பதும் கூட ஒரு வகையான தமிழ்த்தொண்டாகவே அமையும் எனக் கூறலாம்.

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்னும் ஊர் உள்ளது. அங்கு வேளாளர் குலத்தில், பாண்டிமழவர் குடியில் கந்தர் என்பவர் வாழ்ந்து வந்தார். கந்தர் நந்தமிழில் வல்லவர். பல நல்ல நாடகங்களை இயற்றியவர். மருத்துவம் அறிந்தவர். மருத்துவ நூல்கள் சிலவும்

ஆக்கியவர். இத்தகைய தமிழன்பருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் ஐந்து ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பிறந்தனர். இவருள் இறுதியில் பிறந்த பிள்ளையே ஆறுமுக நாவலர். இவர் 1822ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் ஐந்தாம் நாளில் அவதரித்தார்.

ஆறுமுக நாவலர் இளமையிலேயே தமிழ்ப் புலமை பெற்றுச் சிறப்புற்றவர். நாவலரது ஒன்பதாம் வயதில், இவருடைய தந்தை ஒரு நாடகம் இயற்றிக் கொண்டிருந்தார். கையில் ஏடும் எழுத்தாணியுமாய் எழுதிக் கொண்டிருக்கும் போதே அவர் மரணமடைந்தார். அதனால் நாடகம் பாதியில் நின்றது. ஆறுமுக நாவலர் தம் தந்தையார் தொடங்கிய நாடகத்தை அந்த ஒன்பதாம் வயதிலேயே மிகச் சிறந்த முறையில் முடித்துக் கொடுத்தார். நாவலரின் பேரறிவை அதுமுதல் அனைவரும் அறிந்து கொண்டனர்.

நாவலரின் தமையன்மார் அனைவரும் தம்பி மேலும் கல்வி கற்றுப் புகழடைய வேண்டும் என்று விரும்பினர். அதனால் தகுந்த ஆசிரியர்களிடம் அனுப்பி வைத்தனர், விடியற்காலையில் நாவலர் கல்வி கற்கச் செல்வார். பகல் உணவுக்கு வீட்டுக்கு வருவார். உணவு தயாராக இருந்தால் உண்பார். சிறிது நேரம் தாமதமாகும் என அறிந்தால் உண்ணாமலேயே கல்வி கற்கச் சென்று விடுவார். இரவு திரும்பி வந்தபின்பே உண்பார். நாவலருக்குக் கல்வியே உணவாக அமைந்ததால், மற்ற உணவைப் பற்றிக் கவலைப்படவில்லை. நாவலர் பல ஆசிரியர்களிடம் கற்றார் எனினும் அறிவு வேட்கை குறையவில்லை.

நாவலரின் மைத்துனர் ஒருவர் இவரது நுண்ணறிவைக் கண்டு, புராணச் சொற்பொழிவுகள் நடக்கும் இடத்துக்கு இவரை அழைத்துச் செல்லத் தொடங்கினார். அங்கே, சொற்பொழிவாளர்கள் தவறாகப்

பொருளுரைத்தால் நாவலர் அதைச் சுட்டிக்காட்டி அவர்களுடன் வாதிடுவார். இவ்வாறு நாவலரின் அறிவு நாளுக்கு நாள் சுடர் மிகுந்து ஒளிவீசியது.

நாவலரின் தகுதியும் திறமும் அறிந்த தமையன்மார் பீட்டர் பார்சிவல் என்னும் பாதிரியார் நடத்தி வந்த ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பிக் கற்கச் செய்தனர். பின்னாளில் நாவலர் வடமொழியும் பயின்றார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழிப் புலமையால் நாவலரின் புகழ் மும்மடங்கு பெருகியது.

பீட்டர் பார்சிவல் பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார். இப்பணிக்கு நாவலரே துணை நின்றார். பார்சிவல் பைபிளை மொழி பெயர்த்த அதே நேரத்தில், சென்னையிலும் ஒரு பைபில் மொழி பெயர்ப்பு நடைபெற்றது. இரண்டில் எது சிறந்தது என்பது சென்னை நகரில் ஆராயப்பட்டது. பார்சிவல் தம் மொழி பெயர்ப்பின் சிறப்பை எடுத்துச் சொல்ல நாவலரையும் அழைத்துக் கொண்டு சென்னை சென்றார். அப்போது சென்னையில் பெரும்புலவராயிருந்த மகாலிங்கையர் என்பவரிடம் இரு மொழி பெயர்ப்பில் சிறந்ததைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டது. மகாலிங்கையர் பார்சிவல் பாதிரியாரின் மொழிபெயர்ப்பே சிறந்தது எனத் தேர்ந்தெடுத்து, அதன் தமிழ் நடையைப் பாராட்டினார். இது நாவலரின் தமிழ் ஆங்கிலப் புலமைக்குச் சான்றாய் அமைந்தது.

பாதிரியாருக்குத் துணை நின்றபோதும் நாவலர் தம் சொந்த நடை உடை பாவனைகளையும் சைவ சமயப்பற்றையும் குறைக்கவும் இல்லை; மறைக்கவும் இல்லை; பாதிரியாரோடு இணைந்து பைபிளை மொழிபெயர்த்த காலத்தில், ''வீபூதி அணிவதை விட மாட்டேன். நான் செய்து வரும் கிருத்துவ மதக் கண்ட

னத்தைக் குறை கூறக் கூடாது.'' என்பன போல சில நிபந்தனைகளை விதித்தார். நாவலர் போல நற்றமிழும் ஆங்கிலமும் கற்றுத் தெரிந்தவர் வேறுயாரும் கிடைக்காமையாலே பாதிரியார், இவர் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார். இவரை எங்கே பார்த்தாலும் பாதிரியார் எழுந்து நின்று வணக்கம் தெரிவித்து உட்கார இடமளித்த பிறகே உட்காருவார். பாதிரியார் பைபிளை நேசித்ததைப் போல நாவலரை நேசித்தார்.

நாவலர் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தில் ஈடுபட வேண்டும் என்று சுற்றத்தார் விரும்பினர். தமையன்மார் திருமணம் பற்றி இவரிடம் கூற இவர் இல்லறம் மேற்கொள்ள மறுத்தார். தமையன்மார் இத்தோடு விட்டுவிட விரும்பாமல் தங்கள் குரு ஒருவரைக் கொண்டு வற்புறுத்திச் சொல்லச் செய்தனர். குரு இல்லறம் பற்றி பேச்செடுத்ததும், இவர் ''இந்த ஒரு பேச்சு மட்டும் என்னிடம் பேசவேண்டாம்'' என்று உறுதியாகக் கூறி, இறுதி வரையில் நைட்டிக பிரமசரிய விரதத்தை மேற் கொண்டிருந்தார். முற்றும் துறந்து மடாதிபதிகளாக இருப்பவரும் தம் சுற்றத்தார் மேல் பாசங்கொண்டு அவர்களுக்குப் பொருள் பெருகுமாறு சில செயல்கள் மேற்கொள்வர். நாவலரோ, திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்ந்ததுடன், தம் வருவாய் முழுவதையும் தாம் நிறுவிய பள்ளிகளுக்கும் பதிப்பகத்துக்கும் பிற அறச் செயல்களுக்கும் செலவிட்டார்; சுற்றத்தார் எவருக்கும் இவர் பொருள் வழியே துணை செய்ததில்லை.

நாவலர் பிள்ளைகளுக்கு ஏட்டுக் கல்வியுடன் சமயக் கல்வியும் கற்பிக்கும் முயற்சி மேற்கொண்டார். அதுவும் மாணாக்கரிடமிருந்து பொருள் பெறாமல் இலவசமாக கற்பித்து வந்தார். பிள்ளைகள் கற்க இலவசக் கல்விக்

கூடங்கள் நிறுவ முயன்று சில பள்ளிகளை இவர் நிறுவினார். அக்காலத்திலேயே இலவசக் கல்வித்திட்டம் இவர் இதயத்தே தோன்றியதும் அதை இவர் செயல் படுத்தியதும் வியந்து பாராட்டத்தக்கன. மக்கள் சமயக் கல்வி பெறவேண்டும் என்னும் இலட்சியத்துக்காகச் சுயநலமற்றுத் தாம் தொண்டாற்றி வருவதை இவரே அறிவித்தும் இருக்கிறார். சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலை தொடர்பாக இவர் வெளியிட்ட ''சைவசமயிகளுக்கு விக்கியாபனம்'' என்னும் அறிக்கையில் நாவலர் தன்னலமற்றுப் பொதுத் தொண்டாற்றும் தன்மையை நாம் அறியலாம்; அதில், பார்சிவல் பாதிரியார் நல்ல சம்பளம் தருவதாகக் கூறி இவரை அவரிடம் தொடர்ந்து பணியாற்றக் கோரியதை மறுத்ததையும், ஆங்கிலம் கற்றோர் வேறு பணிகள் செய்து பொருள் பெறுவதை அறிந்தும் தாம் வேறு பணிகள் மேற்கொள்ளாமையினையும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், ''தமிழ்க் கல்வித் துணை மாத்திரங் கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகம் செய்து கொடுக்கும் வழக்கமே உடையது, என் சென்ம தேசமாகவும் நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகள் எல்லாவற்றுக்கும் காரணம், சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக்கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையாகும்'' என்று நாவலர் கூறுவது அவரது உள்ளத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளத் தெளிய காட்டுவதாகும். இவர் சங்கப் பாடல் கூறும் 'தமக்கென வாழா நோன்றாள் பிறர்க்கென வாழும்'' பெரியோர் ஆவார்.

கல்விக் கடலான நாவலர், 'கற்றலின் கேட்டல் நன்று' என்பதை உணர்ந்து, தம் கொள்கையைப்

பிறர்க்கு அறிவித்து அவரைத் தம் வழிக்கு ஈர்க்கப் பிரசங்கம் செய்வதை மேற்கொண்டார். சமயச் சொற்பொழிவுக்கும் தொடர் சொற்பொழிவுக்கும் இவரே முன்னோடி எனக் கூறுவர். இவரது கேட்டார்ப் பிணிக்கும் சொற்பொழிவைப் பகைவரும் கேட்டுப் பாராட்டுவர். தமிழ்நாடு முழுவதும் சென்று தம் சொல்லாற்றலால் பெறற்கரும் புகழ் பெற்றார். தமிழ் நாட்டு மடாதிபதிகள் எல்லாரும் இவரைத் தம் மடத்துக்கு வந்து சொற்பொழிவாற்றக் கோரினர். இவர் திருவாவடுதுறை மடத்துக்குச் சென்று சொற்பெருக்காற்றினார். இவரது சொல்லாற்றலைக் கண்டுகளித்த மடாதிபதி, இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார். அது முதல் இவர் ஆறுமுக நாவலர் என வழங்கப்பட்டார். நாவலர் என்னும் சொல்லே இவரை மட்டுமே குறிக்கும் ஒரு புதுப்பொருள் பெற்றுத் தனிச் சிறப்புற்றது.

நாவலரின் சொற்பொழிவைக் கேட்டுப் பிறமதத்தினர் சைவராயினர்; சைவர்கள் தம் குறைகளை உணர்ந்து நீக்கி உண்மையான சைவருக்குரிய நியமங்களை மேற்கொண்டனர்; தம் குற்றம் உணர்ந்து திருந்தி நற்குணம் பெற்றனர். நாவலர் தம் இறுதிவரை சொற்பொழிவாற்றும் நற்றொண்டை செய்து வந்தார்.

நாவலரின் சொற்பொழிவுகள் அனைத்தையும் எழுதி வைக்கும் சீரிய தொண்டை எவரும் மேற்கொள்ளவில்லை. எனினும் சில சொற்பொழிவுகளைக் குறித்து வைத்துள்ளனர். அவற்றைப் படித்துப் பார்க்கும்போதே நாவலரின் நுண்மாண் நுழைபுலம் நன்கு வெளிப்படுகிறது. சென்னை நகரில் இவர் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதியை இங்கே காண்போம்:

''நாமெல்லாம் சைவர்கள். சைவர் என்னும் சொற்குச் சிவனை வழிபடுவோர் என்பது பொருள்.

ஆகவே சிவனை வழிபடுவோர்யாவர், அவரெல்லாஞ் சைவரெனப்படுவர்.......... சிவபெருமான் புறத்தே சிவ லிங்கம் முதலிய திருமேனியும் தம் மெய்யடியாருடைய திருவேடமும் இடமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும்வழிபாட்டைக்கொண்டருளுவர்...சிவபெருமான் எங்கும் வியாபகமாய் நிற்பினும், சிவலிங்க முதலிய திருமேனியும் மெய்யடியார் திருவேடமுமாகிய இவ்விரண் டிடத்து மாத்திரமே தயிரில் நெய் போல விளங்கி நிற்பர். மற்றைய இடங்களிளெல்லாம் பாலில் நெய் போல் வெளிப்படாது நிற்பர்.''

நாவலரின் சொற்பொழிகள், அரிய உண்மைகளை எளிய முறையில் எத்திறத்தாரும் அறிந்து கொள்ளும் சிறப்புப் பெற்றிருந்தன என்பதை மேலே காட்டிய பகுதி நிறுவுகின்றது.

நாவலர் சைவ சமய வளர்ச்சிக்கான பல்வேறு பணி களை மேற்கொண்டார்.அவற்றில் ஒன்று கிருத்துவ மதக் கண்டனம். இவர் காலத்தில் கிருத்துவர்கள் இலங்கை யில் தம் மதத்தைப் பரப்பப் பெரும் முயற்சியில் ஈடு பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் சைவர்கள் அதிகம். அதனால் கிருத்துவர்கள் அங்கே தமது மதச் சிறப்பை எடுத்துரைப்பதைக் காட்டிலும் சைவசமயத்தை இகழ் வதிலேயே அதிகமாய் ஈடுபட்டனர்;சைவத்தை இகழ்ந்து சில நூல்களையும் பல துண்டுப் பிரசுரங்களையும் வெளி யிட்டனர். இவற்றில் மயங்கிய சைவர் சிலர் கிருத் துவத்தை மேற்கொள்ளவும் முன்வந்தனர். இவற்றைக் கண்டு நாவலரின் மனம் புண்பட்டது. கிருத்துவர்களின் போலிப் பிரச்சாரத்தை இவர் தம் சொற்பொழிவுகளில் வெளிப்படுத்தி, அம்மதத்தின் குறைகளையும் கறைகளை யும் விளக்கினார். காற்றிலே கலந்து மறைந்து போகும் பேச்சோடு நின்றுவிடாமல் எழுத்தாலும் கிறித்துவத்தை

எதிர்த்தார். பாதிரிமார்கள் சைவசமயத்தில் கண்ட குறைகள் யாவும் பைபிளில் தான் உள்ளன என எடுத்துக் காட்டி, சைவத்தின் செம்மையை நிறுவி, ''சைவ தூஷண பரிகாரம்'' என்னும் நூலை எழுதி வெளியிட்டார், நாவலர். சுப்பிரமணியனாகிய சைவர் தெய்வத்தைத் தூற்றிக் கிருத்துவர்கள் ஒரு நூல் வெளியிட்டனர். மறுப்பாக நாவலர் ''சுப்பிரபோதம்'' என்னும் நூலை நாவலர் எழுதினார். மற்றவர்களைக் கொண்டும் இத்தகைய கண்டன நூல்களையும் மறுப்பு நூல்களையும் நாவலர் எழுதச் செய்து, அவற்றை வெளியிடவும் துணை செய்தார். கிருத்துவர் சமயப் பிரச்சாரகர்களுக்கு நாவலர் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். இவரது கண்டனப் பணியால் கிருத்துவர் செல்வாக்கு மெல்லக் குறைந்தது. 'நாவலர் மட்டும் அப்போது கண்டனத் தொண்டை மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் யாழ்ப்பாணம் முழுவதும் கிருத்துவ நாடாக மாறிருக்கும்' என்று, இவர் பணியை நன்கறிந்த, யாழ்ப்பாணத்து நல்லூர் த. கைலாசபிள்ளை கூறுகிறார்.

பாதிரிமார்கள் தம் சமயப் பணிக்காகத் தனியே அச்சகம் வைத்துக் கொண்டு விரும்பிய நூல்களை விரைவாக அச்சிட்டு வெளியிட்டு வந்தனர். இதைக் கண்ட நாவலரும் தமது சமயப் பணிக்காக ஓர் அச்சுக் கூடம் நிறுவ விரும்பினார். 1849 இல் இவர் சென்னைக்குச் சென்று ஓர் அச்சுப்பொறி வாங்கிக் கொண்டு வந்து, ''வித்தியாநு பாலனயந்திரம்'' என்னும் பெயரிட்டு யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலே நிறுவினார். பின்னர் சென்னை நகரில் இதே பெயரில் ஒரு பெரிய அச்சுக்கூடம் நடத்தினார். இதன் மூலம் தாமே எழுதிய நூல்களையும் பிறர் நூல்களையும் பழைய இலக்கண இலக்கியங்களையும் வெளியிட்டார்.

ஆறுமுக நாவலர் பால பாடம் முதல் பண்டிதர்க்குரிய இலக்கண நூல்வரை பல உரைநடை நூல்களை எழுதி

யுள்ளார். பெரிய புராண வசனம் திருவிளையாடற் புராண வசனம், சிவாலய தரிசன விதி, சைவசமயசாரம், சைவ வினா விடை, இலக்கண வினா விடை, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதிநூல்களின் உரை முதலிய வற்றை நாவலர் எழுதி வெளியிட்டார். பொன்னுசாமி தேவரின் விருப்பப்படி, திருக்குறள் பரிமேலழகர் உரை, திருசிற்றம்பலம் கோவை உரை, சேது புராணம் முதலிய நூல்களை இவர் பார்வையிட்டுப் பரிசோதித்து வெளி யிட்டார். சி. வை. தாமோதரம்பிள்ளையின் விருப்பப் படி தொல்காப்பியம் சேனாவரையம் நூலை ஆராய்ந்து வெளியிட்டார்.

நாவலர் உரைநடை நூலாசிரியராகவும், உரை யாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், திகழ்ந்து செய்த தமிழ்த்தொண்டு சொல்லுக் கடங்காத பெருமை மிக்கது. எனினும் கவிதை நூல் எதையும் இவர் இயற்றவில்லை. நாவலர் நல்ல கவித்திறன் பெற்ற பாவலராகத் திகழ்ந்து பல சமயங்களில் தனிப் பாடல்கள் பல இயற்றியிருந்தும். கவிதை நூல் இயற்றாதது வியப்புக்குரியதே. ஒருமுறை நல்லூர் கைலாசப்பிள்ளையார் மீது ஒரு பாடல் இயற்று மாறு ஒரு நண்பர் இவரிடம் வேண்ட, நாவலர் உடனே பாடினார். அதன் ஒரு பகுதி வருமாறு :

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகரூப
செகதீச திருமங்களம்!
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த
திகழீச திருமங்களம்!
... ...
கார் கொண்ட கரடதட கயமுகவ வங்குசக்
கரராச திருமங்களம்!
கருணேச நல்லையங் கைலாச புரிவாச
கவினேறுகணராசனே

ஆறுமுக நாவலர் காலத்திலே தமிழகத்தில் அவதரித்து சமரச சன்மார்க்கத்தைப் பரப்பி வந்தார் வடலூர் இராமலிங்க வள்ளல். இவரைத் திருவருட்பிரகாச வள்ளலார் என்றும் இவர் பாடல்களின் தொகுதியைத் 'திருவருட்பா' என்றும் வழங்கி மகிழ்ந்தனர் தமிழ் பெருமக்கள். இராமலிங்கரைச் சமய குறவர்க்குச் சமமானவர் என்றும் திருவருட்பாவைத் தேவாரத்துக்கு நிகர் என்றும் அவர்கள் கூறிக் கொண்டாடினர். ஆறுமுக நாவலர் இவ்விரண்டையும் ஏற்காமல் எதிர்த் தெழுந்தது தமிழரின் தவக்குறைவால் நேர்ந்தது போலும். நாவலர் 'போலியருட்பா மறுப்பு' என்னும் நூலை எழுதி, இராமலிங்கர் சமயாசாரியர்க்குச் சம மல்லர் என்றும் அருட்பாதேவாரப் பாடல்களுக்கு சம மாகாது என்றும் வாதிட்டார். பின்னர், சிதம்பரத்துக் கோயிலில் நடந்த கூட்டத்தில் இராமலிங்கர் நாவலரை இகழ்ந்தார் என்று கூறி, நாவலர் இராமலிங்கர் மீது மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் ஒரு மான நட்ட ஈடு வழக்குத் தொடுத்தார். இவ்வழக்கு பற்றிய உண்மை களைத் தருந்த சான்றுகளைக் கண்ட பின்பு துமிலன் என்னும் எழுத்தாளர் குமுதம் வார இதழில் எழுதினார். அதன் மூலம் வழக்குத் தள்ளப்பட்ட து என்றும், தமிழ்ச் சான்றோரான நாவலரும் வள்ளலாரும் மாசு மருவற்ற மனத்தினர் என்றும், சீடர்கள் நடத்திய நாடகமே அவ்வழக்கு என்றும் அறிய முடிகிறது. நாவலரின் புகழ் இன்றும் நின்று நிலவுகிறது. வள்ளலாரும் சமய குறவர்க்குச் சமமாக இன்றும் ஏற்றிப் போற்றப் படுகிறார்.

சைவமும் தமிழும் தம்மிரு விழிகளாகக் கொண்ட நாவலர் 1879ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபத் தோராம் நாள் சிவபெருமான் திருவடியை அடைந்தார். இவரது மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாயிற்று.

இவர் மறைவால், ''வேதம் வலி குன்றியது; மேதகு சிவாகம விதங்கள் வலி குன்றின. மூவறு புராணம் வலி குன்றியது. சைவ சமயப் போதம் வலி குன்றியது'' என்று சி. வை. தாமோதரம் பிள்ளை இரங்கிக் கவிபாடினார்.

நாவலர், செந்தமிழ்ப் பாவலர்; சைவ சமயத்தின் காவலர். இவர் புகழைப் படித்தாலும் கேட்டாலும் நினைத்தாலும் உரைத்தாலும் நற்பயன் விளையும் என்பதில் ஐயமேது!

12. பெ. சுந்தரம் பிள்ளை

'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று பிள்ளையாரை வேண்டினார், அவ்வையார். முச்சங்கத்தால் வளர்க்கப் பட்ட தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரி வினை உடையது. சங்க காலத்தில் முப்பிரிவும் சிறந்து ஒவ்வொரு பிரிவும் பல இலக்கண இலக்கியங்களைப் பெற்றுத் திகழ்ந்தன. இருபதாம் நூற்றாண்டின் தொடக் கத்தில் இயற்றமிழ் மட்டுமே தழைக்கஏனைய இரண்டும் இருண்டன. நாடகத் தமிழுலகின் இருளைப் போக்கும் ஒரு சுடராக உதித்தவரே, பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை. அவர் இயற்றிய 'மனோன் மணீயம்' என்னும் நாடக நூலே, காளிதாசன் நாடகங்களுக்கும் ஷேக்ஸ்பியர் நாடகங்களுக்கும் சிறிதும் தாழாத உயர்வுடையதாய் இன்றும் மக்களின் பேராதரவைப் பெற்றுத் திகழ்கிறது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சேரநாட்டிலே பிறந் தவர். இவர் பிறந்த ஊர், துறைமுகப் பட்டினமான ஆலப்புழை. இவர் வாழ்க்கையின் பெரும்பகுதி சேர நாட்டிலேயே கழிந்தது. அதனால்தான், ''அடியேன், கடையேன், அறியாச்சிறியேன், கொடுமலையாளக் குடி யிருப்புடையேன்'' என்று தம்மைப் பற்றித் தமிழ்த் தெய்வ வணக்கத்தில் குறிப்பிட்டுக் கொண்டார். 1855 ஆம் ஆண்டு, பங்குனித் திங்கள் 28 ஆம்நாள் இவர் பிறந் தார். தாயார் பெயர் மாடத்தி. தந்தையார் பெயர்

பெருமாள் பிள்ளை. தந்தையர் கடவுள் பக்தி மிக்கவர். பல்லாண்டுகளாக மகப்பேறின்றி மனங்கவன்ற பெருமாள் பிள்ளை மதுரையில் கோயில் கொண்ட தம் குல தெய்வமான சோமசுந்தரக் கடவுளை வேண்டினார். அதன் பின்னர் பிறந்தமையால், இவருக்கு இறைவன் திருப் பெயரைச் சுருக்கி சுந்தரம் எனப் பெயரிட்டார்.

சுந்தரம் பிள்ளையை ஆலப்புழையிலேயே ஒரு பள்ளியில் சேர்த்தார் தந்தையார், அவர் தம் மகனுக்குக் கிடைக்கும் பள்ளிக்கல்வி மட்டும் போதும் எனக் கருதாமல், தமிழ் இலக்கியங்களையும் தேவாரம் திருவாசகம் முதலியபக்தி நூல்களையும் தாமே கற்பித்தார், இதனால் இவர் தம் பன்னிரண்டம் வயதிலேயே தமிழ்ப் புலமை பெற்றவரானார். பின்னர் ஆங்கிலப் பள்ளியிலும் கல்லூரியிலும் கற்று இளங்கலைப் பட்டம் பெற்றார்.

சுந்தரம் பிள்ளை இளங்கலைத் தேர்வில் திருவனந்தபுரத்திலே முதன்மை பெற்றார், அப்பொழுதைய அகன்ற சென்னை மாநிலத்தில் நான்காம் இடம் பெற்றார், பின்னர் இவர் முதுகலைப் பட்டமும் பெற்றார். இவர் கற்ற திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியின் முதல்வர் ராஸ் என்பவர் இவர் தகுதியை உணர்ந்து தம் கல்லூரியில் ஆசிரியராக அமர்த்தி, வரலாறும் தத்துவமும் கற்பிக்கச் செய்தார். பின்னர் இந்த ராஸ் துரையின் பரிந்துரையினால் திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்ப் பள்ளிக்குத் தலைவராகி அப்பள்ளியைக் கல்லூரியாக உயர்த்தினார் சுந்தரம் பிள்ளை. மீண்டும் 1885 ஆம் ஆண்டு தாம் பயின்ற அதே கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப்பதவியேற்றார். இதற்குத் துணை செய்தவர் அப்போது கல்லூரி முதல்வராகப் பொறுப்பேற்ற சுந்தரம் பிள்ளையின் ஆசானான டாக்டர் ஹார்வி அவர்களே. சுந்தரம் பிள்ளை தம் இறுதிக் காலம் வரை

இங்கேயே பணி செய்தார், டாக்டர் ஹார்வி அவர்கள் தமக்குச் செய்த பேருதவியை மறக்காமல் பின்னே தாம் இயற்றிய 'மனோன்மணீயம்' நாடகத்தை அவருக்குக் காணிக்கையாக்கினார்.

சுந்தரம் பிள்ளை தொண்டுள்ளம் கொண்டவர். அதனால் இசைப்புலவர் இலக்குமணப் பிள்ளையின் தந்தையான வலிய மேலெழுத்து திரவியம் பிள்ளை முதலிய நண்பர்களுடன் சேர்ந்து, 'சைவப் பிரகாச சபை' ஒன்றை நிறுவினார். இச்சபை சமயத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றியது. இச்சபைக்கு ஒரு கட்டடம் கட்ட இவர் ஐந்நூறு ரூபாய் நன்கொடை அளித்தார். அக்காலத்தில் ஓர் ஆசிரியருக்கு இது பெருந் தொகையாகும். இது போன்ற நன்கொடையினால் எழுந்த கட்டடம் இன்றும் திருவனந்தபுரத்தில் நின்று நிலவுகிறது.

சுந்தரம் பிள்ளை தமிழ்த் தாய்க்குப் புதிய அணிகளை அணிவிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டார். அதன் விளைவாய் மனோன்மணீயம் என்னும் செய்யுள் நாடகமும் நூற்றொகை விளக்கம் என்னும் உரைநடை நூலும் எழுதினார். உரைநடை நூல் 1888 இலும் நாடகம் 1891 இலும் வெளிவந்தன. சுந்தரம் பிள்ளை வரலாற்றாராய்ச்சியிலும் ஈடுபட்டார். ஞான சம்பந்தர் காலவாராய்ச்சி, திருவிதாங்கூர் பண்டை மன்னர் காலவாராய்ச்சி முதலிய ஆங்கில ஆய்வுக் கட்டுரைகளை எழுதி, சென்னைக் கிருத்துவக் கல்லூரியின் பத்திரிகையில் வெளியிட்டார். இவை பின்னே நூல்வடிவமும் பெற்றன.

சுந்தரம் பிள்ளையின் ஆற்றலைக் கண்ட சென்னை மாநில ஆளுநரான சர். எர். ஏ. கிராண்ட் டப் என்பார் பரிந்துரை செய்ய இவர் இலண்டனில் உள்ள வரலாற்

றாராய்ச்சிக் கழகத்தாலும் (Royal Historical Society) ஆசிய ஆராய்ச்சிக் கழகத்தாலும் (Royal Asiatic Society) சிறப்பிக்கப்பட்டார், சென்னை அரசாங்கம் 1866ஆம் ஆண்டு இவருக்கு 'ராய் பகதூர்' என்னும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது சென்னைப் பல்கலைக் கழகமும் இவரை ஓர் உறுப்பினராக ஏற்றுக் கொண்டது.

சுந்தரம் பிள்ளை திருநெல்வேலியில் பணியாற்றிய போது கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்னும் சமயச் சான்றோரைச் சந்தித்து அவருடைய மாணவ ரானார். அதனால் தமது மனோன்மணீய நாடகத்தில் தம் குருவைச் சிறப்பிக்க ''சுந்தர முனிவர்' என்னும் பாத்திரத்தைப் படைத்தார். மேலும்''சுந்தர சுவாமிகள் இயற்றிய 'நிஜானந்த விலாசம்' என்னும் நூலை ஒரு நண்பருடன் சேர்ந்து அச்சிட்டு வெளியிட்டார். சுந்தரம் பிள்ளைக்கு மறைமலையடிகள் முதலான சான்றோர் பலர் நண்பராயிருந்தனர்.

சுந்தரம் பிள்ளை தம் இருபத்தோராம் வயதில் சிவகாமி என்னும் மங்கை நல்லாளை மணந்தார். அதன் பின்னர் இருபத்தோராண்டே இவ்வுலகில் வாழ்ந்தார். 1897 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 14 ஆம் நாள், தமது 42 ஆம் வயதில் இயற்கை யெய்தினார்.

தமிழர்க்குப் பழைய சொத்துப் போலச் சிறந்தஇலக் கியங்கள் இருப்பினும் புதிதாக சிலவற்றை அவ்வக் காலத்தார் இயற்ற வேண்டும் என்பது சுத்தரம் பிள்ளை யின் கருத்து. தமிழ்த் தொண்டை இதன் அடிப்படையில் இவர் இரண்டாகப் பிரித்தார். ''முதலாவது முன்னோ ராற் பொருட் சுவையும் சொற்சுவையும் பொலிய இயற் றப் பட்டிருக்கும் அருமையான நூல்களில் இறந்தவை யொழிய இனியும் இறவாது மறைந்து கிடப்பனவற்றை

வெளிக் கொணர்ந்து நிலைபெறச் செய்தலேயாம்... அருமையாகிய பூருவ நூல்களைப் பாதுகாத்துப்பயின்று வருதலாகிய முதற்கடமையோடு அவ்வழியே முயன்று அந்த அந்தக் காலநிலைக் கேற்றவாரே புது நூல்களை இயற்ற முயல்தல் தமிழ் நாடென்னும் உயர் குடியிற் பிறக்கும் ஒவ்வொரு தலைமுறையார்க்கும் உரித்தான இரண்டாம் கடமையாய் ஏற்படுகின்றது'' என்று கூறு கிறார் பிள்ளை.

மேற்கூறிய இரு கடமைகளுள் இரண்டாவதை இவர் மேற்கொண்டு இயற்றியதே மனோன்மணீயம் என்னும் மகத்தான நாடகம். லிட்டன் பிரபு என்பவர் ஆங்கிலத் தில் எழுதிய இரகசிய வழி (The secret way) என்பதைத் தழுவி எழுதப்பட்டதே இந்நாடகம். நாடகத்துள் இடம் பெற்றுள்ள 'சிவகாமி சரிதம்' என்னும் கதைப்பாடலும் ஆலிவர் கோல்ட்ஸ்மித் எழுதிய The Vieor of Wakefield என்னும் நூலில் A Ballad என்னும் தலைப்பில் உள்ள கதையைத் தழுவியதே. தழுவல் நாடகமாயினும் பிள்ளை யின் கவித்திறனால் இது விழுமிய நாடகமாக இன்றள வும் விளங்குகிறது.

நாடகத்தின் தொடக்கமாகிய தமிழ்த் தெய்வ வணக்கம் நம் நெஞ்சைத் தொட்டு விடுகிறது. நூலுக்குப் புறத்தே அமைந்த பாயிரமே இவ்வணக்கம். எனினும் நூலின் உட்பொருளைக்காட்டிலும் உயர்ந்த புகழ் பெற்று விட்டது. தமிழ்த்தாயின் சிறப்பைச் சுந்தரம் பிள்ளை சொல்வதைக் கேட்கும் தமிழர் உள்ளம் சொக்கி விடுதல் உறுதி.

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!

இத் தமிழ்த் தெய்வ வணக்கத்தின் சிறப்பை அறிந்தே, மொழியை விழியாய்—உயிராய்க் கருதும் திராவிட இயக்கத்தினர் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, இதனையே அரசாங்க நிகழ்ச்சிகளிலும் அரசு அலுவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளிலும் கடவுள் வாழ்த்தாகப் பாடவேண்டும் என்று- ஆணை பிறப்பித்தனர். இன்று 'நீராரும்' எனத் தொடங்கும் சீரார்ந்த இப் பாடலைக் கோடிக் கணக்கானவர் பாடியும் கேட்டும் மகிழ்கின்றனர். சங்கப் புலவர்க்கும் திருவள்ளுவர்க்கும் கிடைக்காத இப்பேற்றைச் சுந்தரம் பிள்ளைப் பெற்றுள்ளார், என்பதினும் வேறோர் சிறப்பும் வேண்டுமோ?

நூலுக்குள்ளே வரும் ஜீவகனின் வீரவுரை நாடகத்துக்கே ஜீவனாகத் திகழ்கிறது.

போர்க்குறிக் காயமே புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும்? ஆ! ஆ! நோக்குமின்!
அனந்தம் தலைமுறை வருந்தனி மாக்கள்
தினந்தினம் தாமனு பவிக்கும் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்
என்றால் அப்புண் இரந்துகோள் தக்கது அன்றோ?

என்று ஜீவகன் கூறும் உரையைப் படிக்கும் கோழைகளும் வீரராவர்.

'முனிவர் என்பவர் எவர்?' என்பதற்குச் சுந்தரம் பிள்ளை தம் நாடக நாயகியான மனோன்மணி என்னும் பருவப் பெண் மூலம் விடையளிக்கிறார்.

தந்தைதா யாதியா வந்ததன் குடும்ப
பந்தபா ரத்தினைப் பேணித் தனது
சொந்தமாம் இச்சைகள் துறந்துமற் றவர்க்கு
எந்தநா ளும்சுகம் இயைந்திடக் கடமையின்
மூந்துகின் றவரே முதற்றவ முனிவர்.

தன் காதலைத் துறந்து தந்தையின் சொல்லுக்காக ஒரு பேதையை மணக்கச் சம்மதித்த நிலையில் மனோன்மணி கூறும் இந்த உரை, நம் நாட்டுப் பெண்களின் பண்பை வெளிப்படுத்துகிறது. பெற்றோர் சொல்படி திருமணம் செய்து கொள்ள இணங்கித் தம் காதலைக் கைவிட்ட ஆயிரக்கணக்கான அரிவையர், உண்மையில் வீரமற்ற-விவேகமற்ற அபலையர் அல்லர்; அவர் தமக் கென வாழாமல் தம்மைப் பெற்று வளர்த்த பெரிய வர்க்காக வாழும் முதற்றவ முனிவர் என்பதை பிள்ளை இதன் மூலம் விளக்குகிறார்.

காதல் இயல்பால் பிறப்பதே அன்றி ஏற்பாடு களால் உண்டாக்கப்படுவது அன்று. இந்தப் பேருண் மையை வாணி என்னும் புதுமைப் பெண் மூலம் சுந்தரம் பிள்ளை கூறுகிறார்:

இகத்துள சுகத்திற்கு அளவுகோ லாகிப்
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்
இல்லறம் என்பதின் நல்லுயி ரேயாய்
நின்ற காதலின் நிலைமை நினையில்

இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பாய் உருகி
ஒன்றாம் தன்மை அன்றி ஒருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ?

நாடகத்தின் பலவரிகள் பழமொழி போலப்பொருள் பொதிந்ததாய், படித்ததும் நினைவில் பதிந்து விடுவன வாய்ச் சுருக்கமாகவும் சுவைமிக்கதாகவும் அமைந் துள்ளன:

'முனிவரே ஆயினும் மனிதரே மீண்டும்'
'நேசமில் வதுவை நாசகா ரணமே'
'பிடித்தால் கற்றை! விட்டால் கூளம்!'
'நம்பல்என் பதுவே அன்பின் நிலைமை'
'சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று'
'இப்படை தோற்கின், எப்படை ஜயிக்கும்?'
'ஒருவனோ அலதிவ் உலகமோ பெரிது?'

'மனோன்மணீயம்' நாடக நூல் காதலின் மேன் மையை அன்பின் திண்மையை அறிவிக்கும் நூலாகும். பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும் ''மனோன்மணீயம் ஓர் அன்பு நூல். அன்பின் பலவகை விளக்கங்களையும் உலகில் உள்ளபடி நேரே அறிவிக்கும் நூல் இதுவே ஆம்'' என்று உரைக்கிறார். இந்நாடக நூலைத் தமிழ்த் தாயின் 'கணைக் காற்கு ஒள்ளிய சிறு விரல் அணியாகத் தாம் அணிவித்ததாக அடக்கத்தோடு கூறிக்கொள்கிறார் சுந்தரம் பிள்ளை. உண்மையில் இக் கால் விரல் அணியே, நாடகத்தமிழின் மணி முடியாக விளங்குகிறது. இதன் மூலம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் தமிழர் நெஞ்சங்களில் நீங்காத இடத்தை நிலையாகப் பெற்றுவிட்டார்.